# பெரியாருக்கு எதிரான ‘முனை மழுங்கும்’ வாதங்கள்

**பெரியாரின் தனிநாடு கோரிக்கை: புரோகித மறுப்பு:**
**இந்தி எதிர்ப்புப் போராட்டங்களை முன் வைத்து ஒரு விவாதம்**


## கொளத்தூர் மணி



**வெளியீடு:**

**திராவிடர் விடுதலைக் கழகம்**

95, டாக்டர் நடேசன் சாலை
அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.
தொடர்புக்கு : 9941613535 / 044-24980745

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | பெரியாருக்கு எதிரான<br>முனை மழுங்கும் வாதங்கள் |
| நூலாசிரியர் | : | கொளத்தூர் மணி |
| பதிப்பு | : | முதற் பதிப்பு |
| உரிமை | : | நூலாசிரியருக்கு |
| தாள் | : | வெள்ளைத்தாள் |
| அச்சு எழுத்து | : | 11 புள்ளி |
| நூலின் அமைப்பு | : | டெம்மி |
| பக்கங்கள் | : | 80 |
| படிகள் | : | 2000 |
| ஒளியச்சு | : | வெல்கின் கணினி மையம்<br>சென்னை-41.<br>செல்: 94445 35771 |
| அச்சிட்டோர் | : | BS கிராபிக்ஸ்<br>சென்னை-600 014 |
| விலை | : | ரூ. 50 |

## இளைஞர்களுக்கு இது ஓர் வரலாற்று ஆவணம்

தமிழகத்தின் - சமூக, அரசியல் தளத்திலிருந்து பெரியாரைக் கடத்திடும் முயற்சிகள் திட்டமிட்டு நடக்கின்றன. பெரியார் முன் வைத்த 'திராவிடர்' கோட்டுபாடுதான் தமிழினத்தின் வீழ்ச்சிக்கு வித்திட்டது போல் தொடர்ந்து இயக்கங்கள் நடத்துகிறார்கள். வரலாற்றை திசை திருப்பும் இந்த வாதங்களுக்கு வலிமையான எதிர்வினைகள் முன்வைக்கப்பட்டுவிட்டன. என்றாலும் கள்ள மவுனத்தின் வழியாகவே அதைக் கடக்க முயற்சிக்கிறார்கள். அதே போன்று, தனித் தமிழ்நாடு கோரிக்கை, புரோகித எதிர்ப்பு - இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள், ஏதோ சைவத் தமிழ் அறிஞர்களால் முன்னெடுக்கப்பட்டதாகவும் பெரியார் - பிறகு, அதை தன் வசமாக்கிக் கொண்டதாகவும் எந்த வலுவான ஆதாரங்களும் இல்லாமல், தமிழ்த் தேச பொதுவுடைமை கட்சித் தலைவர் தோழர் மணியரசன் பேசி, பிறகு தனது "தமிழ்த் தேசிய தமிழர் கண்ணோட்ட"த்திலும் பதிவு செய்தார். இளைய சமுதாயத்துக்கு உண்மை வரலாறுகளை எடுத்துரைக்க வேண்டியவர்களே பெரியாரை குறை காணும் நோக்கோடு வரலாற்றின் குற்றக் கூண்டுக்குள் பெரியாரை நிறுத்தி வைக்க துடிப்பது, உண்மையாகவே ஒரு அவலம் தான்! ஒரு வகையில்

இப்படிப் பெரியாரைப் பழி தூற்றுவதுகூட உண்மைகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் ஒரு நல்ல வாய்ப்பாகவே நாம் கருதுகிறோம். எதிர்ப்புகளின் வழியாகவே கொள்கைகளைப் பரப்பியது தானே பெரியாரின் அணுகுமுறையே!

தோழர் மணியரசன் முன் வைத்த வாதங்களுக்கு, 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வார ஏட்டில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி, 'கண்டதைப் படிப்பவன்' என்ற புனைப் பெயரில் தொடராக எழுதிய மறுப்புக் கட்டுரைகளே இந்த நூல். கட்டுரைத் தொடர் வெளிவந்து கொண்டிருக்கும் போதே இது நூல் வடிவம் பெற வேண்டும் என்று தோழர்கள் பலரும் ஆர்வத்துடன் வலியுறுத்தினர். இதை தோழர் மணியரசன் கருத்துகளுக்கு எதிர்வினை என்ற எல்லையோடு சுருக்கிவிட முடியாது. அதையும் கடந்து, பெரியார் இயக்கத்தின் வரலாற்றுச் சுவடுகளை விரிவாகவும் துல்லியமாகவும் தரவுகளோடு பதிவு செய்கிறது இந்த நூல். சமுதாய விடுதலையில் ஆர்வமும் துடிப்பும் கொண்டுள்ள இளைய சமுதாயத்தினருக்கு வரலாற்றுக் கையேடாக விளங்கிடும் இந்த ஆவணத்தை பரப்பிடுதல் காலத்தின் தேவையாகும்.

**– விடுதலை இராசேந்திரன்**

**இந்நூல் வெளியீட்டில் பேரார்வம் காட்டி, பொருள் உதவியும் செய்த சீரிய பெரியாரியலாளர் மதுரை மருத்துவர் அ. சவுந்தரபாண்டியன், எம்.பி.பி.எஸ்., டி.டி. அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.**

## ஆதாரங்களற்ற திறனாய்வு

கொஞ்ச காலமாகவே பெரியார் மீது பல்வகை திறனாய்வுக் கணைகள் தொடர்ந்து வீசப்பட்டு வருகின்றன. தூற்றுதலாக இல்லாமல் திறனாய்வாக வந்தால் வரவேற்க வேண்டியது தான்; திறனாய்வு உள்நோக்கமின்றி வந்தால் வரவேற்க வேண்டியது தான்; உள்நோக்கத்தோடு வந்தாலும் ஆதாரத்தோடு இருந்தால் வரவேற்கவேண்டியது தான்.

என்ன காரணத்தாலோ, பெரியாருக்குத் தமிழ்ச் சமூகம் அளித்து வந்துள்ள இடத்திலிருந்து அவரைப் பலவந்தமாக, தந்திரமாக, சூழ்ச்சியாக - எப்படியாவது இறக்கிட வேண்டுமென பலர் முயற்சியாய் முயற்சிக்கின்றனர்; பலபட எழுதுகின்றனர்.

அவற்றில் ஒன்றாக, "தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்" இதழில் 2014 மே -15 இதழில் ஒரு பதிவினைப் படித்தேன்; தோழர் பெ.மணியரசன், தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றத்தில் 19-04-2014 அன்று நடந்த 5ஆவது உலகத் தமிழ்ப் பொது மாநாட்டில் ஆற்றிய உரையே அது.

அவ்வுரையில் தோழர் மணியரசன் மூன்று செய்திகளை முன்வைக்கிறார்.

1. "1916ஆம் ஆண்டு மறைமலை அடிகள் தொடங்கிய 'தனித் தமிழ் இயக்கம்' தமிழர் வாழ்வியல், சடங்குகள் ஆகியவற்றிலிருந்து சமஸ்கிருதத்தையும், ஆரியப் புரோகிதர்களையும் நீக்குவதையும் வலியுறுத்துகிறது. தமிழில், தமிழர்களைக் கொண்டு குடும்பச் சடங்கு களையும், ஆன்மீக நிகழ்வுகளையும் நிகழ்த்திக் கொள்ள வேண்டும் என்று மறைமலை அடிகள் வலியுறுத்தினார்.

அரசியல் இயக்கங்கள் செயல்படும் காலம் வந்த பின், பெரியார் பார்ப்பனிய எதிர்ப்பைப் பெரும் வீச்சில் கொண்டு சென்றார். பட்டி தொட்டி எங்கும் பார்ப்பனிய ஆதிக்க எதிர்ப்பு பரவியது. இதற்கெல்லாம் முன்னோடியாக, அடித்தளம் அமைத்தோர்களாக தமிழரறிஞர்கள் இருந்தார்கள் என்பதை இன்றையத் தமிழுணர்வாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.''

2. ''தனித் தமிழ்நாட்டிற்கான முதற்குரல் கொடுத்தவர்கள் தமிழறிஞர்கள். இக்குரல் அறிஞர்கள் குரலாக மட்டும் சுருங்கி விடாமல், அதனை மக்கள் குரலாக பரப்பியவர் பெரியார்.''

3. ''1937இல் சென்னை மாகாண முதலமைச்சராக ஆனவுடன் இராஜாஜி 1938இல் ஒரு பகுதி பள்ளிக்கூடங்களில் வெள்ளோட்டமாக இந்தியைக் கட்டாயப் பாடமொழி ஆக்கினார் (இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார் என்பதே சரி) அந்த இந்தித் திணிப்பைத் தமிழறிஞர்கள் எதிர்த்தனர். இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் பெரியார் கலந்து கொண்டு முன்னெடுத்த பின் அது பெரும் வீச்சைப் பெற்றது.''

டும்.. டும்.. டும்.. இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால், பார்ப்பன விலக்கானாலும், சமற்கிருத விலக்கானா லும், இந்தி எதிர்ப்பானாலும், தனித் தமிழ் நாடானாலும் தமிழறிஞர்களே முன்னோடி; பெரியார் பின்னோடியேதான். டும்... டும்... டும்...

## மணவிழாவில் பார்ப்பன விலக்கில் தமிழறிஞர்கள்

1916இல் ‘தனித் தமிழ் இயக்கம்’ தோன்றிய காலத்திலேயே பார்ப்பன விலக்கை அதாவது மணியரசனார் மொழியில் ஆரியப் புரோகிதர் விலக்கு தொடங்கிவிட்டது என்பது உண்மையா?

வாழ்வியல் நிகழ்வுகளில் முதலில் பார்ப்பன புரோகிதர்கள் நீக்கம், பின்னர் சமற்கிருத மந்திரங்கள் நீக்கம் என்பதாக பெரியார் தொடங்கியது 1926இல் தான்; அப்படித் தான் அவரது ‘குடிஅரசு’ ஏட்டுப் பதிவுகளும் கூறுகின்றன. ஆனால் 1916லேயே தனித்தமிழ் இயக்கம் தொடங்கிய காலத்திலேயே தொடங்கிவிட்டது என்கிறார் தோழர் மணியரசன்.

ஆனால் ‘குடிஅரசு’ ஏட்டின் 11-9-1927 நாளிட்ட இதழில் ‘நெற்றிக் கண்ணை காட்டினாலும் குற்றம் குற்றமே!’ என்ற தலைப்பில் சிறு குறிப்புரை

ஒன்று வெளியாகியுள்ளது. ‘‘சுவாமி வேதாச்சலம் அவர்கள் (மறைமலை அடிகள்) அருமை குமார்த்த்திக்கும் நமது நண்பர் திருவரங்கம் பிள்ளை அவர்களுக்கும் நடந்தேறிய திருமணச் சடங்கானது தமிழ் மக்களையே குழப்பத்தில் கொண்டுவந்து விட்டது’’ என்று தொடங்கும் அந்த குறிப்பு, அடிகளார் வீட்டுத் திருமணம், பார்ப்பனர்களை வைத்தே நடந்துள்ளதை சுட்டிக்காட்டுகிறது; ‘குடிஅரசு’ தரும் குறிப்பு இது.

‘‘சுவாமி வேதாச்சலம் அவர்களும், திருவாளர் கா.சுப்பிரமணியப் பிள்ளை அவர்களும் தமிழ் நாட்டிலேயே தமிழ் மக்களின் பழைய நாகரிக விஷயமாய் தக்க ஆராய்ச்சி உள்ளவர்கள். ஏனையவர்களை இவர்களுக்கு சமமானவர்கள் அல்லது இவர்களுக்கு அடுத்தவர்கள் என்று சொல்ல வேண்டுமேயல்லாமல் இவர்களுக்கு மீறினவர்கள் என்று சொல்ல முடியாது என்பது நமது அபிப்பிராயம். இப்படிப்பட்ட இரு ஞானபாஸ்கரர்கள் (அறிவுச் சுடர்கள்) கூடிச் செய்தத் திருமணம் பார்ப்பனீயத் திருமணமாய் நடந்தேறிற்றென்றால் மற்றவர்கள் எவ்வளவு தூரம் பார்ப்பனியத்திற்கு உயர்வு கொடுக்க மாட்டார்கள்! உயர்வு கொடுக்க விரும்பார்களா என்பதை யோசிக்கும்படி அவர்களுக்கே விட்டு விடுகிறேன். இதற்கு ஏதாவது தகுந்த சமாதானம் இவர்கள் சொல்லாத வரையில் திருத்த முடியாத குற்றமாவதோடு மக்களுக்குக் குழப்பமும் நமது முயற்சிக்கு இடையூறும் ஏற்படும் என்பதையும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்’’ என்று பெரியார் எழுதியுள்ளார்.

பெரியார் சுயமரியாதை இயக்கம் வாழ்வியல் நிகழ்வுகளில் புரோகிதர்களை நீக்க வேண்டும் என்ற இயக்கத்தைத் தொடங்கி நடத்திக் கொண்டிருக்கும்போது மறைமலை அடிகளார் தனது மகள் திருமணத்தைப் பார்ப்பனரை வைத்து (மணியரசன் மொழியில் ஆரிய புரோகிதர்களை வைத்து) நடத்தியிருக்கிறார். மறைமலை அடிகளாரின் இந்தச் செயல் ‘பார்ப்பன புரோகித விலக்கு’ இயக்கத்துக்கு பின்னடைவையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி விடாதா என்ற கவலையோடு பெரியார் சுட்டிக் காட்டுகிறார்.

இத் திருமணத்தின் மணப்பெண், மறைமலையடிகளின் (அவரது இயற்பெயர் வேதாச்சலம் ஆகும்) மூத்த மகள் நீலாம்பிகை ஆவார்.

மறைமலை அடிகளார் தனது மகளுக்குத்தேர்ந்தெடுத்த மணமகன் வ.திருவரங்கம்பிள்ளை. இவரும் இவரது உடன் பிறந்தாராகிய வ.சுப்பையா பிள்ளையும் தென்னிந்திய சைவ நூற்பதிப்புக் கழகத்தை உருவாக்கியவர்கள்.

'திராவிடன்' முதலிய ஏடுகள் சைவ சமயத்தைக் கண்டிக்கும் வியாசங்களை உடன்பட்டு வெளியிடுவதைக் கண்டித்ததோடு, அதனை எதிர்கொள்வதற்கான செயல் திட்டம் ஒன்றையும் முன்வைத்து, அச்செயல் திட்டத்திற்குத் தக்க வடிவம் கொடுப்பதற்குச் "சைவ மகாநாடு" ஒன்று கூட்டவேண்டுமென்று (அதாவது பெரியாரைக் கண்டித்து...) 25-9-1928 அன்று "சைவ மக்களுக்கும், சைவ மடாதிபதிகளுக்கும் ஓர் விண்ணப்பம்" வெளியிட்டனர் என்பது ஒரு தனி செய்தி.

'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்ற கட்டுரைக்கு பதிலாக அடுத்த வார 'குடிஅரசு' (18-9-1927) இதழில் (9 ஆம் பக்கத்தில்) 'திருவரங்கம் பிள்ளை திருமணம்' என்ற தலைப்பில் "ஒரு பொறுப்புள்ளவர் எழுதுவது" எனக் குறிப்பிட்டு சமாதானம் கூறும் ஒரு கடிதம் வெளியாகியுள்ளது.

மறைமலையடிகளார், பார்ப்பனர் புரோகிதரைத் தனது வீட்டுத் திருமணத்துக்கு அழைத்ததை நியாயப்படுத்தி, அந்தத் திருமணத்துக்குச் சென்று வந்த ஒருவர் தந்திருந்த விளக்கம் இது; அதையும் 'குடிஅரசு' ஏட்டில் பெரியார் வெளியிட்டுள்ளார். கோயில்கள் எல்லாம் தமிழர்களுக்கே உரிமையானவை; அந்தக் கோயிலில் பூசனை நடத்தும் பார்ப்பனப் புரோகிதர்கள் ஆதி சைவர்கள். அவர்களும் தமிழர்களின் ஒரு பகுதியினர் தான். அந்தக் கண்ணோட்டத்தோடுதான் மறைமலை அடிகளார் மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயில் பார்ப்பன அர்ச்சகரை அவர் ஆதி சைவர் (தமிழர்) என்பதாலும், தம்மிடம் பயின்ற மாணவர் என்பதாலும் திருமணத்தை நடத்தி வைக்க அழைத்திருக்கிறார். ஆனால் மற்றொரு சைவத் தமிழ் அறிஞரான கா.சுப்ரமணியம் பிள்ளைக்கு பார்ப்பனரை வைத்து திருமணம் நடத்துவதில் உடன்பாடு இல்லை. அவர் திருமணத்துக்கு நெல்லையிலிருந்து வந்து சேருவதற்குத் தாமதமாகி விட்டது. தாலி கட்டும் நேரத்தில்தான் வந்து சேர்ந்தார். முன் கூட்டியே வந்திருந்தால் தமது கருத்தை மறைமலையடிகளிடம் எடுத்துக் கூறியிருந்திருப்பார். அதே நேரத்தில், பார்ப்பனரை தமிழர்கள், ஆதி சைவர்கள் என்று மறைமறையடிகள் கருதுவதை கா.சுப்ரமணியப் பிள்ளை ஏற்கவில்லை. அவர்கள் தங்களைத் தமிழர்களாக ஒன்றிணைத்துச் செயலாற்றும் வரை இப்படி திருமணங்களுக்கு பார்ப்பனரை அழைப்பது தவறு என்பதே கா.சுப்ரமணியபிள்ளை கருத்து. அவரது ஒப்புதலுடனேயே இதை எழுதுகிறோம் என்று திருமணத்துக்கு சென்று வந்தவர் 'குடிஅரசு' பத்திரிகையில் சமாதானம் கூறுகிறார். 'குடிஅரசு' ஏட்டில் வெளிவந்த அந்த விளக்கம் இதோ:

"பண்டை நூலாராய்ச்சியால் தமிழர்க்கே கோயில்களுரியன வென்றும், ஆதி சைவக் குருக்கள் தமிழரின் ஒரு பகுதியார் என்று கருதியே மயிலைத் திருக்கோயில் (மயிலாப்பூர் கபாலீசுவர் கோயிலில்) பூசனை புரியும் தமது ஆதிசைவ மாணவரை தமது புதல்வி திருமணத்தின்போது ஒரு கருவியாக மறைமலை அடிகள் கொண்டார் என்று புரிந்து கொள்ள வேண்டும்" என்பதாக எழுதியிருப்பதோடு "நம்மவர் மணங்களை நம்மவர் வாயிலாகவே நடத்த வேண்டுமென்ற கருத்துக் கொண்ட திருவாளர் கா.சுப்பிர மணியம் பிள்ளை முதலியவர்கள் திருமங்கல நாண் பூட்டுஞ் சமயத்திலே தான் நெல்லையிலிருந்து வந்து அதனைக் கண்ணுற்றமையால் மறைமலை அடிகளுக்குத் தங்கள் கருத்தைத் தெரிவிக்க சமயம் வாய்க்கப் பெற்றிலர்.

ஆதி சைவ மரபினர் தமிழருடன் மனமியைந்து வந்து சேருவார்கள் என்பதற்கும் போதிய சான்றுகள் காணும் வரை இத்தவறு பிற திருமணங்களிலும் நிகழவொட்டாது செய்வது நமது கடமையென்று திருவாளர் கா.சுப்பிரமணிய பிள்ளை முதலியவர்கள் உணருகிறார்கள்" என இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது.

அதற்குக் கீழே ஆசிரியர் குறிப்பாக "திரு கா.சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள் சம்மதத்தின் பேரிலேயே இது பிரசுரிக்கப்பட்டது. எனவே, இது விஷயம் இத்துடன் முடிவு பெற்றது" என்று குறிப்பெழுதி இந்தப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார் பெரியார்.

நீலாம்பிகை-திருவரங்கம் பிள்ளை திருமணத்தைத் தொடர்ந்து பெரியார் - மறைமலை அடிகள் - கா.சுப்ரமணிய பிள்ளை (கா.சு.பிள்ளை) போன்றோரின் சந்திப்பொன்று 'திருமண முறை' குறித்து விரிவாக ஆராய நடந்துள்ளது. இது குறித்தப் பதிவொன்று 26-2-1928 நாளிட்ட 'குடிஅரசு' இதழில் (13ஆம் பக்கத்தில்) காணக் கிடக்கிறது. 'தமிழில் புரோகிதம் வேண்டும்' என்ற தலைப்பில் மதுரை அ.சொ.அருணாசலன் என்பவரால் அது எழுதப்பட்டிருக்கிறது.

அதில் "சென்னையில் சில மாதங்கட்கு முன்னால் இது விஷயமாக திருவாளர்கள் சிங்காரவேற் செட்டியார் அவர்கள், அட்வகேட் கா.சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், சுவாமி வேதாசலமவர்கள், திரு. கஜேந்திர முதலியாரவர்கள், ஈ.வெ. ராமசாமி நாய்க்கரவர்கள் எல்லோரும் கூடிப் பேசினார்களே ஒழிய இது சம்பந்தமாக முயற்சி எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை" என்று குறிப்பிட்டுள்ளதோடு "நமது இயக்கம் பலப்பட்டு புரோகிதத்தின் மூலம் பார்ப்பனர்களுக்குப் போகும்

பணத்தைத் தடுத்து, பார்ப்பனர்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமானால் புரோகிதத்தில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு அவசியம் தமிழில் வேண்டுவது இன்றியமையாதது என்பதே அடியேனது அபிப்பிராயம்” எனவும் எழுதியுள்ளார்.

ஆக, நீலாம்பிகை-திருவரங்கம்பிள்ளை ஆகியோரின் திருமணம் முடிந்த ஓரிரு மாத காலத்துக்குள் பெரியார்-மறைமலையடிகள்-கா.சு.பிள்ளை முதலியோரின் சந்திப்பு நிகழ்ந்துள்ளது. அதன்பின்னரும் கூட சைவர்களும், தனித் தமிழ் இயக்கத்தார் சார்பாகவும் ஆரியப் பார்ப்பன மறுப்பு, சமற்கிருத மறுப்பு குறித்த எந்த முன்னெடுப்பும் நிகழவில்லை என்பதையே இது காட்டுகிறதே தவிர தோழர் மணியரசன் கூறுவதைப் போல வழிகாட்டிகளாக அவர்கள் செயல்படவில்லை; தனித் தமிழ் இயக்கம் இந்த வகையில் எதுவும் செய்திடவில்லை என்பதே உண்மை.

அதன் பின்னர் 7-10-1928 நாளிட்ட குடிஅரசு இதழின் ‘சைவ சமயம்’ என்ற தலைப்பில் ஒரு தலையங்கத்தைப் பெரியார் எழுதியுள்ளார்.

அதில் சைவர்கள் சுயமரியாதை இயக்கத்தை ஒழிப்பதற்கு சைவர்கள் ‘தொடை’ தட்டிக் கிளம்பியுள்ளதை சுட்டிக்காட்டி, சைவம், வைணவம் உள்ளிட்ட மதங்களின் பொதுவான கடவுள்களும் கருத்துகளும் பார்ப்பனிய சார்புடையவையாக இருப்பதை ஆணித்தரமாக எடுத்துக் காட்டுகிறார்.

### சைவம் ‘பார்ப்பன புரோகிதத்தை’ மறுத்ததா?

‘புரோகிதர் விலக்கு’ பெரியாருக்கு முன்பே தொடங்கிவிட்டது என்று நிலைநாட்ட பெ.மணியரசன் செய்த ‘ஆராய்ச்சி’யை மறுத்து கீழ்க்கண்ட கருத்துகளை முன் வைத்தோம்.

முதலாவதாக ‘புரோதர் விலக்கை’ 1916இல் தொடங்கிய (?) மறைமலையடிகள் 1927இல் நடந்த அவர் மகளின் திருமணத்தை பார்ப்பன புரோகிதரை வைத்தே நடத்தினார். இரண்டாவதாக பார்ப்பனப் புரோகிதர்கள் என்பவர்களே ஆதித் தமிழர்கள்தான் என்பதே மறைமலை அடிகளின் கருத்து. ‘பார்ப்பன புரோகிதர்கள்’ ஆதித் தமிழர்கள் என்று கருதிய மறைமலை அடிகள், ‘புரோகித விலக்கு’ கொள்கை எப்படிப்பட்டதாக இருந்திருக்கும்? கா.சு.பிள்ளை போன்ற தமிழறிஞர்கள்கூட மறைமலை அடிகள் தனது வீட்டுத் திருமணத்தை பார்ப்பனரை வைத்து நடத்தியதை விரும்பவில்லை. மறைமலை அடிகள் மகள் திருமணம் முடிந்து ஓரிரு

மாதங்களுக்குப் பிறகு தமிழறிஞர்களைச் சந்தித்து ‘புரோகித விலக்கம்’ குறித்து விவாதித்து உள்ளனர்.

இந்தச் சந்திப்பு பற்றி ‘குடி அரசு’ இதழில் (26.12.1928) மதுரை அ.சொ. அருணாசலம் என்பவர் ‘தமிழில் புரோகிதம் வேண்டும்’ என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிடுகிறார். அதில் சிங்காரவேலர், கா.சு. பிள்ளை, மறைமலையடிகள், கஜேந்திர முதலியார், ஈ.வெ.ராமசாமி சந்தித்துப் பேசிய பிறகும் புரோகித விலக்குக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிடுவதோடு, இந்த முயற்சி வெற்றி பெற புரோகித நம்பிக்கையாளர்கள் வடமொழியைத் தவிர்த்து தமிழில் வேண்டுதல் செய்வது அவசியம். அதன் மூலம் புரோகிதர் கொள்ளையைத் தடுக்க முடியும் என்று வலியுறுத்துகிறார்.

இவ்வளவுக்கும் பிறகு புரோகித பார்ப்பன எதிர்ப்பை தீவிரமாக நடத்தி வந்த சுயமரியாதை இயக்கத்தை ஒழிப்பதற்கே இந்த “புரோகித எதிர்ப்பு வீரர்கள்” தொடை தட்டிக் கிளம்பினார்கள் என்பதை ‘சைவ சமயம்’ என்ற தலைப்பில் பெரியார், ‘குடிஅரசு’ இதழில் (7.10.1928) எழுதிய தலையங்கம் வெளிச்சப்படுத்துகிறது.

பெரியாரின் தலையங்கம் - சைவ மதக்காரர்களின் பார்ப்பன புரோகித எதிர்ப்பையே கேள்விக்குள்ளாக்குகிறது. பெரியார், அத் தலையங்கத்தில் அழுத்தமாக எழுப்பும் கேள்விகள் முன் வைக்கும் வாதங்கள் என்ன?

1. பார்ப்பன வேதம், பார்ப்பன புராணம், பார்ப்பன வேள்வி மற்றும் சங்கராச்சாரிகளை எதிர்ப்பதாகவும், அவற்றோடு தங்களுக்கு ஒட்டு உறவு கிடையாது என்றும் கூறும் சைவ சமயத்துக்காரர்கள், தங்கள் கடவுளான ‘சிவனு’க்குமட்டும் கந்த புராணம், சிவ மகாபுராணத்தி லிருந்து ஆதாரம் தேடுவது ஏன்?

2. இந்தப் புராணங்களை ஒதுக்கிவிட்டால், சைவத்தில் சிவனுக்கு ஏதாவது இடம் இருக்கிறது என்று கூற முடியுமா?

3. சைவம் உட்பட இந்து, வைணவக் கடவுள்களை எல்லாம் எடுத்துக் கொண்டால் அந்தக் கடவுள்கள் எல்லாம் தேவர்களின் யாகத்தை எதிர்த்து வந்த ‘அரக்கர்’களை அழித்தவர்கள் என்கிற அடிப்படை யில் சித்தரிக்கப்படுபவர்களாகவேத் தானே இருக்கிறார்கள்? தேவர்கள் யாகத்தைக் காப்பது என்ற ஒன்று மட்டுமே கடவுள் கோட்பாடாக இருப்பது ஏன்?

4. சைவ சமயத் தலைவர்கள் என்பவர்களும்கூட வேதங்களையும் யாகங்களையும் காப்பாற்றுவதற்கும் அவற்றை எதிர்த்தவர்களை அழிப்பதற்கும் தோன்றியவர்கள்தான் என்பதை மறுக்க முடியுமா?

5. வேதம், யாகம், அவற்றைக் காப்பாற்ற வந்த கடவுள்கள், ஆரியர்களால் புனையப்பட்ட புராணங்கள் இவற்றை ஒதுக்கி விட்டால் 'சைவம்' என்ற ஒன்றே வேறு இல்லை என்பதை மறுக்க முடியுமா?

6. தேவாரத்துக்கோ திருவாசகத்துக்கோ 'தமிழ் மறைக்கோ' சைவத்தில் எங்கேயாவது இடமிருக்கிறதா?

7. சைவம், ஆகமம், தேவாரம், திருவாசகம் என்ற வார்த்தைகளும் சைவக் கடவுள்களின் பெயர்களும் கடவுள்களின் மனைவி, பிள்ளைகளின் பெயர்களும் முழுதும் ஆரிய மொழியிலேயே இருப்பது ஏன்? அப்பெயர்களுக்குப் புனையப்படும் கதைகளும் புராணங்களும் பெரும்பாலும் ஆரிய மூலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டதாக இருப்பது ஏன்? - என்ற கேள்விகளை எழுப்பும் பெரியார் சமயம்-சைவம்-வைணவம் என்பவை பார்ப்பன ஆதிக்கத் துக்கு உழைக்கும் நிறுவனங்களாகவே இருக்கின்றன என்றும், இதை தெரிந்தோ, தெரியாமலோ துணைப் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்றும் எடுத்துக் காட்டுகிறார்.

தமிழ் மதம் எனக் கூறப்படும் சைவச் சமயத்தில் உள்ள ஆரியக் கூறுகளை விளக்கிக் கூறி தமிழர் மரபும், இந்து மதமும் - மரபு எது, மதம் எது என்று பிரித்துப் பார்க்க இயலாத வகையில் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன என்பதை பெரியார் விளக்கியுள்ளார்.

- இப்போது கூட 'முருகனை' தமிழ்க் கடவுளாகக் காட்ட சிலர் முனையும்போது சுப்பிரமணியன் வேறு முருகன் வேறு என்று பிரித்துக் காட்ட முடியாமலும், முன்னர் மனைவியாக இருந்த வள்ளி, ஆரிய ஊடுறுவலுக்குப் பின்னர் தெய்வானை என்ற சட்டபூர்வ மனைவிக்குப் பிறகு முருகனுக்கு வந்து சேர்ந்த வைப்பாட்டியாகத் தான் தமிழர் மனதில் ஆழ வேரூன்றியுள்ளார் என்பதையும் அறியமுடிகிறது.

- 'மாயோன்' என்பதில் மா என்ற சொல்லுக்குள்ள கருப்பு எனும் பொருளைக் கருதி திருமாலாக - கருமைநிறக் கண்ணனாக - விளக்குகிறார்கள். அந்த கண்ணன் எனும் தலைவனும் கூட

நப்பின்னை என்ற தலைவியைத்தான் இணையாகக் கொண்டிருந்ததாகக் கூறுகின்றன பழந்தமிழ் நூல்கள் சில. இப்போது கண்ணனும் கிருஷ்ணனும் கலந்து போயுள்ள சூழலில் தலைவிகளாக பாமா, ருக்குமணியையும், அதைவிட வேடிக்கையாக பிறன் மனைவியாகிய இராதாவையும்தான் கருதும் போக்குள்ளதே தவிர நப்பின்னையை நினைப்போர் ஒருவரும் இலர்.

- பரிபாடல் திருமுருகாற்றுப்படை போன்ற சங்க இலக்கியங்கள் கூற்றுப்படி முருகனுக்கு வயது 2000. ஆனால், 1300 ஆண்டுகளுக்கு முன்பு மட்டுமே அறிமுகமான ‘வினாயகன்’ எப்படி முருகனுக்கு அண்ணன் ஆனான்?

இப்படி ஆரியம் சைவத்தை விழுங்கியுள்ள நிலையில் ‘புரோகித விலக்கு’ கொள்கையில் தனித் தமிழ் இயக்கம் தான் பெரியாருக்கு முன்னோடி என்பது புரட்டல் வாதமல்லவா? அதுமட்டுமல்ல, ‘புரோகித’ எதிர்ப்பை முன்னெடுத்த பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தையே எதிர்த்தவர்கள் இந்த சைவர்கள்.

## ‘சுயமரியாதை சைவர்’கள்

மறைமலை அடிகள் போன்ற ‘தனித் தமிழ் இயக்கம்’ நடத்திய சைவர்களுக்கு எதிராக பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளையேற்று அவர் வழி நின்ற சுயமரியாதை ‘சைவர்’கள் இருந்தார்கள். அவர்கள் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் வழியில் புரோகித எதிர்ப்பு, ஜாதி எதிர்ப்பு, பெண்ணடிமை எதிர்ப்புக் கருத்துக்களை ஏற்று பரப்பி வந்தனர். இது எப்போது நடந்தது? தோழர் பெ. மணியரசன் கூறுவதுபோல் பெரியாருக்கு முன்னால் அல்ல; பெரியாருக்குப் பின்னர்தான் என்பது வரலாறு. இது குறித்து சில செய்திகளையும் பார்ப்போம்.

- 22.11.1925 அன்று காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் பார்ப்பனர்களின் கூடாரமாகி விட்டது; அதை ஒழிப்பதே இனி என் வேலை என்று கூறி பெரியார் அம் மாநாட்டிலிருந்து வெளியேறினார். அதைத் தொடர்ந்து முழுமையான சுயமரியாதைப் பரப்புரையே அவரது வேலைத் திட்டமானது.

- அப்போது பெரியாருடன் பார்ப்பன எதிர்ப்பு, ஜாதி எதிர்ப்பு, பெண்ணடிமை எதிர்ப்பு தளங்களில் முழுமையாகவும் பகுதியாகவும் செயல்பட்ட ‘சைவர்கள்’ பலருண்டு; வ.உ.சிதம்பரனார் (வ.உ.சி.),

சொ. முருகப்பா, கி.ஆ.பெ.விசுவநாதம், கே.எம்.பால சுப்பிரமணியம், மணி.திருநாவுக்கரசு முதலியார், கா.அப்பாதுரை என பலருண்டு.

- அவர்களில் வ.உ.சி அவர்கள் 1917 முதலே பார்ப்பனரல்லாத காங்கிரசாரால் நடத்தப்பட்ட சென்னை மாகாண சங்கத்தில் பெரியார், திரு.வி.க, வரதராசுலு நாயுடு ஆகியோரோடு இணைந்து பணியாற்றியவர். காஞ்சிபுரம் மாநாட்டுக்குப் பின்னர் 1925, 1926 ஆண்டுகளில் நீதிக்கட்சி மாநாடுகளிலும் கலந்துகொண்டு தனது பார்ப்பனரல்லாதார் ஆதரவுக் கருத்துகளை கூர்மையாக வெளிப்படுத்தியவர்.

- சுயமரியாதைப் பிரச்சார இயக்க நூலான "ஞான சூரியன்" என்ற நூலுக்கு அளித்துள்ள அணிந்துரையில் வ.உ.சி. தனது பார்ப்பன புரோகித எதிர்ப்பைக் கடுமையாக பதிவு செய்துள்ளார். "பிராமணப் புரோகிதர்களும், பூசாரிகளும் பிராமணரல்லாதவர்களுடைய பொருள்களைக் கவருவதற்காக தொன்று தொட்டுச் செய்து வரும் சூழ்ச்சிகளையும், மோசங்களையும், கொலைகளையும் எடுத்துக்கூறி பிராமணரல்லாதார்கள் இன்னும் பிராமணப் புரோகிதர்களையும், பூசாரிகளையும் விரும்புகின்றார்களா என அவன் (ஞான சூரியன்) வினவுகின்றான்.

இந்து சமயம் என்பதன் பொய்களையும், புரட்டுகளையும், ஆபாசங்களையும், அச்சமயப் பெயரால் செய்யப்படும் சடங்குகளின் வாயிலாக பிராமணரல்லாதார்கள் தாழ்த்தப்படுவதையும், அக்கொள்ளை களினின்றும், தாழ்வினின்றும் பிராமணரல்லாதார்கள் தப்புவதற்குரிய அவசியத்தையும், வழிகளையும் அவன் (ஞான சூரியன்) நன்கு விளக்குகின்றான்" என்றெல்லாம் 'ஞான சூரியன்' முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் 1927 ஆம் ஆண்டின் இறுதியில் தேவக்கோட்டையிலும், காரைக்குடி மாணவர் மன்றத்திலும், பிற இடங்களிலும் ஆற்றிய உரைகள், வ.உ.சி.யின் செட்டிநாட்டுச் சொற்பொழிவுகள் எனும் தலைப்பில் சுயமரியாதை இயக்கச் சார்பு ஏடான 'குமரன்' இதழில் 1928 ஜனவரி முதல் மார்ச் வரை தொடர்ச்சியாக வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றில் "மனு நீதி கண்ட சோழனைப் பற்றிக் கூறிய பொழுது, இப்பொழுதிருக்கும் மனு ஸ்மிருதியை நடத்திக் காட்டியமைக்காகவே

'மனு நீதி கண்ட சோழன்' என்று பெயர் வந்ததென்று பொருள்படும்படியே சேக்கிழார் கூறினாரென்று கூறினார்கள். அவர் அப்பொருட்படும்படி கூறியிருப்பாராயின் அவர் மனுஸ்மிருதியைப் படிக்கவில்லை என்று தான் கூற வேண்டும் எந்த நூலானாலும் குற்றமிருக்குமானால் அதனைத் தள்ளத் தயங்கக் கூடாது.... பிழையிருக்குமானால் வள்ளுவரல்ல, சிவபெருமானே யாகட்டும் யார் கூறினாலும் தள்ளவேண்டியது தான் . கடவுளே எழுதினார் என்று கூறப்படும் நூலிலும் பிழையிருக்குமானால் அதனையும் தள்ளவேண்டியது தான்.... வேதத்தில் பிழைகளிருக்கலாம் திருத்த வேண்டுவது தான். சைவத்திலும் அப்படியே தான். எந்த நூலில் பிழைகள் காணப்படுகின்றனவோ அவைகளைச் சீர்திருத்த வேண்டுவது இன்றியமையாததாகும் என்று வ.உ.சி. பேசியுள்ளார். (தேவகோட்டை மாணவர் சங்க ஆண்டு விழாச் சொற்பொழிவு குமரன் 26-1-1928)

திருவள்ளுவர் ஒரு கவி, ஒப்பற்ற அறிஞர். நானும் அவரைக் கடவுள் என்றே போற்றுகிறேன். அவர் நூலில் வாளென்றும், வில்லென்றும், வேல் என்றும் இருக்கின்றதேயன்றித் துப்பாக்கியென்றாவது, பீரங்கியென்றாவது இல்லை. இப்பொழுது யுத்தத்திற்கு சாதனங்களாக துப்பாக்கியும் பீரங்கியுமே இருக்கின்றன. யுத்தத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் நேரிடின் என் செய்வது? "வள்ளுவர் துப்பாக்கியைப் பற்றியும் பீரங்கியைப் பற்றியும் ஒன்றும் சொல்லவில்லை. எனவே அச்சாதனங்களைக் கொண்டு போர் புரிய மாட்டேன். வள்ளுவருக்கென்ன புத்தியில்லையா? அவரைக் காட்டிலும் நாம் என்ன மேதாவிகளாகிவிட்டோம் என்று ஒருவன் இப்போது கூறிக் கொண்டு இருப்பானானால் அது எவ்வளவு மூடத்தனமென்பதை நீங்கள் யோசித்துப் பாருங்கள்" என்று கூறும் வ.உ.சி., பார்ப்பன புரோகிதர் களுக்கு 'தட்சணை' தருவதை நிறுத்த வேண்டும் என்றும் பேசியுள்ளார்.

"தென்புலத்தார் கடன் ஒப்புதல்" என்பதற்கு "பிதுர்க்கடன் செய்தல்" என்றே பொருள் வைத்துக்கொள்வோம். அப்பொழுதும் குறிப்பிட்ட வகுப்பார்க்கு வெள்ளி லோட்டா, தங்கத் தட்டு ஆகியவைகள் கொடுக்க வேண்டுமென்று காணப்படவில்லையே... சபிண்டி, திதி முதலிய செய்ய வேண்டுமென்று சொன்னால், "ஐயா, அது எங்களப்பனுக்குப் போகாது. நாங்கள் இப்பொழுது விழித்துக் கொண்டோம்; இனி ஏமாற்ற முடியாது" என்று கூறிவிடுங்கள். கொசு யானையை விழுங்கி விட்டது என்று சொன்னால் இதை நம்ப முடியுமா?

நண்பர் தியாகராஜன் செட்டியார், மனைவியுடன் பர்மாவுக்கு சென்று வந்திருக்கிறார். இதற்காக அவரை ஜாதியை விட்டு விலக்க வேண்டுமென்று

சில இடங்களில் கூறப்படுகிறதாம். இது எவ்வளவு அறியாமை. மனைவியுடன் கப்பலேறிச் சென்றதற்காக ஒரு வகுப்பாருக்கு இரண்டாயிரம், மூவாயிரம் கொடுத்து பிராயசித்தம் செய்து கொள்வதா? பிராயசித்த மெல்லாம் நமக்குத் தான். அவர்களுக்கு வந்து விட்டால் "வேதப் பிரமாணமிருக்கிறது. அந்த நாயனார் அப்படிச் சொல்லியிருக்கிறார். இந்த நாயனார் இப்படிச் சொல்லியிருக்கிறார்" என்று கூறி விடுவார்கள் . பொதுக் கோயில்களில் அனைவருக்கும் சம உரிமை வேண்டும். லஞ்சம் வாங்காத நீதிபதியிடம் தரகர் வேண்டாம் ..." - என்று புரோகிதர்களுக்கு எதிராக சாட்டையை சுழற்றுகிறார். வ.உ.சி ஆற்றிய காரைக்குடிச் சொற்பொழிவு 'குமரன்' 15-3-1928 இதழில் வெளியாகியுள்ளது.

சுயமரியாதை இயக்கத்தின் குரலாகவே அவரது குரல் ஒலித்தன. ஆனால், பெ. மணியரசனார் உயர்த்திப் பிடிக்கும் முன்னோடி 'சைவம்' - இதற்காக வ.உ.சி.யைக் கடுமையாக சாடியது.

### சைவர்களின் முகமூடியாக...

எப்படி இந்து கலாச்சாரம், தேவ பாஷை சமஸ்கிருதம் என்பவற்றை பார்ப்பனர்கள் முகமூடி களாகப் பயன்படுத்துகிறார்களோ, அப்படித்தான் தமிழ்ப் பண்பாடு, தனித்தமிழ் என்பதும் சைவர்களுக்கான முகமூடியாகவே பயன்படுத்தப்பட்டது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். சைவர்கள் பார்ப்பனர்களை எதிர்த்தார்கள் என்பது உண்மை தான்; பார்ப்பனர் ஆதிக்கத்தை அவர்கள் எதிர்த்தார்களா என்றால் அதுதான் இல்லை. பார்ப்பனர்கள் இடத்தில் சைவர்கள் உட்கார்ந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் பார்ப்பனர்களை எதிர்த்தார்கள்.

வ.உ.சி.யின் கருத்துகளை கடுமையாக சாடி, 'அரங்கின்றி வட்டாடல்' என்ற தலைப்பில் பொ.முத்தையாபிள்ளை என்பவர் சைவ ஏடான 'சிவநேசன்' ஏட்டில் கட்டுரை எழுதினார். "முன்னோடி" சைவக் கூட்டத்தை, வ.உ.சி.யின் இந்த 'சுயமரியாதை முழக்கம்' ஆத்திரத்தின் விளிம்புக்குக் கொண்டு போய் நிறுத்தியது.

வ..உ.சி. பேசியது முழுமையான சுயமரியாதை இயக்கத்தின் கருத்து என்பதால் உடனே 'குடிஅரசு' ஏட்டில் மறைமலையடிகள் தனது மகள் திருமணத்தைப் பார்ப்பன புரோகிதர் வைத்து நடத்தியதைக் கண்டித்து எழுதியதுதான் - அந்த மறுப்புக் கட்டுரையாளருக்கு (முத்தையா பிள்ளைக்கு) நினைவுக்கு வந்து விட்டது. "நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம்

குற்றமே'' என்று 'குடிஅரசு' வெளியிட்ட தலைப்பை நினைவுகூர்ந்து, நக்கீரர் முழுமையான அறிவற்றவர் என்றும் ''சிவபெருமானை'' எதிர்த்ததால் கடும் துன்பத்தை அனுபவித்தவர் என்றும் நக்கீரனையே சாடுகிறார். இதோ பொ. முத்தையாபிள்ளை எழுதியது:

''இவர்கள் அனைவரும் நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமேயென்று நக்கீரர் கூறியதை அடிக்கடி எடுத்துக் கூறுகின்றனர். கல்வி நிரம்பாமையால் நக்கீரர் அங்ஙனங் கூறினாரென்பதையும் (அப்படி) கூறியதால், அவரது துன்பத்தையும் சிறிதும் எண்ணினார்களில்லை'' என்கிறார். அத்துடன் முடியவில்லை. வ.உ.சி. மீது அவர்கள் கோபம், இன்னும் மேலேபோய் பிரிட்டிஷாரை எதிர்த்து, வ.உ.சி. 'சுதேசி' கப்பல் விட்டதையே குறை கூறுகிறார். ''பிடிவாதத்தால் கப்பல் விடப்போய் அதனால் கிடைத்த தண்டனையிலிருந்து பாடம் கற்காதவர்; சர்வ வல்லமைமிக்க பிரிட்டிஷாரின் கட்டளையையே மதிக்காதவர். அதேபோல்தான், கடவுள் கட்டளை யானாலும் எதிர்க்க வேண்டும் என்று பேசுகிறார். இதற்கான துன்பத்தை அவர் அனுபவிப்பார்'' என்று 'சாபமிட்டு' அச்சுறுத்துகிறார் - இதோ அவரது கட்டுரையின் மற்றொரு பகுதி:

''இவர்கள் சுதேசிக் கலகத்தின்போது தூத்துக்குடியில் தனக்குத் தோன்றிய யுத்தியே சாலச் சிறந்ததெனக் கூறி ஆரவாரஞ் செய்து, அதனால் தானடைந்த பயனையும் மறந்து, உலகத்துள் ஒரு பகுதியிலும் அரசரையும் அவர் கட்டளையையும் மதியாமையால், சில நாள் மிகக் கடுந்துன்பம் அனுப வித்தவாறுபோல, சர்வலோக நாயகராகிய கடவுளையும், அவர் கட்டளையை யும் மதிக்க வில்லையாயின் நீண்டநாள் ஆற்றொணாத் துன்பத்தை யனுபவித்து வருந்துவார் என்பதையும் மறந்தமை வருந்தத்தக்கது''.

அதே நேரத்தில் 1926இல் 'புரோகிதர் நீக்கம்' என்ற முழக்கட்தோடு தொடங்கிய சுயமரியாதை இயக்கம், வடமொழி நீக்கம், நகை ஆடம்பரங்கள் நீக்கம், பட்டாடைகள் நீக்கம், அறிவுக்குப் பொருந்தாத சடங்குகள் நீக்கம், பெண்ணடிமை நீக்கம் என்று தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் முன்னேறிக் கொண்டே இருந்தது.

## பெண்ணுரிமைக்கு எதிராக வந்த 'தமிழ்த் திருமணம்'

28.5.1929இல் அருப்புக்கோட்டை அருகே சுக்கில நத்தத்தில் ஒரே மேடையில் 3 புரோகித மறுப்பு திருமணங்கள் நடந்தன. அது குறித்து 'குடிஅரசு' இதழில் வெளிவந்த செய்தி இது:

"சாதாரணமாய் அணிந்திருக்கும் நகையன்றி, திருமணத்துக்கென வேறு நகை எதுவுமின்றி, பட்டாடை விலக்கி, கதராடை அணிந்து (அதுவும் புத்தாடை அன்று. பெரியாரும் அதுவரை கதரை ஆதரித்துக் கொண்டுதான் இருந்தார்) ஒரு முழு சுயமரியாதைத் திருமணமாக அருப்புக்கோட்டை சுக்கிலநத்தத்தில் 28-5-1928 அன்று மூன்று திருமணங்கள் ஒரே மேடையில் நடந்தேறியது. அந்தத் திருமணத்தில் ஒரு வயதான மூதாட்டி குத்துவிளக்கு ஏற்ற நெருப்புக் குச்சியை உரைக்கும் போது, மணமகனின் தகப்பனாரான ஸ்ரீ துரைசாமி ரெட்டியார் எழுந்து "எதற்காக இங்கு விளக்குப் பற்ற வைக்கவேண்டும்? பகல் 11-00 நேரத்துக்கு இங்கு இருட்டாகவா இருக்கிறது? அனாவசியமாக அர்த்தமில்லாததைச் செய்யாதீர்கள்" என்று தடுத்து விட்டார். தவிர வேறெந்த சடங்கையும் வைத்துக் கொள்ளவில்லை. மற்றபடி ஒரே ஒரு சடங்கில்தான் எல்லோரும் ஈடுபட்டிருந்தார்கள். அதாவது பகல் 12 மணி முதல் இரவு 2-00 மணி வரையிலும் வந்திருந்த சுமார் 5000 பேருக்குக் குறையாமல் சோறுபோட்ட வண்ணமாக இருந்தார்கள்" (குடிஅரசு 3-6-1928 பக்12) அதுதான் குடிஅரசு குறிப்பிடும் அந்த ஒரே ஒரு சடங்கு.

அதே நாளில் 12-00 மணிக்கு மூன்றாவது திருமணத்தையும் நடத்தி முடித்துவிட்டு, மதுரைக்கு சென்று அங்கேயும் நண்பகல் 1-30 மணிக்கு மற்றொரு முழு சுயமரியாதைத் திருமணத்தை நடத்தி வைத்ததும் இதே காலகட்டத்தில் தான்.

இவற்றையெல்லாம்விட திருமணத்தை நிகழ்த்தி வைக்க வந்த பெரியாரை, மணமகள் இரத்தினம்மாள் (அவர் ஒரு தீவிர குடிஅரசு வாசகர்; சுயமரியாதைக் கொள்கையர்) "ஞானக் குணா நவ மணியே வருக" என்ற பாடலைப் பாடி வரவேற்றதும் (1928இல்) ஒரு கூடுதல் செய்தி.

மேலும் பெரியார் பெண் விடுதலைக்கு பிள்ளைப்பேறும் ஒரு தடையே என்ற அடிப்படையில் 'கர்ப்ப ஆட்சி' (இன்றைய குடும்பக் கட்டுப்பாட்டு முறை) குறித்து சுயமரியாதை திருமண மேடைகளில் 1928 இல் பேசத் தொடங்கியிருந்தார்.

ஆக, தனித் தமிழ் இயக்கம் பார்ப்பன, வடமொழி விலக்குத் திருமணங்களுக்கு முன்னோடியாக இல்லை என்பது மட்டுமல்ல; ஒரு சரியான பின்னோடி யாகவாவது இருந்தார்களா என்றால், அதுவும் இல்லை.

1937-1939 ஆம் ஆண்டுகளில் சுயமரியாதை இயக்கமும், தனித்தமிழ் (சைவ) இயக்கமும் இந்தி பார்ப்பனியம் என்ற பொது எதிரியை வீழ்த்தும் ஓரம்சத் திட்டத்தோடு இணைந்து செயல்பட்டனர். கருத்தியல் அடிப்படை என்றில்லாமல், நடைமுறை தந்திரத்தின்பாற்பட்டதாய் அமைந்தது அந்த கூட்டணி. இரண்டாம் உலகப் போரினால், காங்கிரசு அமைச்சரவை பதவி விலக, கட்டாய இந்தியும் கூடவே ஒழிந்ததன் பின் பழையபடியே அந்தக் கூட்டணி பிரிந்தது.

அப்போதுதான், இந்தி எதிர்ப்புப் போரில் இணைந்து செயல்பட்டதால், தனித்தமிழ் இயக்கத்தார் (சைவர்கள்), சுயமரியாதை இயக்கத்தின்பால் பற்று கொண்டு பார்ப்பனர், சமஸ்கிருத விலக்கு மட்டுமின்றி சாஸ்திர, சடங்குகள் மறுப்பு, ஆணாதிக்க எதிர்ப்புப் பார்வையில் தாலி மறுப்பு போன்ற புரட்சிகரக் கூறுகள் கொண்ட சுயமரியாதைத் திருமணங்களை செய்துகொள்ள தலைப்பட்டு விடுவார்களோ என்ற அச்சத்தோடு, இந்தி எதிர்ப்புப் போர் நடந்து முடிந்த சில மாதங்களுக்குள் (சைவர்கள்) ஒன்று கூடி ‘தமிழர் திருமண மாநாட்டை’ச் சென்னையில் 16-7-1939 அன்று நடத்தினர் (கூடியது சைவர்கள்; நடந்தது தமிழர் திருமண மாநாடு) பார்ப்பனர் சடங்கு - வடமொழி விலக்கிய பகுத்தறிவு சார்ந்த - திருமணம் என்பது ஒப்பந்தம் தான்; தாலி என்பது அடிமைச் சின்னம் - எனும் பெண்ணுரிமை பேணும் சுயமரியாதைத் திருமணத்தை தமிழர் திருமணமாக வரையறுத்தார்களா என்றால் அதுதான் இல்லை. “வடமொழி மந்திரங்களுக்குப் பதிலாக சைவப் பாடல்கள். பார்ப்பனர்களுக்குப் பதிலாக சைவர்கள். இவ்வளவுதான் சைவர்கள் வகுத்த தமிழர்த் திருமணம்” (குமரன் 27-7-1939)

> *“1916 ஆம் ஆண்டு மறைமலை அடிகளார் தொடங்கிய ‘தனித் தமிழ் இயக்கம்’ மொழித் தூய்மை மட்டும் பேசவில்லை; சமற்கிருதம் உள்ளிட்ட பிற மொழிச் சொற்களைத் தமிழிலிருந்து நீக்குவது போல், தமிழர் வாழ்வியல் சடங்குகள் ஆகியவற்றிலிருந்து சமற்கிருதத்தையும், ஆரிய புரோகிதர்களையும் நீக்குவதையும் வலியுறுத்தியது. பார்ப்பனர்களுக்குப் பதிலாக தமிழில் தமிழர்களைக் கொண்டு குடும்பச் சடங்குகளையும் ஆன்மிக நிகழ்வுகளையும் நடத்திக் கொள்ள வேண்டும் என்று மறைமலையடிகளார் வலியுறுத்தினார். (அதாவது, சைவர்களைக் கொண்டு சைவ திருமறைகளை ஓதி*

*நடத்த வேண்டும் என்றார்) "அரசியல் இயக்கங்கள் செயல்படும் காலம் வந்தபின், பெரியார் பார்ப்பனிய எதிர்ப்பைப் பெரும் வீச்சில் கொண்டு சென்றார். பட்டிதொட்டியெங்கும் பார்ப்பனிய ஆதிக்க எதிர்ப்பு பரவியது. இதற்கெல்லாம் முன்னோடிகளாக, அடித்தளம் அமைத்தோராகத் தமிழறிஞர்கள் இருந்தார்கள் என்பதை இன்றையத் தமிழுணர்வாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்"*

என்று இப்போது 2014இல் எழுதுகிறார் தோழர் மணியரசன்.

*இதே கருத்தை 1929 இல் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் (இப்போது சைவ சித்தாந்தப் பெருமன்றம்) மாத இதழான 'சித்தாந்தம்' ஜுன் மாத இதழில், அவ்விதழ் ஆசிரியர் ம.பாலசுப்பிரமணிய முதலியார் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார். "சுயமரியாதை இயக்கத்திலுள்ள நல்ல பகுதி களெல்லாம் மறைமலையடிகள் ஞானத் தந்தையாக அருள் சுரந்து இட்ட பிச்சையென்பது தமிழ்நாடு அறிந்ததே. இப்பிச்சை வாங்கிப் பிரச்சாரம் செய்பவர்கள் பிச்சையிட்ட பிதா செய்த நன்றியை மறப்பாராயின் அப்பிரச்சாரம் முழுமையும் கடலிற் பெய்த மழை போல் ஒரு பயனும் தராது போகும்."*

அன்று பாலசுப்ரமணிய முதலியார் எழுதியதை இன்று பெ.மணியரசன் எழுதுகிறார், அவ்வளவுதான்.

பெ. மணியரசன் பெரியாருக்கு முன்னோடிகளாக புத்தரையோ, சித்தர்களையோ, அயோத்தி தாசரையோ, சமகாலம் எனினும், அம்பேட்கரையோ கூறியிருந்தால்கூட புரிந்துகொள்ள முடியும். ஆனால் மறைமலை அடிகளை முன்னோடியாகக் கூறுவது எப்படியோ?

இந்தி எதிர்ப்புக்கும் தனித்தமிழ் நாட்டுக் கொள்கைக்கும் பெரியாருக்கு இந்த தமிழறிஞர்கள் தான் முன்னோடியாக இருந்தார்களா? அதையும் பார்ப்போம்.

மணியரசன் எழுதுகிறார்:

'1937'இல் "சென்னை மாகாண முதலமைச்சராக ஆனவுடன் இராஜாஜி, 1938 இல் ஒரு பகுதி பள்ளிக்கூடங்களில் வெள்ளோட்டமாக இந்தியைக் கட்டாயப் பாடமொழியாக்கினார். (பாட மொழியாக அல்ல; கட்டாயப் பாடமாகத்தான் ஆக்கினார்-ஆர்) அந்த இந்தித் திணிப்பைத் தமிழ் அறிஞர்கள் எதிர்த்தனர். இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் பெரியார் கலந்து கொண்டு முன்னெடுத்தப் பின், அது பெரும் வீச்சைப் பெற்றது. தமிழகம் தழுவிய எழுச்சி ஏற்பட்டது" என்கிறார் பெ.மணியரசன். ஆக, இந்தி எதிர்ப்பிலும் தமிழறிஞர்கள் தான் முன்னோடிகள். பெரியார் பின்னோடியே என்பதைத்தான் வேறு வகையில் வெளிப்படுத்தியுள்ளார்.

ஒரு தீங்கை, தீச்செயலை எதிர்க்க வேண்டும் என்று பலருக்குத் தோன்றும்; நினைப்பவர்களைவிட செயல்படுபவர்கள்தான் வெற்றிக்குக் காரணமாக இருப்பார்கள். நடைமுறையில் நாம் பலரைக் காண்கிறோம். நம்மிடம் பேசும் போதெல்லாம், 'நீங்கள் சொல்வதெல்லம் சரிதான்' என்பார்கள். 'எனக்குப் பல ஆண்டுகளாகவே இந்த கருத்து உண்டு' என்பார்கள். மனைவியை, கணவனை, குடும்பத்தை, தெருவை, ஜாதியை, ஊரை, கட்சியைக் காரணம் காட்டி ஜாதி ஒழிப்பு, ஜாதி மறுப்புத் திருமணம், பகுத்தறிவு, பொதுவுடைமை என்று பலவற்றில் பின்வாங்குவதைப் பார்க்கிறோம்.

அதனால்தான் 'சிந்திக்காத மடையனும், சிந்தித்து சரி என்று உணர்ந்ததை நடைமுறைப்படுத்தாத அறிவாளியும் சரிநிகர் சமமானவர்களே' என்கிறார்கள். இந்த எடுத்துக்காட்டு, இந்தி எதிர்ப்புப் போருக்காக அல்ல. பொதுவாகத்தான் கூறப்பட்டது.

இந்தி எதிர்ப்புப் போர் என்று பார்க்கிறபோதுகூட இந்தித் திணிப்பை எதிர்க்க வேண்டும் என்ற சிந்தனை கூட தமிழறிஞர்களுக்கு முதலில் வரவில்லை என்பதுதான் உண்மை. சற்று விரிவாகப் பார்ப்போம்.

### ஒரே நாளில் முடிவெடுத்தது அல்ல !

1935 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் என்பதை ஆங்கிலேய அரசு அறிமுகப்படுத்தியது. அது 1937 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து நடைமுறைக்கு வந்தது. அச்சட்டத்தின் அடிப்படையில் நடந்த தேர்தலில் - சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசு பெரும்பான்மைப் பெற்றது. 1935 ஆம் ஆண்டு சட்டத்தில் ஆளுநர்களுக்கு சட்டமன்றத் தீர்மானங்களை நீக்கறவு (இரத்து) செய்தல், நெருக்கடி காலச் சட்டங்களைப்

பயன்படுத்துதல் முதலிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. (இவ்வதிகாரங்கள் இப்போது குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளன) 'மேற்கண்ட அதிகாரத்தைப் பயன்படுத்த மாட்டேன்' என்று ஆளுநர் உறுதிமொழி வழங்கினால் மட்டுமே பதவி ஏற்பேன் என்று இராஜ கோபாலாச்சாரி (இராஜாஜி)யும், அவரது அமைச்சர்களும் வீராப்பு பேசி வந்தார்கள். அத்தகைய உறுதி மொழி வழங்க ஆளுநர் உடன்படவில்லை. ஓரிரு மாதங்கள் மட்டும் காங்கிரசு பொறுத்துப் பார்த்தது. பின்னர் தாங்களாகவே ஜூலை மாதம் பதவி ஏற்றுக் கொண்டனர். அவ்வமைச்சரவையைப் பெரியார் "சரணாகதி மந்திரிசபை" என்றழைத்து கிண்டல் செய்தார்.

அமைச்சர்கள், சட்டப் பேரவைத் தலைவர், மேலவைத் தலைவர் ஆகிய பத்துப் பதவிகளில் ஆறு பார்ப்பனர்கள். (சட்டமன்றத் துணைத் தலைவரும் ருக்குமணி இலட்சுமிபதி என்கிற பார்ப்பனப் பெண்மணியே). அமைச்சரவை அமைக்கப்பட்ட முறையே பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநாட்டுவதாக அமைந்தது. இதை சுயமரியாதை இயக்கத்துக்கு முன்னதாகவே சுட்டிக்காட்டியவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிப் பொதுச் செயலாளர் சேலம் பாரிஸ்டர் எஸ்.வி.இராமசாமியே ஆவார். (இவரது துணைவியார்தான் சேலம் சாரதா கல்வி நிறுவனங்களின் நிறுவனர் ஆவார்) இவர் பின்னாளில் 1960களில் இரயில்வேத்துறை இணை அமைச்சராக இருந்தபோது, திருச்செந்தூர் கோவிலில் கும்பிட்டுவிட்டு திருநீறு கேட்டபோது, சூத்திரனுக்கு கையில் கொடுக்க முடியாது என்று பார்ப்பன அர்ச்சகர் கல்தூண் மீது போட்டார். கேள்விப்பட்ட பெரியாரும், அவரியக்கமும்தான் தமிழ்நாடு முழுதும் கூட்டங்கள் நடத்திக் கண்டித்தன. அதே கோவிலுக்கு, முதல் தி.மு.க. அரசின் அறநிலையத் துறை அமைச்சரான நாவலர் நெடுஞ்செழியன் பார்வையிடச் சென்றபோது பார்ப்பன அர்ச்சகர் பவ்வியமாக திருநீறு கொடுக்க, அதை நாவலர் கல்தூண் மீது போட்டு வந்தார். இவை, காங்கிரசிலும் தன்மான முள்ளவர்கள் இருந்தார்கள் என்பதையும், ஆட்சி மாற்றம் பார்ப்பனர்களின் போக்கில் ஏற்படுத்திய மாற்றத்தையும் வெளிப்படுத்தும் சுவையான நிகழ்வு களாகும்.

அவ்வாறு பதவியேற்ற இராஜாஜி, ஏற்கெனவே நீதிக் கட்சி ஆட்சிக் காலத்தில் கிராமப்புறங்களில் ஏற்படுத்தியிருந்த 2200 பள்ளிகளை நிதிப்பற்றாக் குறையைக் காரணமாகக் காட்டி மூடினார். ஆனால், 12 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கி (இன்றைய மதிப்பில் பல கோடி ரூபாய்கள்) வேத

பாடசாலைகள் நிறுவி, பார்ப்பன ஆசிரியர்களுக்கு கொழுத்த சம்பளம் வழங்கினார். (இதே இராஜாஜி 1952 இல் அடுத்த முறை முதலமைச்சரானபோது, நிதி நெருக்கடியைக் காரணம் காட்டி 6000 கிராமப்புற பள்ளிகளை மூடினார்.)

இதற்கெல்லாம் உச்சமாக, இராஜாஜி பதவியேற்ற ஒரு மாதத்தில், 10.8.1937 அன்று சென்னை இராமகிருஷ்ணா மடத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் சென்னை மாகாணத்திலுள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும், எல்லா மாணவருக்கும் இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக அமைக்கப் போவதாக அறிவித்தார். அடுத்தத் திங்கள், கிறித்துவக் கல்லூரியில் பேசுகையில் எல்லாப் பள்ளிகளிலும் - ஆனால் முதல் மூன்று பாரங்களில் மட்டும் என்றார். அடுத்த கல்வி ஆண்டு தொடங்குவதற்கு முன்னதாக 21.4.1938 அன்று இந்தியைக் கட்டாயப் பாடமாக்கும் ஆணையைப் பிறப்பித்தார். பள்ளிகள் தொடங்கியவுடன் போராட்டமும் தொடங்கியது.

ஆனால் 21.4.1938இல் இராஜாஜி பிறப்பித்த இந்திக் கட்டாய ஆணையில் தமிழகத்தில் 60, ஆந்திராவில் 54, கன்னட நாட்டில் 4, மலையாளத்தில் 7 ஆக 125 பள்ளிகளில் மட்டுமே முதல் மூன்று படிவங்களில் (6ஆம் வகுப்பு, முதல் பாரம்) இந்தியைப் புகுத்தினார். அடுத்த திங்கள், இந்தியில் தேறாவிட்டாலும் பரவாயில்லை - மாணவர்கள் மேல் வகுப்புக்கு மாற்றப்படுவார்கள் என்றார். அதற்கடுத்த திங்கள், இந்தியில் ஒரு நூறு சொற்கள் தெரிந்தால் போதும், மற்றபடி நான் முழு இந்தியைப் படிக்கச் சொல்லவில்லையே என்றார். மற்றும் ஒரு முறை, இன்றைக்கு இந்தி வேண்டுமா வேண்டாமா என்பதே பிரச்சினை அல்ல. ஆள்வது நானா அல்லது ஒரு ஈரோடு இராமசாமியா என்பதுதான் பிரச்சினை என்றார். இன்னொரு முறை, இன்றைய பிரச்சினை யெல்லாம் இந்த நாட்டுக் கல்வி முறையை உருவாக்கும் உரிமை எனக்கிருக்கிறதா அல்லது எனது நண்பர் இராமசாமி நாயக்கருக்கிருக்கிறதா? என்பதுதான் என்றார்.

இந்திக் கிளர்ச்சியின் துவக்கக் காலத்தில் இராஜாஜி,சட்டமன்றத்தில் "இந்தியை யார் எதிர்க்கிறார்கள்? ஒரு இராமசாமியும் ஒரு சோமசுந்தர பாரதியும் தானே! இராமசாமியோ பார்ப்பனத் துவேஷி; பாரதியோ பண்டிதர். ஒரு பார்ப்பன துவேஷியும் ஒரு பண்டிதரும் எதிர்ப்பதற்கா நான் இந்தியை விட்டுவிடுவது" என்றார். (உடனடியாக சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் "எதிர்ப்பவர்கள் இரண்டு பேராகவே இருக்கட்டும். ஆதரிப்பவர் நீங்கள் ஒருவர்தானே" என்று பதிலடி கொடுத்தார்.) ஆனால் அந்த ஆச்சாரியார், இந்திப் போரின் இறுதிக் கட்டத்தில், "புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோல்

இந்தி எதிர்ப்புப் போர் வீரர்கள் வருகிறார்களே! இந்த இந்தி சனியனுக்கு இவ்வளவு எதிர்ப்பு இருக்கும் என்று தெரிந்திருந்தால் இந்தியை வைத்திருக்கவே மாட்டேன்” என்றார்.

“திடீரென்று என் வீட்டில் திருடர்கள் புகுந்து விட்டால் வீட்டில் கையில் கிடைத்த எந்த ஆயுதத்தையும் கொண்டு அவர்களை நான் தாக்குவேன். அதுதான் நியாயமும்கூட. அதுபோல்தான் இந்தி எதிர்ப்புப் பற்றிய என்னுடைய அடக்குமுறையும்” என்று பின்னொருமுறை கூறினார்.

## வீறுகொண்டு எழுந்த கிளர்ச்சி

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் வேகம் அவரை அப்படியெல்லாம் மாறி மாறிச் சொல்ல வைத்தது; அடக்கு முறையையும் வலுக்க வைத்தது. ஆனால் அவருடைய அடக்குமுறையால் கிளர்ச்சியின் வேகம் சிறிதும் தணியவில்லை. அடக்க அடக்க மேலும் மேலும் வீறுகொண்டு எழுந்தது கிளர்ச்சி; வீறுபெற்று எழுந்தனர் தமிழர்.

3.6.1938 அன்று, இந்தி எதிர்ப்புப் போர், முதல் சர்வாதிகாரி செ.தெ.நாயகம், சண்முகானந்த அடிகள், பட்டினிப் போராட்டம் நடத்தி வந்த பல்லடம் பொன்னுச்சாமி ஆகிய மூவரின் கைதில் தொடங்கியது. ஆண், பெண், குழந்தைகள் என 1271 பேர் கைதாகினர். தொடர்ந்து ஓராண்டுக்கு மேலாக நடந்து வந்தது இந்தி எதிர்ப்புப் போர். 21.2.1940இல் பிறப்பிக்கப்பட்ட அரசாணையில் கட்டாய இந்திப் பாடத் திட்டம் திரும்பப் பெற்றதும் முடிவுக்கு வந்தது. இந்தி வந்ததும், எதிர்த்ததும் ஒரே நாளில் முடிவெடுத்து நடந்ததல்ல. அதற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு.

1906 ஆம் ஆண்டிலிருந்தே இந்தியாவின் பொது மொழியாக இந்தி அல்லது இந்துஸ்தானி இருக்க வேண்டும் என்று பேசப்பட்டு வந்தாலும், காந்தியின் தலைமை வந்த பின்னரே அது தீவிரமாயிற்று. 1917 ஆம் ஆண்டு இன்றைய குஜராத் மாநிலம், பரோச் என்ற இடத்தில் நடந்த கல்வி மாநாட்டில் காந்தி இந்தியாவில் பொது மொழி குறித்து அழுத்தமாக பதிவு செய்ததும், தென்னாட்டில் எதிர்க்குரலும் உடனே வெளிப்பட்டது. நீதிக் கட்சியின் நாளேடான ‘திராவிடன்’ இதழில் 1.8.1917 அன்று ‘மிஸ்டர் காந்தியும், இந்தியும்’ என்ற இந்தி எதிர்ப்புக் கட்டுரை வெளி வந்தது.

அனைத்திந்திய காங்கிரசு மாநாடுகளில் விவாதங்கள் இந்தி/இந்துஸ்தானியில் காந்தியாரின் விருப்பப்படி நடக்கத் தொடங்கின.

சென்னை மாகாணப் பிரதிநிதிகள் எதிர்ப்பும் தொடர்ந்து நிலவியது. காந்தியும், தென்னிந்தியப் பிரதிநிதிகள் இந்தியைக் கற்க வேண்டும் என்பதை வலியுறுத்திய வண்ணமாக இருந்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக 1918 இல் இந்தூரில் நடைபெற்ற இந்தி சாகித்திய சம்மேளன மாநாட்டில் தென்னிந்தியாவில் இந்தியைப் பரப்புவதற்கான செயல் திட்டங்களை காந்தி உருவாக்கினார். அதன் விளைவாக 1918 இல் சென்னையில் 'தட்சிண பாரத ஹிந்தி பிரச்சார சபை' (தென்னிந்திய இந்தி பரப்பு அவை)யை நிறுவினார். அதோடு விட்டாரா காந்தி? திராவிட மொழியினர் சிறுபான்மையினர்; எனவே பெரும்பான்மையினர் மொழியைக் கற்றுத்தானாக வேண்டும் என்ற பாசிச வாதத்தை இனிப்புத் தடவி பேசத் தொடங்கினார். "திராவிடர்கள் சிறுபான்மையோராக இருப்பதால், இந்தியாவின் பிற பகுதியில் உள்ளவர்கள், திராவிட இந்தியாவில் உள்ளவர்களுடன் பேசுவதற்கு தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவற்றைக் கற்றுக் கொள்வதைவிட இந்தியாவின் பிற பகுதிகளில் பொது மொழியாக உள்ள இந்தியை சிறுபான்மையினரான திராவிடர்கள் கற்றுக் கொள்வதுதான் தேசியப் பொருளாதாரத்துக்கு நல்லது" என்று 'யங் இந்தியா'வில் எழுதினார்.

காந்தி மீதும், காந்தியார் பேசி வந்த நிர்மாணத் திட்டத்தின் மீதும் முழு நம்பிக்கை வைத்து காங்கிரசில் இணைந்து பணியாற்றிக் கொண்டிருந்தார் பெரியார். மதுவிலக்கை மனதில் கொண்டு, கள் தரும் மரங்களை வெட்டி எறியுங்கள் என்றார் காந்தி. வட இந்தியாவில் கள் தருவது ஈச்ச மரம்தான்; எனவே வெட்டினார்கள். ஆனால், பெரியாரோ பொருள் மதிப்பு மிக்க 500 தென்னை மரங்களை வெட்டித் தள்ளினார்.

"ஆங்கிலேயே அரசு நீதியற்ற அரசு; அதன் நீதிமன்றங்களைப் புறக்கணியுங்கள்" என்றார் காந்தி. 1920களில் தனக்கு வரவேண்டியிருந்த ரூ.50,000/க்கான இரண்டு கடன் பத்திரங்கள் காலாவதி ஆவதை அறிந்தும், பலர் வற்புறுத்தியும் நீதிமன்றம் செல்லாமல் இழந்தார் பெரியார்.

அதே கதைதான் இந்தி விஷயத்திலும்.

"தேசிய நலனுக்கு இந்தி படியுங்கள்" என்று கூறி விட்டார் காந்தி. அது போதாதா பெரியாருக்கு! 1922 ஆம் ஆண்டு பண்டித மோதிலால் நேரு, விட்டல்பாய் படேல், டாக்டர் அன்சாரி ஆகியோர் ஈரோட்டுக்கு வந்திருந்தபோது, தனது பழைய இரயில்வே நிலைய மாளிகையில்,

30 மாணவர் கற்கும் இந்திப் பள்ளி ஒன்றினைத் தமது செலவில் தொடங்கி, 2 ஆண்டுகள் வரை நடத்தி வந்தார். அதில் 15 பிள்ளைகளுக்கு உணவு முதலியவை இவர் பொறுப்பு. (திரு.வி.க. வாழ்க்கை வரலாறு)

ஆனாலும், அதே 1922 ஆம் ஆண்டின் இறுதியில் திருப்பூரில் நடைபெற்ற தமிழ் மாகாண காங்கிரசு மாநாட்டில் இந்தியைப் பரப்புகிறோம் என்று கூறிக் கொண்டு, இந்தியில் உள்ள துளசிதாஸ், இராமாயணத்தைப் பரப்புவதைக் கண்டித்துப் பேசுகிறார், பெரியார். ஆக இந்தி என்பதன் ஊடாக வடவரின் பண்பாட்டுத் திணிப்பு நடக்கிறது என்ற சிறுபொறி பெரியார் மனதில் 1922 லேயே தோன்றியிருக்கிறது.

1925 நவம்பரில் தமிழ்நாடு காங்கிரசு மாநாடு காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. தலைமை திரு.வி.க. இந்த மாநாட்டில்தான் பெரியார் கட்சி விதிகளின்படி தேவையான அளவுக்கு மேல் கட்சிப் பிரதிநிதிகளின் ஒப்புதலோடு முன் வைத்த வகுப்புவாரித் தீர்மானத்தைப் பரிசீலனைக்குக்கூட எடுத்துக் கொள்ளாமல் தள்ளுபடி செய்தார் தலைவர் திரு.வி.க. தமிழ்த் தென்றல் திரு.வி.க., மாநாட்டுத் தலைவர் என்ற முறையில் ஒரு தீர்மானத்தை முன் வைத்தார். பெரியாரும் அவரோடு பலரும் மாநாட்டுப் பந்தலை விட்டு வெளியேறிய பின்னர், அ ந்தத் தமிழறிஞர் முன்மொழிந்த தீர்மானம் இந்தி பரப்புக்கான தீர்மானம். "தமிழக இளைஞர்கள் இந்தி சேவாதளத்தில் இணைய வேண்டுமென்றும், சேவா தளத்தின் கிளைகள் ஒவ்வொரு நகரத்தி லும், தாலுகாக்களிலும் அமைக்கப்பட வேண்டுமென்றும், இந்தியைப் பரப்புவதில் ஆர்வம் குறைந்துள்ளது; அதை மாற்றி தமிழர்கள் இந்தியை விரைவாகவும், நன்றாகவும் பயில வேண்டும்" என்றும் வலியுறுத்துவதே தமிழ்த் தென்றல் திரு.வி.க. கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானம்.

## 1926லேயே இந்தி எதிர்ப்பை தொடங்கியவர், பெரியார்

ஆனால், தான் கடந்த அய்ந்தாண்டுகளாக ஒவ்வொரு மாகாண காங்கிரசு மாநாடுகளிலும் தொடர்ச்சியாக வற்புறுத்தி வந்த வகுப்புவாரி தீர்மானம் ஏற்கப்படாததையும், இறுதியாக காஞ்சிபுரம் மாநாட்டிலும் விதிகளின்படி 30 உறுப்பினர்களுக்கு மாறாக எழுபது உறுப்பினர்களிடம் கையொப்பம் பெற்றுக் கொடுத்தும் விவாதத்துக்குக்கூட எடுத்துக் கொள்ளப்படாமல் சூழ்ச்சியாக கைவிடப்பட்டதையும் கண்ட பெரியார், காங்கிரஸ் மாநாட்டில் இருந்து வெளியேறுகிறார். வெளியேறிய பெரியார், தான் காங்கிரசில் இருந்தபோது கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றி வந்த காங்கிரசு-காந்தி கொள்கைகளை மீளாய்வு செய்யத் தொடங்குகிறார்.

முதலில் அவரால் திறனாய்வுக்கு உள்ளானக் கொள்கை காந்தியின் ‘இந்தி’ கொள்கை தான். 1925 நவம்பர் இறுதியில் வெளியேறிய பெரியார், 1926 மார்ச் மாதம் தனது ‘குடிஅரசு’ இதழில், “தமிழிற்குத் துரோகமும், ஹிந்தி பாஷையின் இரகசியமும்” என்ற தலைப்பிட்டு ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

இந்திப் படிப்பவர்களில் 100க்கு 3 பேராய் மக்கள் தொகையிலுள்ள பார்ப்பனர்களில் 100க்கு 97 பேரும், 100க்கு 97 பேராய் உள்ள பார்ப்பனரல்லா தாரில் 100க்கு 3 பேர்கூட படித்திருக்க மாட்டார்கள். ஆனால் பணம் 100க்கு 97 ரூபாய் பார்ப்பனரல்லாதார் பணம் என்பதாக குறிப்பிட்டுவிட்டு, “இந்தப் படிப்பின் எண்ணிக்கை எப்படி இருந்தாலும் நமக்கு அதைப் பற்றி அதிகக் கவலை ஒன்றும் இல்லை. ஆனால், இதில் 100 இல் ஒரு பங்கு கவலைகூட தமிழ்மொழிக்கு எடுத்துக் கொள்வதில்லை என்பதையும், இந்தி படித்த பிராமணர்களால் நமக்கு ஏற்படும் கெடுதியையும் நினைக்கும்போது, இதைப்பற்றி வருந்தாமலும், இம்மாதிரி பலன்தரத்தக்க இந்திக்கு நாம் பாடுபட்ட முட்டாள்தனத்திற்கும், நாம் பணம் கொடுத்த பைத்தியக்காரத்தனத் திற்கும் வெட்கப்படாமலும் இருக்க முடியவில்லை” என்று, தான் இந்திப் பள்ளியைத் தன் செலவில் நடத்தியதையெண்ணி தான் இழைத்துவிட்ட பிழைக்கு தன்னையே நொந்து கொள்கிறார் பெரியார். தொடர்ந்து இந்தியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கப்படலாம் என்றும் அது பெரும்பான்மை யாளராய் வாழும் பார்ப்பனரல்லாத மக்களுக்குத் தீங்காகவே முடியும் என்பதையும் எழுதுகிறார். “இந்தியைப் பொது மொழியாக்க வேண்டும் என்ற கவலையுள்ளவர்கள் போல், தேசத்தின் பேரால் ஆங்காங்கு பிராமணர்கள் பேசுவதும், அதைச் சர்க்கார், பள்ளிக்கூடம் முதலிய பலவிடங்களில் கட்டாயப்பாடமாக்கப் பிரயத்தனப்படுவதும் யார் நன்மைக்கு? இனி கொஞ்ச காலத்திற்குள் இந்திப் பிரச்சாரத்தின் பலனை நாம் அனுபவிக்கப் போகிறோம். பிராமணரல்லாதார்க்கு ஏற்பட்ட பல ஆபத்துகளில் இந்தியும் ஒன்றாய் முடியும் போலிருக்கிறது” என்று முன் உணர்ந்து எழுதுகிறார்.

இந்தியின் தீங்கு குறித்து அறிந்தாலும், அவர்கள் பார்ப்பனர்களுக்குப் பயந்து கொண்டும், தேசத்துரோகி பட்டம் வந்துவிடுமோ என்று அஞ்சியும் வெளியே பேசத் துணிவதில்லை, என்கிறார் பெரியார். “ பொதுவாக இந்தி என்பது வெளி மாகாணங்களில் பிராமண மதப் பிரச்சாரம் செய்யக் கற்பித்துத் தரும் ஒரு வித்தையாகிவிட்டது. இரண்டடொருவருக்கும் அதன் இரகசியம் தெரிந்தாலும் பிராமணர்களுக்குப் பயந்து கொண்டு தாங்களும் ஒத்துப் பாடி விடுகிறார்கள். யாராவது துணிந்து வெளியில் சொன்னால் இவர்களைத்

தேசத்துரோகியென்று சொல்லிவிடுகிறார்கள்'' என்று அக்கட்டுரையில் பெரியார் கூறுகிறார். ('குடிஅரசு' 7.3.1926)

ஒரு வேளை காஞ்சிபுரம் மாநாட்டில் தமிழ்த் தென்றல் திரு.வி.க., மக்களுக்கு இந்தி கற்பிக்க எடுத்த முயற்சிகளை எண்ணி, கொண்டு வந்த தீர்மானத்தை மனத்தில் கொண்டு இவ்வாறு எழுதியிருப்பாரோ தெரியவில்லை.

அடுத்ததாக 20.1.1929 'குடிஅரசில்' 'இந்திப் புரட்சி' எனும் தலைப்பில் தலையங்கம் ஒன்றை எழுதுகிறார் பெரியார். இந்தியைப் பரப்பும் திட்ட செலவுகளுக்காக நிதி திரட்டும் முயற்சியைக் குறித்து எழுத வந்த பெரியார், இந்தி மொழி, மொழியின் தகுதி, பயன் குறிட்தெல்லாம் விரிவாக எழுதிவிட்டு, ''இப்போது தமிழ்நாட்டில் இந்தி பாஷை பரப்ப வந்திருப்பதென்பது, தற்காலம் தமிழ்நாட்டிலுள்ள உணர்ச்சியை ஒழிக்கச் செய்யும் சூழ்ச்சியேயாகும். ஆதலால், இதற்கு எந்த பார்ப்பனரல்லாதாராவது பணம் கொடுத்தால், அது பெரிய சமூகத் துரோகமாகும்'' என்று முடிக்கிறார்.

அடுத்ததாக 10.5.1931 'குடிஅரசு' இதழில் 'கதரும் ஹிந்தியும்' என்ற தலைப்பில் மற்றொரு கட்டுரையை எழுதியுள்ளார் பெரியார். அக் கட்டுரையில், தோழர் பெ. மணியரசன் இந்தி எதிர்ப்புக்கு முன்னோடிகளாகக் கூறும் தமிழ்ப் பண்டிதர்களைப் பற்றி, சீற்றத்தோடு எழுதுகிறார்.

''ஹிந்தியை அரசியல் விஷயமாக ஆக்கி, அதைக் கதரைப்போல் - ஏன் கதரைவிட அதிகமாக ஒவ்வொருவருக்குள்ளும் புகுத்தப் பார்ப்பது எவ்வளவு வஞ்சகமான காரியம் என்பதை நமது சோணகிரிகள் அநேகர் இன்னும் உணரவே இல்லை. தமிழ்ப் பண்டிதர்கள் சாம்பலையும் மண்ணையும் குழைத்து சூடு போட்டதுபோல் மேலெல்லாம் தீட்டிக் கொண்டு சிவ சிவ சிவ என்பதற்கும், ராம ராம ராம என்பதற்கும் உதவுவார்களே தவிர மற்றபடி நமது மக்கள் மீது அனாவசியமாக ஒரு பாஷை, சூழ்ச்சித் திறத்தில் சுமத்தப்படுகின்றதே என்ற அறிவும் கவலையும் கிடையாது என்றே சொல்ல வேண்டியிருக்கிறது'' என்கிறார்.

இவ்வரிகள் திரு.வி.க.வைச் சுட்டுகிறதா? அல்லது மறைமலை அடிகளையா? நாமம் தீட்டும் ராகவையங்காரர்களையா? நமக்குப் புலப்படவில்லை. ஆனால், தமிழறிஞர்கள் இந்தித் திணிப்பைப் பற்றி அக்கறையற்றே இருந்திருக்கிறார்கள் என்பது நன்கு புலப்படுகிறது.

அடுத்ததாக, 14.6.1931இல் நன்னிலத்தில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில், ‘ஹிந்தி கண்டனத் தீர்மானம்’ நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 17.1.1932இல் ‘சமஸ்கிருத சனியன்’ என்ற தலைப்பில் ஹிந்தியை எதிர்த்தும், 18, 19.6.1932இல் நடைபெற்ற மன்னார்குடி சுயமரியாதை மாநாட்டில் ஆற்றப்பட்ட இந்தி எதிர்ப்பு சொற்பொழிவுகள் குறித்தும் ‘குடிஅரசு’ எழுதியுள்ளது.

13.1.1936 அன்று சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த் திருநாள் விழா நடைபெற்றுள்ளது. அவ்விழாவில் பெரியாரும், திரு.வி.க.வும் புகழ்பெற்ற தமிழ்ப் புலவர் கா.நமச்சிவாய முதலியாரும் கலந்து கொண்டுள்ளனர். அதில் தமிழ் குறித்தும், தமிழ் வளர்ச்சி குறித்தும், தமிழை மேம்படுத்த தமிழை மதத்திலிருந்து பிரிக்க வேண்டும் எனவும், தீபாவளி போன்ற மூடநம்பிக்கையும், சுயமரியாதையற்றதும், ஆபாசமானதுமான விழாக்களைக் கொண்டாடுவதைவிட தமிழ்த் திருநாளாம் பொங்கலைக் கொண்டாட வேண்டும் என வலியுறுத்தியும் விரிவான சொற்பொழிவு ஒன்றினை ஆற்றியுள்ளார்.

## பொங்கள் விழாவிலும் இந்தி எதிர்ப்பு

அவ்விழாவிலும் இந்தி எதிர்ப்புக் கருத்துக்களைப் பேசியுள்ளார். “தமிழ்நாட்டில் வந்து தமிழ் கற்று வயிறு வளர்ப்பவர்களாகிய பார்ப்பனர்களே இந்தி பாஷை, இந்திய பாஷையாக வேண்டுமென்று முயற்சித்து வெற்றி பெற்று வருகிறார்கள். கோர்த் பாஷை, அரசாங்க பாஷை ஆகியவை யெல்லாம் இந்தி மயமாக வேண்டும் என்கிறார்கள். காரணம் கேத் டால் இந்தி பாஷையில் துளசிதாஸ் இராமாயணம் நன்றாய் விளங்குமென்கிறார்கள்” என்றெல்லாம் பேசி வந்த பெரியார், தோழர் மணியரசனின் ‘முன்னோடி’ தமிழறிஞர்களைக் குறித்தும் குறிப்பிட்டுள்ளார். “தமிழ்ப் பண்டிதர்களுக்கு இதைப் பற்றி சிறிதும் கவலை இருந்தது என்று சொல்ல முடிய வில்லை. தமிழ்ப் பண்டிதர்கள் இந்த அரசியல்வாதிகளின் கூச்சலுக்கும் பார்ப்பனர்களின் ஆதிக்கத்துக்கும் பயந்து கொண்டு வாயை மூடிக் கொண்டிருக்கிறார்கள்” என்பதே அது. இந்த இடித்துரை எங்கோ நடந்த கூட்டத்தில் அல்ல; ஒரு கல்லூரி கூட்டத்தில் - மாணவர்களும், பேராசிரியப் பெருமக்களும், குறிப்பாக தமிழ்ப் பேராசிரியர்களும் உள்ள அவையில், அதுவும் திரு.வி.க., கா. நமசிவாய முதலியார் போன்ற தமிழறிஞர்களும் இருந்த அவையில்தான் தமிழ்ப் புலவர்களின் இந்தி குறித்துள்ள கவலையற்ற போக்கைக்

கண்டித்துப் பேசியுள்ளார். "தமிழறிஞர்கள்தான் இந்தி எதிர்ப்புப் போரைத் தொடங்கினர். பெரியார் பின்னர் வந்து சேர்ந்து எல்லாப் புகழையும் அவரே தட்டிப் பறித்துச் சென்றுவிட்டார்" என்ற ஒரு செய்தி பல நிகழ்வுகளில் பேசப்படுகின்றது. 'நாம் தமிழர் கட்சி' ஆவணத்தில், சக்திவேல் என்ற நபர் எழுதியுள்ள, 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற நூலில், அவரே வெளியிட்ட ஒளிநாடாவில் என பரவலாக இக்கருத்தே முன் வைக்கப்படுகிறது.

அவர்கள் கூறும் வாதம் - 10.8.1937 அன்று சென்னை இராம கிருஷ்ண மடத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில்தான் அன்றைய சென்னை மாகாண முதலமைச்சர் இராஜாஜி, அடுத்தக் கல்வியாண்டு முதல் இந்தி கட்டாயப் பாடமாக உயர்நிலைப் பள்ளிகளில் வைக்கப்படும் என்று பேசினார். உடனே தமிழறிஞர்கள் 26.8.1937 அன்று கரந்தை தமிழ்ச் சங்கத்தில் இந்தி எதிர்ப்புக் கூட்டத்தை நடத்தியது தான் முதல் இந்தி எதிர்ப்பு நடவடிக்கையாக எல்லோராலும் கூறப்படுகிறது. ஆனால், அதற்கு முன்னதாகவே 22.8.1937 அன்று 'குடிஅரசில்', "சுயாட்சியா? பழிவாங்கும் ஆட்சியா?" என்ற தலைப்பில் ஒரு தலையங்கத்தை பெரியார் எழுதியிருக்கிறார். அதில், ஆங்கிலேயர் ஆட்சியையும், பார்ப்பன ஆட்சியையும் ஒப்பிட்டு இரண்டுக்கும் ஒரே கொள்கைதான் என்கிறார். "அக்கிரகாரச் சனியன்கள் பிரிட்டிஷ் சர்க்காரை சரணாகதி அடைந்து மந்திரி ஸ்தானத்தில் அமர்ந்து ஆட்சி செலுத்த ஆரம்பித்தது முதல் ஒவ்வொரு துறையிலும் பழி வாங்கும் குணத்தையும், அக்கிரகார ஆதிக்கத்தை என்றென்றும் நிலைநிறுத்தும் கவலையும் கொண்டு சூழ்ச்சி ஆட்சி நடத்தப்பட்டு வருகிறது" என்று தொடங்கும் அந்த நீண்ட தலையங்கத்தின் இடையில் - "இன்று நமக்கு தொல்லையாயும், நம் சுயமரியாதை வாழ்வுக்கு ஈனமாகவும் இருந்து வரும் ஆட்சி பார்ப்பன ஆட்சியேயாகும். பிரிட்டிஷ் ஆட்சிக்கு எப்படியாவது பிரிட்டிஷ் கொடி பறக்க வேண்டியதுதான் அதன் முக்கியக் கொள்கையோ அதேபோல் பார்ப்பன ஆட்சிக்கும் எப்படியாவது பார்ப்பனரல்லாத மக்களை அழுத்தி அழித்து பார்ப்பன ஆட்சியை (மனுநீதி கொடுங்கோல் ஆட்சியை) நிலைநிறுத்த வேண்டும் என்பதேயாகும்" என்கிறார்.

அதுமட்டுமல்லாமல், இராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் ஆட்சிப் பற்றி தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் செயலாளராக இருந்த சேலம் எஸ்.வி. இராமசாமி, இராஜாஜி அமைத்த அமைச்சரவை பற்றி

வெளியிட்டிருந்த அறிக்கையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். “அக்கிரகார மந்திரி ஆட்சியை சேலம் பாரிஸ்டர் எஸ்.வி.ராமசாமி சரியான உபமானத்துடன் வருணித்துக் காட்டினார். அதாவது இன்றைய ஆட்சியை ஒரு பிளேக் வியாதிக்கு ஒப்பிட்டார்” என்பதை எடுத்துரைத்து, “அக்கிரகார ஆட்சி இன்று நம் மக்களின் அறிவு, சுதந்திரம், பொருளாதாரம், நாகரிகம் ஆகிய மூன்று நான்கு காரியங்களிலும் வெளிப்படையாய் தைரியமாய் பழி வாங்கும் தன்மையோடு கைவைத்து காரியங்களைக் காட்டு மிருகத்தனமாய் நடத்த ஆரம்பித்துவிட்டது. மனித சமூக அறிவை பாழ்படுத்த வேண்டியதற்காகவே ஹிந்தி பாஷையைத் தமிழ் மக்கள் படித்தாக வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் கல்வியைத் திணிப்பதை” எடுத்துக் காட்டுகிறார். “கல்வி விஷயத்தில் இரண்டு முக்கிய விஷயம் கையாளப்பட வேண்டியது அவசியம் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஒன்று கல்வியால் மக்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதை உணர்ச்சியும் ஏற்படவேண்டும்” என்றெல்லாம் எழுதிவிட்டு, இந்தி திணிக்கப்பட்டால் பார்ப்பனரல்லாத மாணவர்கள் சந்திக்க இருக்கும் பின்னடைவுகளை விளக்கிய பெரியார், தமிழ்ப் பண்டிதர்களை நோக்கி தன் சீற்றத்தை வெளிப்படுத்துகிறார்.

“கம்பராமாயணத்தின் கருப்பொருள் கண்டுபிடித்த மக்களில் 100க்கு 5 பேருக்காவது சுயமரியாதையோடு சமூகப் பற்றோ, தாய்மொழிப் பற்றோ இருக்கிறது என்று யாராவது சொல்ல முடியுமா? என்று கேட்கின்றோம். ஆரிய இராமாயணம் கொளுத்தப்பட வேண்டும் என்று ஆதியில் நாம் சொன்ன காலத்தில், “இராமாயணக் கதை ஆபாசமானது, வெறுக்கத்தகுந்தது, கீழ் மக்கள் இயற்கையையும், கெட்ட குணங்களையும் சித்தரிப்பது என்றும், ஆனால் கம்பன் கவித்திறம், தமிழின் கலைத்திறம் முதலியவை கம்பராமாயணத்தில் மலத்தில் கிடக்கும் முத்துப்போல் பொதிந்து கிடப்பதால் அதை எரிக்கக்கூடாது” என்றும் சொன்ன கம்பராமாயணக் கருப்பொருள் பண்டிதர்கள் இன்று பக்கா பட்டரான ஆச்சாரி யார் துளசிதாஸ் இராமாயணம் படிப்பதற்காக ஹிந்தியைக் குழந்தைகளுக்குக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்று சொல்லி, அதற்கு வேண்டிய காரியங்கள் செய்து வரும்போது, “மனைவியை மற்றொருவன் சேலையை அவிழ்த்துப் பலாத்காரம் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்த வீரர்கள் கதை (மகாபாரதம்) போல் இன்று வாய் திறவாமல் அடிமையாய், துரோகியாய் தமிழ் மாதுக்கு துரோகியாய் வீற்றிருக்கும் காரணம் என்ன என்று கேட்கிறோம்” என மகாவீரர்கள் என்று பீற்றிக்

கொண்ட பீமன், அர்ச்சுனன் உள்ளிட்ட பாண்டவர்கள் முன் அவர்களது கூட்டுரிமை மனைவி துரவுபதை (பாஞ்சாலி)யின் துகிலை உரித்தபோது நெட்டை மரங்களாக நின்றதைப்போல், நீங்கள் பெருமையாக அன்னை என்று போற்றும் தமிழ்ப் பெண்ணுக்கு ஆபத்து வரும்போது வாளாவிருக்கும் தமிழ்த் துரோகத்தைக் கடுமையாக சாடுகிறார் பெரியார். அதோடு விட்டுவிடவில்லை பெரியார். தொடர்ந்து அத்தலையங்கத்தில் தமிழ்ப் பண்டிதர்கள் எவ்வித எதிர்வினையும் ஆற்றாமல் கிடப்பதைக் கண்டு மேலும் பொங்குகிறார்.

"நமது தமிழ்ப் பண்டிதர் கம்பராமாயணத்தில் கருப்பொருள் தேடவும், திருவிளையாடல் புராணத்துக்கு 77 ஆவது உரை எழுதவும், பெரிய புராணத்துக்கு 113 ஆவது உரை எழுதவும் தான் தகுதியுடையவர் களாகவும் கவலை உடையவர்களாகவும்" உள்ளதைக் கண்டிக்கிறார். "இந்த நாட்டில் உண்மைத் தமிழ் இரத்தம் ஓடும் மக்கள் ஒருவர் இருவராவது இருக்கிறார்களா என்றே சந்தேகப்பட வேண்டியிருக்கிறது" என்கிறார், பெரியார்

தோழர் மணியரசன் பெருமிதத்தோடு குறிப்பிடுவதைப்போல, தமிழறிஞர்கள் இந்தி எதிர்ப்புக்கு வழிகாட்டியிருந்தால் இந்தக் கோபம் பெரியாருக்கு எப்படி வந்திருக்க முடியும்?

"ஆகையால், ஆங்காங்குள்ள தமிழ் மக்கள் பொதுக் கூட்டம் போட்டு, இந்த சூழ்ச்சியைக் கண்டித்துத் தீர்மானம் போட்டு மேன்மை தங்கிய கவர்னருக்கும், தமிழ் வேளாள மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கும், ஆரிய மந்திரி கனம் ஆச்சாரியாருக்கும், பத்திரிகை களுக்கும் தெரியப்படுத்த வேண்டும்" என்று 22.8.1937 'குடிஅரசில்' தலையங்கமாக எழுதுகிறார்.

அப்படிப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க, 27.8.1937 அன்று கரந்தை தமிழ்ச் சங்கத்தில் நடத்தப்பட்ட இந்தி எதிர்ப்புக் கூட்டத்தைத்தான் 10.8.1937இல் இராஜாஜியின் கட்டாய இந்தி எதிர்ப்பு அறிவிப்புக்கு எதிரான முதல் எதிர்வினை என்றும், பெரியார் அதற்குப் பின்னரே இந்தி எதிர்ப்புப் போரில் இணைந்து கொண்டார் என்கிறார்கள் இந்த அறிஞர்கள்! பிறருக்கு ஆலோசனை சொன்னதோடு நிறுத்திக் கொள்ளவில்லை பெரியார். 1.7.1937 முதல், நாளேடாக மாற்றப்பட்டு வெளிவந்து கொண்டிருந்த தமது 'விடுதலை'யில் ஏற்கெனவே வெளியிடப்பட்டிருந்த யோசனையை இத்தலையங்கத்தில் மீண்டும் எடுத்துரைக்கிறார்.

"திருநெல்வேலியிலிருந்து ஒரு 'ஜாதா' அதாவது தமிழ் பாஷை அபிமானம் கொண்ட மக்கள் முறையீட்டுக் கூட்டம் ஒன்று தொடங்கி, நேரே சென்னை வரையில் கால்நடையாய் நடந்து, வழியில் ஆங்காங்கு கூட்டம் போட்டு, தீர்மானமும் செய்து மக்களுக்கு இந்திப் புரட்டையும் சூழ்ச்சியையும் விளக்கிக் கொண்டுபோய் சரணாகதி மந்திரிகளுக்குத் தெரிவித்துத் தமிழைக் காப்பாற்றவும், விரோதமான சூழ்ச்சியை அழிக்கவும் முயற்சிக்க வேண்டியது முக்கிய கடமையாகும்" என்ற செயல் திட்டத்தையும் முன் வைக்கிறார்.

இராஜாஜி 10.08.1937இல் அறிவித்திருந்தாலும் கட்டாய இந்தி, அடுத்த கல்வியாண்டில், அதாவது 01.06.1938இல் பள்ளிகள் கோடை விடுமுறைக்குப்பின் பள்ளிகள் திறக்கப்பட்ட பின்னர்தான் நடைமுறைக்கு வந்தது. 03.06.1938 அன்று சுயமரியாதை இயக்க முன்னணித் தலைவரும், இந்தி எதிர்ப்புப் போரின் முதல் சர்வாதிகாரியாக அறிவிக்கப்பட்ட வருமான செ.தெ. நாயகம், சண்முகானந்த அடிகள் ஆகியோர் கைது செய்யப்பட்டு இரண்டு மாத சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

## இந்தி எதிர்ப்பு பிரச்சாரப் படை

சுயமரியாதை இயக்க முன்னோடிகளான 'நகர தூதன்' ஆசிரியர் மணவை திருமலைசாமி, பட்டுக்கோட்டை அழகிரிசாமி, மூவலூர் இராமாமிர்தத் தம்மாள், ஐ.குமாரசாமிப் பிள்ளை முதலிய 100 பேர்களைக் கொண்ட இந்தி எதிர்ப்பு கால்நடைப் பிரச்சாரப் படை 01.08.1938 அன்று திருச்சி உறையூரிலிருந்து புறப்பட்டு, 42 நாள்கள், 87 பொதுக் கூட்டங் களை நடத்தி, 928 கிலோ மீட்டர்கள் பயணித்து 11.09.1938 அன்று சென்னையை அடைந்தது. அங்கு நடந்த இந்தி பிரச்சாரப் படையை வரவேற்று சென்னை கடற்கரையில் மறைமலை அடிகள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில்தான் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம் முதன்முறையாக பெரியாரால் முன் வைக்கப்பட்டது.

நாவலர் சோமசுந்தர பாரதியார், ரெவரண்த் அருள் தங்கையா, மூவலூர் இராமாமிர்தத்தம்மாள், பண்டிதை நாராயணி அம்மையார், வ.பா. தாமரைக் கண்ணி அம்மையார், வேலூர் ஷர்புதீன், திருப்பூர் மொய்தீன் போன்ற தலைவர்களும், தமிழறிஞர்களும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். இவ் வரவேற்புக் கூட்டத்தில் தமிழறிஞர்கள் இருக்கிறார்களே என்று சிலர் அய்யுறக்கூடும். இப்பத்திக்கு இரண்டுப்

பத்திக்கு முன்னால் குறிப்பிடப்பட்ட ‘குடிஅரசு’ தலையங்கத்தின் இறுதிப் பகுதியையும், அடுத்துவரும் பத்தியையும் படித்தால் அந்த அய்யம் தீரும்.

“இந்த சமயம் தமிழ் மக்கள் தூங்கி இருப்பார்களேயானால் தமிழ் மக்கள் பின்னால் உண்மையிலேயே சூத்திரர்களாகவே ஆகிவிட வேண்டிவரும். இதில் காங்கிரஸ், ஜஸ்டிஸ், சுயமரியாதை என்ற பிரிவுகளோ, ஆஸ்திகம், நாஸ்திகம் என்ற உணர்ச்சிகளோ, சைவம், வைணவம் என்கின்ற சமய பேதமோ வேண்டியதில்லை என்பதோடு, ஆரியரல்லாத தமிழ் மக்கள் யாவரும் ஒன்று கூடி முயற்சித்து வேலை செய்ய வேண்டியது அவசியமும் அவசரமுமான காரியம் என்பதை கவலையோடு தெரிவித்துக் கொள்கிறோம்” என்று முடிக்கும் அந்த தலையங்கத்தின் வழியாக பொது எதிரியாக தமிழ் மக்களுக்கு வருகின்ற இந்தித் திணிப்பை எல்லா வேறுபாடுகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு எதிர்ப்போம் என்ற அரவணைக்கும் போக்கு பெரியாரிடமும், அழைப்பை ஏற்று இணையும் பெருந்தன்மை ஆஸ்திக, சைவ, காங்கிரஸ் தலைவர்களுக்கும் இருந்துள்ளது என்பதை அறிய முடியும். அந்த சிந்தனைப் போக்கு நாம் பெருமையோடு எண்ணவும், பேணிக் காக்கவும், நம் தலைமுறைக்கு விட்டுச் சென்ற ஆழமான பாடமாகவே நாம் கருத வேண்டும்.

## தமிழ்நாடு தமிழருக்கே குறித்து

மேலும் தோழர் மணியரசன் அவ்வுரையில் ‘தமிழ்நாடு தமிழருக்கே’ முழக்கம் முதன்முதலில் எழுப்பியது பற்றி பேசியுள்ளதைக் குறித்தும் சில விளக்கங்களைத் தர விரும்புகிறோம்.

முதலில் தோழர் மணியரசன் கூறுவதைப் பார்ப்போம். 1938-ல் சென்னையில் நடந்த இந்தி எதிர்ப்புப் பொதுக் கூட்டத்தில் ‘தமிழ்நாடு தமிழருக்கே!’ என்ற முழக்கம் எழுப்பப்பட்டது. அந்நிகழ்வு பற்றி தி.மு.க.வின் முதன்மைத் தலைவர்களில் ஒருவராக விளங்கிய நாவலர். இரா.நெடுஞ் செழியன் எழுதிய ‘தி.மு.க’ என்ற தலைப்பில் உள்ள நூலில் கூறுவதைப் பாருங்கள்.

“இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து தமிழகம் தனியே பிரிய வேண்டும் என்ற கருத்து இந்தி எதிர்ப்பின் விளைவாக 1938-ல் உருவாகியது. இந்தியாவின் தேசிய மொழியாகவும், ஆட்சி மொழியாகவும், பொது மொழியாகவும் ஆக்கிடும் நோக்கத்தில் தமிழகத்தில் கட்டாய இந்தி புகுத்தப்பட்ட நேரத்தில், தமிழார்வம் கொண்ட பேரறிஞர்களும், பொது மக்களும் அந்த கட்டாய இந்தியைத் தீவிரமாக எதிர்க்கும் பணியில் ஈடுபட்டார்கள். இந்தி எதிர்ப்பு தமிழகத்தின் பல பகுதிகளிலும் ஓங்கி வளரத் தொடங்கியது.

1937-ஆம் ஆண்டில் ஆச்சாரியார் முதலமைச்சராக இருந்த காலத்தில் தோன்றிய இந்தி எதிர்ப்பு இயக்கம் மக்கள் உள்ளத்தில் தமிழார்வத்தையும், தமிழனின் பண்டைய பெருமைகளையும், அவன் ஆண்டு புகழ் பெற்ற வரலாறுகளையும், தமிழிலக்கியங்களின் சிறப்புகளையும் தூவியது. வடநாட்டு இந்தி ஏகாதிபத்திய ஆதிக்கம், வடநாட்டு

அரசியல் ஆதிக்கத்தையும், பொருளாதார ஆதிக்கத்தையும், வாணிக ஆதிக்கத்தையும் நாளடைவில் தமிழ்ப் பேரறிஞர்களுக்கு உணர்த்திற்று. அதன் விளைவாக 1938 ஆம் ஆண்டு மே திங்களில் சென்னைக் கடற்கரையில் கூட்டப் பெற்ற மாபெரும் இந்தி எதிர்ப்புப் பொதுக் கூட்டத்தில் 'தமிழ்நாடு தமிழருக்கே ஆக வேண்டும்' என்ற தீர்மானத்தை முன்மொழிந்தவர் பேராசிரியர் மறைமலையடிகள் ஆவார்கள். அதனை வழிமொழிந்து பேசியவர்கள் பெரியார் இராமசாமி, ச.சோமசுந்தர பாரதியார் ஆவார்கள்.

நாவலர். நெடுஞ்செழியன் அவர்களின் இந்தக் கூற்று நான் கையில் வைத்துள்ள 'தி.மு.க.' என்று பெயர் தாங்கிய நூலில் உள்ளது. அந்நூலை நாவலர் நெடுஞ்செழியன் எழுதியுள்ளார். அந்நூல் 1961 ஆம் ஆண்டு முதல் பதிப்பாக வந்துள்ளது. நான் படித்த பகுதி இந்நூலின் 10, 11 பக்கங்களில் உள்ளது. இந்த இடத்தில் இரண்டு கருத்துகளைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். தனித் தமிழ்நாட்டிற்கான முதற்குரல் கொடுத்தவர்கள் தமிழறிஞர்கள். இக்குரல் அறிஞர்கள் குரலாக மட்டும் சுருங்கி விடாமல் அதனை மக்கள் குரலாகப் பரப்பியவர் பெரியார்."

இது தான் தோழர் மணியரசன் உரையில் இருந்து இப்போது நாம் எடுத்துக் கொள்ளும் பகுதியாகும்.

## தி.க.- தி.மு.க.வின் வெவ்வேறு நிலைப்பாடுகள்

முதலில் தோழர் மணியரசன் ஆதாரமாகக் கையாண்டிருக்கும், நாவலர் இரா.நெடுஞ்செழியன் எழுதியுள்ள 'தி.மு.க.' என்ற தலைப்பிலான நூல் குறித்தும், அது எழுதப்பட்ட காலம் குறித்தும் பார்ப்போம்.

"1949-ல் அண்ணாவும், அவருடன் பல முன்னணி தோழர்களும் பெரியாரிடம் இருந்து பிரிந்து சென்று திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு புதிய அமைப்பைக் கண்டனர். தொடக்கத்தில் எங்களுக்கும் தலைவர் பெரியார்தான்; எனவே தி.மு.க.வுக்கு பொதுச் செயலாளர் மட்டுமே இருப்பார்; தலைவர் நாற்காலி காலியாகவே இருக்கும் என்று கூறினார்கள். 'ஆலுக்கு விழுதாக இருப்போமேயன்றி வாழைக்குக் கன்றாக இருக்க மாட்டோம்' என்றார்கள். அதாவது "பெரியாரின் சமுதாயப் புரட்சிப் பணிகளுக்கு ஆதரவாக ('ஆலுக்கு விழுதாக') தி.மு.க. நிற்குமே அன்றி, தங்கள் வளர்ச்சிக்காகத் தங்களை உருவாக்கிய பெரியாரின் இயக்கத்தை அழிப்பவர்களாக ('வாழைக்குக் கன்றாக') இருக்க மாட்டோம்" என்றார்கள். தி.க.வும், தி.மு.க.வும் ஒரே இலட்சியத்தைக் கொண்ட இரு வேறு இயக்கங்கள்;

இலக்கு ஒன்று தான். இயக்கங்கள் தான் இரண்டு என்பதை "தி.க.வும் தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கி" என்று கூறிக் கொண்டார்கள். என்றாலும், மக்களைக் கூறு போட்டு, மேல் கீழாக அடுக்கி, ஜாதிய அடுக்கின் உச்சியில் அமர்ந்து கொண்டு, அக்கட்டமைப்பைத் தங்கள் தன்னலனுக்காக புனிதம், வேதம், கடவுள், புராணம் என்றெல்லாம் புளுகி, அந்த ஜாதியக் கட்டமைப்பைக் காப்பாற்றத் துடிக்கும் ஆரியருக்கு (பார்ப்பனருக்கு) எதிராக 'திராவிடர்' என்ற அடையாளத்துக்குள், ஆரியப் பண்பாட்டால் நசுக்கப்படும் 'சூத்திரர்களை' ஒன்று திரட்டி நடத்தி வந்த சமுதாயப் புரட்சிக்கு, பண்பாட்டுப் புரட்சிக்கென பெரியாரும், சுயமரியாதை இயக்கமும் முன்னிறுத்தி வந்த எதிர்வுகளான ஆரியர், திராவிடர் என்பதைப் புறக்கணித்தனர்.

வடக்கு, தெற்கு என, நிலப்பரப்புகளை எதிர்வுகளாகக் காட்டி (வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது) பெரியாரின் பண்பாட்டுப் போரைக் குழப்பியடித்தனர். இப்போக்கைப் பெரியார் கடுமையாக விமர்சித்தார்.

"சும்மா வடக்கு வாழுது, தெற்கு தேயுது என்று கூறித் திரிவதுதானா பொதுத் தொண்டு? அடே! பார்ப்பான் வாழ்கின்றான்; தமிழன் தேய்கின்றான் என்று எடுத்துச் சொல்லி, அதற்குப் பரிகாரம் காணுவது அல்லவா பொதுத் தொண்டாகும்" என்றார் பெரியார். (விடுதலை 27.04.1961) இன்று 'வாழும் வடக்குக்கு' தங்களை, தங்கள் ஊழல் சொத்தைக் காத்துக் கொள்ள வால்பிடித்து நிற்பது வேறு செய்தி.

திராவிடர் முன்னேற்றக் கழகம் என்று பெயர் சூட்டாமல் புதுக் கட்சிக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் என்று வைத்துக் கொண்டதற்கு அண்ணா விளக்கமும் தந்தார். "திராவிடர் முன்னேற்றக் கழகம் என்று கூறும் பொழுது அதில் திராவிடர் மட்டுமே அங்கம் பெறலாம் என்று எழுப்புவதாக அமைந்து விடுகிறது. இப்போதுள்ள உலகச் சூழ்நிலைக்கு, காலப் போக்குக்கு இது உகந்ததாக எனக்குப் படவில்லை. நம்முடைய கட்சியின் இலட்சியம் திராவிட நாட்டை செழுமையான பூமியாகப் பேணிக் காப்பதாகும். அத்தகைய திராவிட மண்ணில் திராவிடர் மட்டுமே வாழலாம் என்று வரையறை செய்வது குறுகிய நோக்கமாகும். இங்கே திராவிடமும் வாழலாம்; ஆரியமும் வாழலாம்" - 17.09.1949 சென்னை ராபின்சன் பூங்காவில் நடை பெற்ற தி.மு.க. தொடக்க விழா பொதுக் கூட்டத்தில் 'அண்ணா' பேசியது.

## விநாயகர் பொம்மை உடைப்பில் தி.மு.க.வின் நிலைப்பாடு

ஆரியப் பண்பாட்டு நிறுவனமான இந்து மதத்தின் முதன்மைக் கடவுளாக நிறுத்தப்படுவது விநாயகர். ஆரிய அரசியல் கட்டமைப்பான

இந்தியாவைக் காப்பாற்ற ‘மொழிவழித் தேசியம்’ என்பதை மறுத்து ‘பண்பாட்டுத் தேசியம்’ எனக் கூறி திசை திருப்பும் பெரும்பான்மை வாதம் பேசும் இந்து மத வெறியர்கள், சிறுபான்மை மக்களுக்கு எதிரான உளவியல் உருவாக்கத்துக்கு இப்போதும் பயன்படும் முதன்மை விழாவும் விநாயகர் ஊர்வலம் தான்.

இந்துமத அடிமைத் தளையிலிருந்து தாழ்த்தப்பட்டோர் விடுதலை பெற புரட்சியாளர் அம்பேத்கர் தேர்ந்தெடுத்து, 1956-ல் தன்னை இணைத்துக் கொண்ட மார்க்கம் புத்த மார்க்கம் ஆகும்.

இரண்டு செய்திகளையும் இணைப்பது போல 1953 ஆம் ஆண்டு புத்தர் பிறந்தநாள் (27.05.1953) அன்று மாலை 6.30 மணிக்கு “என்னை கீழ் ஜாதியாகப் பிறப்பித்ததற்காக உடைக்கிறேன்; என்னைச் சூத்திரன், வேசிமகன் என்று கற்பித்ததற்காக உடைக்கிறேன் என்று கூறியவாறே, தங்கள் செலவில் செய்த / வாங்கிய பிள்ளையார் பொம்மைகளை உடையுங்கள்” என்று பெரியார் அறிவித்தார்.

ஆனால் ஆலுக்கு விழுதாக இருப்போம் என்று சொன்ன தி.மு.க., “நாங்கள் பிள்ளையாரையும் உடைக்க மாட்டோம்; பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்க மாட்டோம்” என்று குதர்க்கம் பேசியது.

அந்த சமயங்களில் தி.மு.க.வே கூட ஆரியராவது திராவிடராவது என்று பேசத் தொடங்கியிருந்த காலம். அதற்குப் பதில் சொல்லும் வகையில் தருமபுரி மாவட்டம் பொம்மிடியில் ஆற்றிய சொற்பொழிவில் பெரியார் விளக்கம் சொன்னார். (விடுதலை 07.09.1953) அதாவது “இன்றைய தினம் ஆரியர் திராவிடர் என்ற பிரிவினை இரத்தப் பரீட்சையின் பேரில் அல்ல; அல்லாமல் கலாச்சார, பழக்கவழக்க, அனுஷ்டானத்தின் படியாகும் என்பதை அனைவரும் உணர வேண்டும்” என்கிறோம். “இந்த காங்கிரசுக்காரர்கள், கம்யூனிஸ்டுகள் என்பவர்கள் மாத்திரம் இந்தப்படி ஆரியராவது, திராவிடராவது என்று கேட்பதுடன், பார்ப்பனர்களை அய்யர்கள் என்று சொல்லிக் கொள்வதோடு, நம்மவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற, நம்மிடமிருந்து பிரிந்து போனவர்களும் இந்தப்படியே, இந்த நாட்டுப் பார்ப்பனர்கள் ஆரியர்கள் அல்ல என்பதாகச் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். காங்கிரஸ், கம்யூனிஸ்த் என்ன? சோஷலிஸ்டுகள் எல்லோரும் பார்ப்பன ஆதிக்கத்திலுள்ள கட்சிகள் தான்; இன்னும் கொஞ்ச நாளில் கண்ணீர் துளிகளுக்கும் (தி.மு.க.வுக்கும்) அவனே தலைவனாகி விடுவான்.” என்ற அளவுக்குக் கடுமையாகப் பெரியார் விமர்சிக்கிறார். தி,மு.க.வுக்குப் பார்ப்பனத் தலைமை இன்று வரை ஏற்படவில்லை என்றாலும், அதிலிருந்து

பிரிந்து போன அண்ணா தி.மு.க.வுக்கு 1980களின் இறுதியில் ஏற்பட்டதை நாமறிவோம்.

## கத்தி வைத்துக் கொள்ளுங்கள் !

அடுத்ததாக, 1953 அக்டோபரில் ஆத்தூரில் நடந்த மாநாட்டில், ஆரியர்கள் தூண்டி விடும் வன்முறைகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள "திராவிடர் கழகத்தவர் அனைவரும் 6 அங்குல நீளத்துக்குக் குறையாத கத்தி வைத்துக் கொள்ளுங்கள்" என தீர்மானித்தது திராவிடர் கழகம். தி.மு.க.வோ "கத்தியைத் தீட்டாதே, தம்பி! புத்தியைத் தீட்டு" என்று குறுக்குசால் ஓட்டியது. யார் யாருக்கு எது மழுங்கியிருக்கிறதோ அதைத் தீட்டிக் கொள்ளட்டும் என்றார் பெரியார்.

'கடவுளே இல்லை' என்ற கொள்கை கொண்ட திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து போனவர்கள் "ஒன்றே குலம்; ஒருவனே தேவன்" என்ற திருமூலரின் வரிகளை, ஒரு திரைப்படத்தின் முடிவில் அண்ணா பயன்படுத்த, அதையே தங்கள் கடவுள் கொள்கை என்பது போல் காட்டிக் கொள்ளத் தொடங்கினர் தி.மு.க.வினர்.

அண்ணா எழுதிய 'வேலைக்காரி' நாடகம் 'ஜமீன்தார் வேதாசல முதலியார்' மனம் திருந்தி பேசும் வசனட்தோடு நிறைவு பெறும். அந்த வசனம்: 'பணத் திமிரும் ஜாதித் திமிரும் ஒழிய வேண்டும்' என்றும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றும் நாட்டு மக்களுக்கு உரைப்போம். "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" இப்படி முடிக்கப்பட்டது அந்த நாடகம்.

அதற்கு எதிர்வினையாக "கடவுளே இல்லாத கட்சியிலிருந்து பிரிந்த அவன் கண்ட முன்னேற்றம், ஒரு கடவுள் உண்டு என்பது தான்" என்றார் பெரியார். (விடுதலை 10.07.1960)

"1959-ல் கும்பகோணத்தில் நடந்த நிதியளிப்புக் கூட்டத்தில், "ஒரு கடவுள் உண்டு என்றும், அதனைக் கும்பிடுங்கள்" என்றும் பெரியார் கூறியதாக ஒரு தி.மு.க. ஏடு எழுதியது. அதற்குக் 'கண்ணீர்த் துளி' (தி.மு.க.) பத்திரிக்கை ஒன்று, "அண்ணா பாதையில் பெரியார் வந்து விட்டார்" என்று ஈனத்தனமான முறையில் சேதி வெளியிட்டுள்ளது.

கண்ணீர்த் துளிகள் அதுவரை ஒரு கடவுள் என்று கூறினார்களாம்! நான் இல்லை என்று மறுத்து வந்தேனாம்! இன்று தான் தவறை உணர்ந்து ஒரு கடவுள் என்ற அவர்களின் வழிக்கு வந்திருக்கிறேனாம்! பத்திரிக்கைக்காரன்களில் எவனும் யோக்கியன் கிடையாது. எல்லோரும் இப்படிப்பட்ட அயோக்கியனாகத்தான் ஆகிவிடுகிறான். நானும் மானங்

கெடத்தான் இவர்களைப் பற்றிப் பேசுகிறேன். ஒருவனுக்காவது மான ஈனத்தைப் பற்றிக் கவலையே இல்லையே!'' ('விடுதலை' 24.11.1959) என்று பெரியார் கடுமையாகச் சாடினார்.

தங்கள் சுயநலத்துக்கே எனினும், அன்றைய இந்து சமுதாயத்தில் நிலவி வந்த உடன்கட்டை ஏறல், குழந்தை மணம், நரபலி, தேவதாசி முறை ஆகிய காட்டுமிராண்டி முறைகளைத் தடை செய்தும், காலங்காலமாகக் கல்வி மறுக்கப்பட்டு வந்த உழைக்கும் மக்களுக்குப் பொதுக்கல்வி முறையைக் கொண்டு வந்தும் இருந்தனர் ஆங்கிலேயர். தங்களின் மதப்பிடி தளருகிறது என்று கருதி தங்கள் வேதகால மேட்டிமைகளை மீட்டு நிறுவும் வஞ்சக நோக்கத்தோடு ''விடுதலைப் போராட்டம்'' என்ற வேடம் பூண்டு நயவஞ்சகப் பார்ப்பனர்களும், சுரண்டல் பனியாக்களும் நடித்து வந்தனர்.

சமூக சமத்துவம் நோக்கி நகர்வதற்கு, பெரும்பான்மை உழைக்கும் மக்கள், அடித்தட்டு மக்கள் போதிய விழிப்புணர்வும், கல்வியறிவும் பெற்று நிலைப்படுத்திக் கொள்வதற்கு முன்பாக, காங்கிரஸ் என்ற பார்ப்பன-பனியா கூட்டத்தார் கைக்கு நாடு போய் விடுவது ஆபத்து என்று கருதினார்கள் பெரியார், அம்பேத்கர் போன்ற மக்கள் தலைவர்கள். அவ்வடிப்படையிலேயே 'சுதந்திர' நாளை, துக்க நாள் என்றார் பெரியார். அந்நாளை இன்ப நாளாக அறிவித்தார் அண்ணா - அன்று தொடங்கி ஏட்டிக்குப் போட்டியாகவே செயல்பட்டு வந்தது தி.மு.க.

இந்தி எதிர்ப்பு, வகுப்புவாரி உரிமை, இராமாயண எதிர்ப்புப் பரப்புரை செய்து வந்த சுயமரியாதை இயக்கத்தை விட்டு வெளியேறியதும், இந்தித் திணிப்பை ஆதரித்து வகுப்புவாரி உரிமையை எதிர்த்து, கம்பராமாயணத்தில் பொதுவுடைமைத் தத்துவத்தைக் 'கண்டறிந்து' கம்பராமாயணப் பரப்புரை செய்தார் ஜீவா. அதேபோல், பணக்காரக் கட்சியான நீதிக்கட்சியுடன் சுயமரியாதை இயக்கம் உறவு வைத்திருப்பதைக் குறை கூறிவிட்டு, நீதிக்கட்சிக்கிருந்த பார்ப்பனரல்லாதார் உணர்வும், வகுப்புவாரி உரிமை ஏற்பும் இல்லாத பெரும்கொள்ளை பணக்காரர்கள் நிரம்பிய காங்கிரஸ் கட்சியில் சந்தா உறுப்பினராகி 1937 தேர்தலில் காங்கிரசுக்கு தேர்தல் பரப்புரையும் செய்தார் ஜீவா. அவரைப் போலவே வகுப்புவாரி உரிமை எதிர்ப்பு, இந்தி ஆதரவு, ''இது அரசியல் கட்சியல்ல; வருணாசிரம(அ)தர்மம் காக்க வந்த கட்சி'' என பெரியாரால் குறிப்பிடப்பட்ட இராசாசியின் சுதந்திராக் கட்சியுடன் உறவு என எதிரும் புதிருமாக எல்லாவற்றையும் பார்க்கவும் பேசவுமாக நடக்கவுமாக இருந்தது தி.மு.க.

பார்ப்பனர்களை உறுப்பினர்களாக சேர்ப்பதில்லை என்ற கொள்கையோடிருந்த தி.மு.க. பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொள்வது

என்றும் முன்னரே முடிவெடுத்திருந்தது. அதன் அடிப்படையில் கழகத்தின் சட்ட திட்டக் குழுவில் ஈ.வெ.கி. சம்பத், மு.கருணாநிதி, இரா. செழியன் ஆகிய மூவரோடு, பார்ப்பன வழக்குரைஞரான வி.பி.ராமனையும் இணைத்துக் கொண்டது தி.மு.க.வின் செயற்குழு. (அவரது மகன் பி.எஸ். இராமன் தான் தி.மு.க.வின் 2006-2011 ஆட்சியின் போது அரசு தலைமை வழக்குரைஞராக நியமிக்கப்பட்டிருந்தார்.)

பிரிந்து போன 1949 ஆம் ஆண்டிலிருந்து சமுதாய இயக்கமாகவே தொடரும் என்று அறிவித்திருந்த தி.மு.க., 1956இல் நடந்த தனது மாநில மாநாட்டில் தேர்தலில் ஈடுபடுவது என முடிவெடுத்து, 1957-ல் நடைபெற்ற சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டது.

அப்போது பெரியார், “சாதி ஒழிய வேண்டுமெனில் சட்டசபைக்குப் போய் பயனில்லை; கண்ணீர்த் துளிகளை (தி.மு.க.வை)க் கேட்கின்றேன், திராவிட நாட்டுக் கொள்கை என்ன? சட்டசபை போகக் கூடாது என்பது தானே! நீங்களும் இதற்கு முன் சட்டசபை போக வேண்டும் என்று கூறினவர்களைப் பார்த்து பித்தலாட்டம் செய்யப் போகிறார்கள்; வயிறு வளர்க்கப் போகிறார்கள் என்று ஊர் ஊராகப் பிரச்சாரம் செய்தவர்கள் தானே? அப்படிப் பிரச்சாரம் செய்துவிட்டு இப்போது ‘முன்னேற்றம்’ என்று பெயர் வைத்துக் கொண்டு இம்மாதிரி மக்களை ஏமாற்றினால் இது முன்னேற்றமா? பின்னேற்றமா?” (விடுதலை 12.09.1956) என்று கேட்டார்.

தேர்தலில் போட்டியிடுவதாக முடிவு செய்த பின்னர் தி.மு.க.வின் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களையும் சுட்டிக்காட்டி சாடி வந்தார் பெரியார். பார்ப்பனர்கள் என்பதைத் தங்கள் இதழ்களில் ’பிராமணர்கள்’ என்று எழுதத் தொடங்கியிருந்தது தி.மு.க.

“சட்டசபைக்குப் போக வேண்டுமானால் பார்ப்பானுடைய தயவு வேண்டும். தான் எழுதும் பத்திரிக்கையில் ‘பிராமணர்கள்’ என்று தான் எழுத இயலும். இதைத் தானே காண்கிறோம். இந்த ஈனப்பிறவிகளால் எப்படி நமக்குள்ள உரிமைகளைத் துணிந்து கேட்கவோ, எழுதவோ முடியும்?” (விடுதலை 05.05.1957) என்ற கேள்வியை எழுப்பினார் பெரியார்.

தான் செல்லுகிற இடங்களில் எல்லாம் பொது மக்களிடம் தொடர்ந்து ‘பார்ப்பானை’ பிராமணன் என்று அழையாதீர்கள் என்ற வேண்டுகோளை வைத்து வந்தவர் பெரியார்.

*“உங்களுக்கு உறுதியாக இறுதியாக ஒன்றைக் கூறுகிறேன்; மறந்தும் உங்கள் வாயில் ‘பிராமணன்’*

*என்று வரக் கூடாது; 'பார்ப்பான்' என்று கூறுங்கள். கண்டிப்பாக பிராமணன் என்று கூறக் கூடாது. கண்ணீர்த் துளிகள் (தி.மு.க.) 'பிராமணன்' என்பதைத் தவிர வேறு வார்த்தையை உபயோகிக்க மாட்டார்கள்'' (விடுதலை 30.06.1957)*

*''கண்ணீர்த் துளிகள் (தி.மு.க.) நாடு பிரிய வேண்டும் என்று சொல்லுகின்றான் என்றால் அது புரட்டு. எலெக்ஷனுக்கு நிற்கும் போது தேர்தல் விஞ்ஞானம் (அறிக்கை) - எலெக்ஷன் மேனி பெஸ்டோ போட்டான். அதில் நாடு பிரிய வேண்டும் என்ற பேச்சே இல்லை. இராஜாஜி சொன்னதைத் தான் சொன்னான்.'' (விடுதலை 27.10.1957)*

*''கண்ணீர்த் துளிகள் பார்ப்பானைப் பற்றி சாமியைப் பற்றி மூச்சு விடுகிறார்களா? பார்ப்பான் தயவில் ஓட்டுப் பிச்சை பெற்றுப் பதவிக்குப் போக வேண்டும் என்றே கட்சி வைத்துக் கொண்டிருக் கிறார்கள்'' (விடுதலை 07.01.1959)*

*''இந்தக் கண்ணீர்த் துளிகள் கட்சியையே எடுத்துக் கொள்ளுங்கள்! இராவணனுக்கு எதிராக இராமன் காலடியில் எப்படி விபீடணன் விழுந்தா னோ, அது போல் இந்தக் கண்ணீர்த் துளிகள் பார்ப் பானின் அடிமைகளாக இருக்கிறார்கள். திராவிடர் கழகம் என்றாலே பார்ப்பான் வாசனை இருக்கக் கூடாது. பெயர் தான் திராவிட முன்னேற்றக் கழகம். பெயர் வைத்துக் கொண்டார்களே தவிர, மற்றபடி பார்ப்பானிடத்தில் பூரணமாக அய்க்கியமாகி விட் டார்கள். இன்றைக்குக் கண்ணீர்த் துளிகள் கட்சியின் வழிகாட்டியே பார்ப்பான் (இராஜாஜி) தான். அந்தக் கட்சிக்குப் பொதுச் செயலாளராக ஒரு பார்ப்பானைத் தான் கொண்டு வரப் போகிறார்கள். எங்களுக்குப் பயந்து கொண்டு வரலாமா? வேண்டாமா? என்று இருக்கிறார்கள்.'' (விடுதலை 28.09.1959)*

*''இந்தக் கண்ணீர்த் துளிகள் உங்களிடம் வந்து நாங்களும் திராவிடர் கழகத்தினர் தான்; முன்னேற்றம் அவ்வளவு தான் என்கிறார்களே! என்ன*

*முன்னேற்றம்? நான் பார்ப்பானைச் சேர்க்கக் கூடாது என்றால் நீ அவனைக் கட்சியில் சேர்த்துக் கொண்டாய்! தேர்தல் கூடாது என்று நான் கூறினால் நீ சட்ட சபைக்கு நிற்கிறாய்! இது சுதந்திரம் இல்லை, ஜனநாயகம் இல்லை என்று நான் கூறினால் நீ இல்லை, இல்லை, இது ஜனநாயகம் தான் என்று கூறி ஓட்டுக் கேட்கிறாய்! இதுவா முன்னேற்றம்!''*

*விடுதலை 28.10.1959*)

1938-ல் தமிழ்நாடு விடுதலை பற்றிப் பேசிய பெரியார், அப்போது இருந்த சென்னை மாகாணம் தமிழ்நாடு முழுவதும், தெலுங்குப் பகுதி 7 மாவட்டங்கள், கன்னடப் பகுதி 1 மாவட்டம், மலையாளப் பகுதி 1 மாவட்டம் ஆகியவற்றைக் கொண்டதாகும். இப்போதைய ஆந்திர, கன்னட, கேரள மாநிலங்களில் பிற பகுதிகள் அப்போது கொச்சி, திருவாங்கூர், மைசூர் அரசர்கள், அய்தராபாத் நிஜாம் ஆகியோரின் ஆட்சியில் இருந்தன. பெரியாரும் அதுவரை சென்னை மாகாணம் என்கிற அரசியல் நிலப்பரப்பில் 1956 வரை இருந்து வந்த தெலுங்கு, மலையாள, கன்னடர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு கருதி 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று மாற்றியமைத்துக் கொண்டிருந்தார்.

மேலும் பெரியார் திராவிட நாடு என்று குறிப்பிட்டது தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா என்ற நான்கு மாநிலங்களும் சேர்ந்த பகுதியை அல்ல; அரசியல் அலகான (Political Unit) சென்னை மாகாணத்தைத்தான் என்கிற போதிலும், பெரியாரைப் பொறுத்த வரை பார்ப்பன-பனியா நலனுக்காக அமைக்கப்பட்டுள்ள அரசியல் கட்டமைப்பிலிருந்து தனியாகப் பிரிந்த தனித் தமிழ்நாடே அவரது இலட்சியமாக விளங்கியது.

1953-ல் சென்னை மாகாணத்திலிருந்த தெலுங்கு மாவட்டங்களை மட்டும் தனியாகப் பிரித்து, நவம்பர் முதல் நாள் ஆந்திர மாநிலம் அமைக்கப் பட்டது. 1956 நவம்பர் முதல் நாளில், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு என மொழி வழி மாநிலங்கள் அமைக்கப்பட்டன. அதன் பின்னர் கோரிக்கையை ''தமிழ்நாடு தமிழருக்கே'' என திருத்தி அமைத்துக் கொண்டார். அக்கோரிக்கையை தனது இறுதி நாள் வரை உறுதியாகப் பரப்பியும் வந்தார். தனித் தமிழ்நாடு கோரிக்கையை வலியுறுத்தி, 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீங்கலான தேசப்பட எரிப்புப் போராட்டத்தை அறிவித்திருந்தார். தானும், தன் அமைப்பும் அப்போராட்டத்தில் கலந்து கொள்வதாக அப்போது 'நாம் தமிழர்' என்ற அமைப்பை நடத்தி வந்த ஆதித்தனாரும் ('தினத்தந்தி' இதழ் உரிமையாளர்) அறிவித்தார்.

அப்போராட்டத்தை விளக்கி ஈரோட்டில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் ஆற்றிய உரை, தி.மு.க. மீதும் அவர்களது திராவிட நாடு கோரிக்கை பற்றிய விமர்சனமாக மட்டுமன்றி, இன்று ‘திராவிடர்’ என்பது குறித்த எந்த புரிதலுமின்றி குதர்க்கம் பேசித் திரிகிற சில ’திடீர்’ தமிழ்த் தேசியர்களுக்கும் பெரியாரின் நிலைப்பாட்டைத் தெளிவாக்கும் ஒன்றாகும்.

‘திராவிடர்’ என்ற சொல்லை மட்டும் வைத்துக் கொண்டு தெலுங்கர், கன்னடர், மலையாளிகள் ஆதிக்கத்தை, தமிழ்நாட்டில் உண்டாக்கி வைத்திருப்பதாகக் கூறும் ‘தூய’ தமிழ் தேசியர்களுக்கும் விளக்கமாக அமையும். அப்படி என்ன தான் கூறுகிறார் பெரியார்? பார்ப்போம்.

- “முன்பு திராவிட நாடு கேட்டார். இப்போது அதை விட்டு விட்டார். தமிழ்நாடு கேட்கிறார்” என்று சிலர் சொல்லுவார்கள். இது பெரும்பாலும் குறும்புக்காகக் கேட்கப்படுகிற கேள்வியாகும்.”
- “தமிழ்நாடு என்பதும் திராவிட நாடு தான். முன்பு தெலுங்கன், மலையாளி, கன்னடியன் எல்லாம் நம்முடன் சேர்ந்து இருந்தான். அவர்கள் எல்லோரும் ஒப்புக் கொள்ளும்படி ‘திராவிட நாடு’ என்று சொன்னோம். இப்போது அவனவன் பிரிந்து அவனவன் தனித் தனி மாநிலம் பெற்று இருக்கின்றான். ‘தமிழ்நாடு’ என்று சொல்லும்படி இப்போது தமிழகம் இருக்கிறது. ஆகவே ‘தமிழ்நாடு’ என்று சொல்லுகிறோம்.”
- “இப்போது திராவிட நாடுகளான நான்கு நாடுகளும் சேர்ந்து தான் ஆக வேண்டுமென்றால் அவர்களுக்குப் பிரிய வேண்டும் என்ற உணர்ச்சி உண்டா? ஏற்பட்டிருக்கிறதா? என்பது ஒருபுறம் இருக் கட்டும். அப்படியே திராவிட நாடு பிரிந்தால் நமக்கென்ன இலாபம்?”
- “இன்று எப்படி தமிழ்நாடு பார்லிமெண்டில் மற்ற 14 நாடுகளுக்கும் அடிமையாக இருக்கிறதோ, அதே போல், நாளை மற்ற 3 நாடு களுக்கும் அடிமையாகத்தான் இருக்க வேண்டி வரும்.”
- “தமிழ்நாடு 3 கோடி ஜனத் தொகை; மலையாளி ஒன்றே கால் கோடி; கன்னடியன் 2 கோடி; ஆந்திராக்காரன் மூன்றரைக் கோடி. இவர்கள் ஒன்று சேர்ந்தால் என்ன நிலை? மற்றவர்கள் ஆறே முக்கால் கோடி, தமிழன் மூன்று கோடி. நாம் மற்றவர்களுக்கு மைனாரிட்டியாகத் தானே இருப்போம்?”
- “அவர்கள் மூன்று பேரும் சேர்ந்து பார்லிமெண்த் மெம்பர்கள் 87 பேர்.

நம் தமிழ்நாட்டுக்கு 41 பேர் தான். அதே மாதிரி சட்டசபை மெம்பர்கள் அவர்கள் மூன்று பேரும் சேர்ந்தால் சுமார் 600 பேர்கள். நமக்கு 207 பேர் தான்."

- "மற்றபடி, கடவுள், மத, சாஸ்திர, இழிவு ஒழிப்பு உணர்ச்சியோ, இந்தியை எதிர்க்கும் உணர்ச்சியோ, அந்த (ஆந்திரம், கேரளம், கன்னடம்) நாட்டுக்காரர்களுக்குக் கிடையாது. அப்புறம் எதற்காக ஒரே இராஜ்ஜியம் (நாடு)? எதற்காகக் கூட்டு வேணும்?"
- "ஆகவே தான், சும்மா திராவிட நாடு என்று சொல்லுவது நம்முடைய காரியத்தைக் கெடுக்கத் தான் பயன்படுமே தவிர, வேறு எதற்கும் பயன்படாது என்பதை அறிய வேண்டும். " - 22.05.1960 ஈரோடு சொற்பொழிவு. (விடுதலை 24.05.1960)

அதே சமயத்தில் "ஒட்டுக்காரனே ! உணர்ந்து பார் !" என்ற தலைப்பில் ஓர் அறிக்கையைப் பெரியார் எழுதுகிறார். அதில், "நாடு பிரிய வேண்டியது தான்; அதை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்; அதற்காகத்தான் சட்டசபைக்குப் போக வேண்டுமென விரும்புகிறோம் என்று சொல்லுகிற சட்டசபை 'சர்வரோக நிவாரணி'(அனைத்து நோய்களையும் தீர்க்கும் மருந்து)க்காரர்களைப் பார்த்து வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்வதாவது" என்று தொடங்கி, "நீ சத்தியம் செய்து ஏற்றுக் கொண்டுள்ள அரசியல் சட்டப்படி சட்டமன்றம், நாடாளுமன்றத்தில் பிரிவினையைப் பற்றிப் பேச முடியுமா? ஒட்டுமொத்த தமிழ்நாடே ஆதரித்தாலும் நாடாளுமன்றத்தில் இதற்கான தீர்மானத்தை நிறைவேற்ற போதிய பலம் உண்டா?" என்றெல்லாம் கேள்வி எழுப்பிவிட்டு "நாடு பிரிவினையில் அவசரமும் அக்கறையும் உங்களுக்கு இருக்குமானால் உங்கள் 'இலட்சியமும் மூச்சும்' அதுவே தான் என்றால் என்ன செய்ய வேண்டும்! சத்தியப் பிரமாணமும், சபாநாயகர் தயவினால் சண்டப் பிரசண்டமும் செய்துவிட்டால் போதுமா? நாடு பிரிந்து விடுமா?" என்பது போன்ற கிடுக்குப் பிடி கேள்விகளைத் தொடர்ச்சியாக எழுப்பி தி.மு.க.வைத் தாக்கி வந்த காலம் தான் 1961.

அது மட்டுமல்ல. பெரியார் பறையர் இனப் பெண்கள் ஜாக்கெத் போடுவதைக் கூட விரும்பவில்லை என்று கலைஞர் கருணாநிதி தனது 'முரசொலி பொங்கல் மலரில்' கார்ட்டூன் போட்டு பழி சுமத்தும் அளவுக்குப் போனார்.

இதற்கான பதிலை, பெரியார் தி.மு.க. நிகழ்ச்சி ஒன்றிலேயே, பின்நாளில் கூறினார் என்பது தனிச் செய்தி. ( இதைப் பெட்டி செய்தியில் காணலாம் )

இவை தாம் 1961 ஆம் ஆண்டில் நிலவி வந்த அரசியல் சூழல்; தி.க. தி.மு.க. உறவு (பகைமை)ச் சூழல்.

## அண்ணா பொது வாழ்க்கைக்கு வந்தது எப்போது?

செங்குந்தர் 12ஆவது மாநாடும், செங்குந்தர் 2ஆவது வாலிபர் மாநாடும் 1934 மே மாதம் 20, 21 ஆம் நாள்களில் திருப்பூரில் நடந்தன. இரண்டாம் நாள் மாநாட்டில் பெரியார் 'சமதர்மம்' என்ற தலைப்பில் உரையாற்றினார். அப்போது நடந்தது தான் அண்ணா-பெரியார் ஆகியோரின் முதல் சந்திப்பு.

“எனக்கு பெரியாரோடு தொடர்பு ஏற்பட்டது 1934 ஆம் ஆண்டில் தான். அப்போது நான் பி.ஏ (ஆனர்ஸ்) தேர்வு எழுதியிருந்தேன். தேர்வு முடிவு தெரியாத நேரம் அது. அப்போது கோவைக்கு அடுத்த திருப்பூரில் ஒரு வாலிபர் மாநாடு நடந்தது. அங்கே தான் நானும் பெரியாரும் முதன்முதலில் சந்தித்துக் கொண்டோம். அவர் மீது எனக்குப் பற்றும் பாசமும் ஏற்பட்டன. அவருடைய சீர்திருத்தக் கருத்துகள் எனக்குப் பிடித்தன. பெரியார் என்னைப் பார்த்து ‘என்ன செய்கிறாய்?’ என்று கேட்டார். ‘படிக்கிறேன், பரீட்சை எழுதியிருக்கிறேன்’ என்றேன். 'உத்தியோகம் பார்க்கப் போகிறாயா?' என்று கேட்டார். ‘இல்லை, உத்தியோகம் பார்க்க விருப்பம் இல்லை. பொது வாழ்வில் ஈடுபட விருப்பம்’ என்று பதிலளித்தேன். அன்று முதல் அவர் என் தலைவர் ஆனார். நான் அவருக்கு சுவீகாரப் புத்திரன் ஆகிவிட்டேன்” என்கிறார் அண்ணா.

ஆனால் அண்ணாவின் பேச்சுகளில் இருந்தும் எழுத்துகளில் இருந்தும், அண்ணாவின் வளர்ப்பு மகனான பரிமளம் தொகுத்த ‘பேரறிஞர் அண்ணாவின் தன்வரலாற்றின்’படி, அண்ணா, சென்னை கோவிந்த நாயக்கர் உயர்நிலைப் பள்ளியில் ஓராண்டு காலம் வேலை பார்த்த பிறகே பொது வாழ்வில் இறங்கினார். அவரது பொது வாழ்வு தேர்தலோடுதான் தொடங்கியது. “1935ஆம் ஆண்டில் நான் சென்னை நகரசபை அங்கத்தினர் தேர்தலுக்கு நின்று தோற்றேன்” என அண்ணாவே குறிப்பிட்டுள்ளார். மேலும் “நாங்கள் அந்தக் கிழமை இதழைத் (நவயுகம்) தொடங்கிய நேரம் காங்கிரஸ் கட்சி தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று வீர உலா வந்து கொண்டிருந்த நேரம். நாங்கள் சேர்ந்திருந்த நீதிக் கட்சியோ பிழைத்திருக்கிறதா இல்லையா என்று ஐயுறத்தக்க நிலைக்கு ஆட்பட்டு தத்தளித்த நேரம்” என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆக, அவர் துவங்கிய பொது வாழ்வு என்பது கட்சி அரசியல் வாழ்வு! தேர்தலில் போட்டியிடும் பொது வாழ்வு தான். ஆக, அவரது பொது வாழ்வு தொடக்கம் சுயமரியாதை இயக்கத்திலிருந்து அல்ல, நீதிக்கட்சியிலிருந்து தான்.

நீதிக்கட்சியின் ஏடான ‘விடுதலை’ பெரியார் பொறுப்புக்கு விடப்பட்டு, அது தினசரி ஆக்கப்பட்டு சென்னையிலிருந்து ஈரோட்டுக்கு மாற்றப்பட்டது. அந்த சமயத்தில் தான் 1937-இல் ‘விடுதலை’யில் பணியாற்ற அண்ணா ஈரோடு போய்ச் சேர்ந்தார். ‘குடிஅரசு’ம் அங்கு நடந்து வந்தது. அதற்கும் துணை நின்றார் அண்ணா. அப்படித்தான் தொடங்கியது பெரியார் அண்ணா நெருக்கம்.

## ‘முனை மழுங்கும்’ ஆதாரங்கள்!

‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற தீர்மானத்தை முன் மொழிந்ததே மறைமலைஅடிகள் என்றும், பெரியார் பின் தொடர்ந்தார் என்றும் நாவலர் நெடுஞ்செழியன் எழுதிய ‘தி.மு.க.’ என்ற நூலிலிருந்து தோழர் பெ.மணியரசன் ஆதாரம் காட்டுகிறார். இது, திராவிடர் கழகத்துக்கும் தி.மு.க.வுக்கும் இடையே ‘முரண்பாடுகள்’ நிறைந்த காலகட்டத்தில் எழுதப்பட்ட நூல். இது குறித்து மேலும் சில வரலாற்றுத் தகவல்களைப் பார்ப்போம்:

1956-லிருந்து 1960 வரை நாவலர் இரா.நெடுஞ் செழியன் தி.மு.க.வின் பொதுச் செயலாளராக இருந்தார். 1961இன் தொடக்கம் தி.மு.க.வில் ஈ.வெ.கி. சம்பத், கலைஞர் கருணாநிதி ஆகியோரிடையே தொடங்கிய உரசல் உச்சத்தை அடைந்த கால கட்டம். பொதுச் செயலாளராக வர எண்ணியிருந்த கலைஞர் வரக் கூடாது என்பதற்காகப் பதவியில் இருப்பவர்கள் (அப்போது கலைஞர் சட்டமன்ற உறுப்பினர்) பொதுச் செயலாளராகக் கூடாது என்ற தீர்மானத்தைத் தீர்மானக் குழு தலைவராக இருந்த ஈ.வெ.கி.சம்பத் கொண்டு வந்தார் (அப்போது ஈ.வெ.கி.சம்பத் நாடாளுமன்ற உறுப்பினர்).

எனவே சம்பத் மதியழகனை நிறுத்த, கலைஞர் சி.பி.சிற்றரசை நிறுத்த முடிவு செய்தனர். குழப்பம் வேண்டாமென அண்ணாவே (அவரும் சட்ட மன்ற உறுப்பினர் தான்) விதிகளைத் தளர்த்தி பொதுச் செயலாளர் ஆனார்.

இந்த உள்கட்சிப் பூசல் தொடங்கியிருந்த கால கட்டத்தில், தி.மு.க. தொடங்கப்பட்டபோது தி.மு.க.வுக்குப் போய், போன வேகத்தில் மீண்டும் பெரியாரிடம் வந்துவிட்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 15.03.1960இல் தனது ‘குயில்’ இதழில் கீழ்க்கண்டவாறு எழுதினார்.

“பெரியார் கழகத்துக்கு சேர்த்து வைத்த பெருந்தொகையே, அவரைச் சுற்றிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் அதை சுருட்டிக் கொண்டு ஓட சிந்திக்க வைக்கிறது” என்றெல்லாம் எழுதிவிட்டு “இன்று பெரியாரின் நிலையை நோக்குவோர் கண்ணீர் விடுவார் என்பதில் அய்யமில்லை. குருசாமி

(குத்தூசி), பொதுச் செயலாளர், விடுதலைக்கு ஆசிரியர். அவர் அந்த இரண்டு ஆயுதங்களையும் வைத்துக் கொண்டு செய்யும் வேலை என்ன தெரியுமா? அண்ணாத்துரை வேலை செய்கிறார். கிளைக் கழகங்கள் எல்லாவற்றிலும் பிரிவினையை ஏற்படுத்திவிட்டார் காலிப் பசங்களை எல்லாம் கையில் பிடித்துக் கொண்டு இழிசெயல்கள் அனைத்தையும் செய்து வருகிறார். இந்த நிலையில் சம்பத் அவர்கள், ‘கண்ணீர்த் துளிக் கட்சி’யை உதறித் தள்ளி விட்டுத் திராவிடர் கழகத்தைச் சேர்ந்து அதைக் காப்பாற்றித் தர வேண்டும்” என்று எழுதினார்.

1961 தொடங்கிய சமயம், சம்பத்தை மறைமுகமாகத் தாக்கி, ‘திராவிட நாடு’ இதழில் ‘எல்லோரும் இந்நாட்டு மன்னர்’ என்ற தொடர் ஒன்றை எழுதினார் அண்ணா. அதில் ‘புயலார்’ என்றொரு கதைமாந்தன். அது சம்பத்தைக் குறித்ததே.

அதற்கு எதிர்வினையாக ‘அண்ணாவின் மன்னர்’ என்ற தலைப்பில் சம்பட், கண்ணதாசனின் ‘தென்றல்’ ஏட்டில் தொடர் எழுதத் தொடங்கியிருந்தார். அது, செயற்குழுவில் சம்பத்தும், கண்ணதாசனும் தாக்கப்படும் நிலையை உருவாக்கியது. சம்பத் மறுநாள் தனது விலகல் கடிதத்தைக் கொடுத்துவிட்டார். சம்பத்தின் அவைத்தலைவர் பதவிக்கு நாவலர் இரா.நெடுஞ்செழியன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதற்கு முன்னதாகவே, 1961 ஜனவரி 31ஆம் நாளிட்ட ‘குயில்’ ஏட்டில் புரட்சிக் கவிஞர் மீண்டும் ஒரு தலையங்கத்தை எழுதினார். அதில், “திரு. சம்பத்து தி.மு.க.வை விட்டு வந்து விடவில்லை; ஆனால், அவர் தி.மு.க.வில் இருக்கிறார் என்றும் சொல்லிவிட முடியாது. தி.மு.க.வில் உள்ள பொல்லாதவர்கள் எங்குமுள்ள பொல்லாதவர்கள் போல் அல்லர். கடைந்தெடுத்த பொல்லாதவர்கள். தாம் கொண்டிருந்த நல்ல கொள்கைகளை அவர்கள் தலைகீழாக மாற்றிக் கொண்டவர்கள். தமிழரின் தாலி அறுப்பதையே நோக்கமாகக் கொண்ட ஆச்சாரியிடம் (இராஜாஜி) கூட்டு சேரவும் ஒப்பி விட்டார்கள். அந்த தி.மு.க. பசங்கள் எதிர்வரக் கண்டால் முடிச்சுமாறிப் பசங்கள் எதிர்வந்தது போல் தோன்றுகின்றது எனக்கு!” என்று எழுதினார்.

இறுதியில், 19.04.1961 அன்று சம்பத் ‘தமிழ்த் தேசியக் கட்சி’ என்ற புதிய கட்சியை அறிவித்து விட்டார். தனிக்கட்சி தொடங்கிய சம்பத் பெரியாரை நேரில் சந்தித்தார். “இவ்வளவு காலம் கழித்தாவது என் மகனுக்கு என் புத்தி வந்ததே என்று எண்ணி மகிழ்கிறேன்” என்றார் பெரியார்.

அப்போதுதான் சம்பத் வகித்து வந்த அவைத் தலைவர் பதவிக்குத்

தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த இரா. நெடுஞ்செழியன் பெரியாரின் கூற்றுக்குப் பதிலடியாக "அன்று திராவிடர் கழகம் பிரிவதற்குத் தந்தை காரணமாக இருந்தார். இன்று திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவதற்குத் தமையன் காரணமாக இருக்கிறார்" என்று குறிப்பிட்டார். இது தான் 1961ன் தொடக்கக் காலாண்டில் நிலவி வந்த தமிழக அரசியல் சூழல்; தி.க.- தி.மு.க. உறவுச் சூழல்.

இப்படிப்பட்ட அரசியல் சூழல் நிலவிய 1961 ஜூலையில் நாவலர். இரா. நெடுஞ்செழியன் எழுதி வெளியிட்ட நூல்தான் தோழர் மணியரசன் குறிப்பிடும் 'தி.மு.க.' என்ற நூல். இந்த பகைமைச் சூழல் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கத்தை முதலில் எழுப்பியது பெரியார் தான் என்பதைக்கூட நாவலர். இரா.நெடுஞ்செழியன் ஏற்றுக் கொள்ள முடியாமல் செய்திருக்குமோ? நாமறியோம்.

எப்படியிருப்பினும் நாவலர். இரா.நெடுஞ்செழியனின் கூற்றை மீண்டும் ஒரு முறை பார்ப்போம்.

"1938 ஆம் ஆண்டு மே திங்களில் சென்னை கடற்கரையில் கூட்டப்பெற்ற மாபெரும் இந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டத்தில் "தமிழ்நாடு தமிழர்க்கே ஆக வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிந்தவர் பேராசிரியர் மறைமலை அடிகள் ஆவார்கள். அதனை வழிமொழிந்து பேசியவர்கள் பெரியார் இராமசாமி, ச.சோமசுந்தர பாரதியார் ஆகியோர்கள் ஆவார்கள்" என்பதே முதற்பகுதி.

முதலில் ஒரு மாநாட்டில் முன்மொழியப்படும் தீர்மானங்கள், முன்மொழிந்து பேசியவரால் தான் கொண்டு வரப்பட்டது என்பது எவ்வளவு உண்மை என்பது மாநாடு நடத்திய அனுபவம் உள்ள அனைவருக்கும் நன்கு தெரியும். முன்னதாகவே வரையப்பட்டு தயார் நிலையில் இருக்கும் தீர்மான வரிகளை ஒருவர் வாசிப்பார். அதுவே முன்மொழிந்தார் என்று கூறப்படும். நாம் கருதிப்பார்க்க வேண்டியவற்றில் இதுவும் ஒன்று.

அடுத்ததாக நாவலர். இரா.நெடுஞ்செழியன் பதிவிட்டுள்ளவாறான சென்னை கடற்கரையில் 1938 மே திங்களில் ஏதேனும் கூட்டம் கூட்டப்பட்டதா என்பதை ஆய்வோம். திருச்சி உறையூரில் 01.08.1938 அன்று புறப்பட்டு 42 நாட்கள் இந்தி எதிர்ப்பு விளக்கங்களையும், போராட்ட ஆதரவையும் திரட்டியவாறு வந்த இந்தி எதிர்ப்புப் பிரச்சாரப் படை வரவேற்புக் கூட்டம் 11.09.1938 அன்று தான் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தான் "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற முழக்கம் முதன்முதலாக எழுப்பப்பட்டதாக பல்வேறு வரலாற்று பதிவுகள் கூறுகின்றன.

ஆனால் நாவலர் இரா.நெடுஞ்செழியன் 1938 மே திங்கள் என்கிறார். நமக்குக் கிடைத்துள்ள தரவுகளின்படி, 26.06.1938 அன்று கான்பகதூர் கலிபுல்லா தலைமையில் 50,000 பேர்கள் கூடிய இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடந்துள்ளது. அதில் பெரியார், அண்ணா, கி.ஆ.பெ. விசுவநாதம், கே.எம். பாலசுப்பிரமணியம் ஆகிய நால்வர் மட்டும் பேசியுள்ளனர். அடுத்ததாக 31.07.1938 அன்று சென்னை கடற்கரையில் 60,000 பேர் கூடிய இந்தி எதிர்ப்புக் கூட்டம் சர். பி.டி.ராசன் தலைமையில் நடந்துள்ளது. அதில் என்.வி. நடராசன், டாக்டர் தருமாம்பாள், மறை.திருநாவுக்கரசு முதலியோர் உரையாற்றியுள்ளனர்.

ஆனால், இரா. நெடுஞ்செழியன் நூலில் உள்ளது போல் 1938 மே மாதம் எந்த இந்தி எதிர்ப்புக் கூட்டமும் சென்னை கடற்கரையில் நடைபெற வில்லை. ஆனால் 28.05.1938 அன்று திருச்சியில் இந்தி எதிர்ப்பு வாரியங்களின் மந்திராலோசனைக் கூட்டம் என்பதாக ஒரு கூட்டம் நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் கூடியுள்ளது. அதில்தான் சென்னை மாநில இந்தி எதிர்ப்பு வாரியம் (The Anti-Hindi High Command) அமைக்கப் பட்டது. அதிலும் தனித் தமிழ்நாடு தீர்மானம் எதுவும் நிறைவேற்றப் பட்டதாகத் தெரியவில்லை.

ஆனால் தோழர் மணியரசன் பெரும் உற்சாகத்துடன் குறிப்பிட்டிருப்பது போன்றதொரு சொற்பொழிவும், தீர்மானமும் வேறு சில கூட்டங்களில் பேசப்பட்டுள்ளன.

1937 அக்டோபரில் சென்னை பொதுக் கூட்டமொன்றில் பேசிய சோமசுந்தர பாரதியார் “ தமிழ்ப் பண்பாட்டைக் காப்பதற்காகத் தமிழ் மாநிலம் அமைக்கப்பட வேண்டும் “ என்றும் இந்தி எதிர்ப்புப் போராட்ட காலம் தான் இதற்கு உகந்த தருணம் என்றும் பேசியுள்ளார்.

அது போலவே 12.10.1937 இல் திருநெல்வேலி தமிழ்ப் பாதுகாப்புச் சங்கத்தின் சார்பில் தமிழறிஞர் எம்.எஸ்.பூர்ணலிங்கம் பிள்ளை தலைமையில் சோமசுந்தர பாரதியாரும், அண்ணாவும் உரையாற்றிய பொதுக் கூட்டத்தில் “தமிழ் மாநிலம் அமைக்கப்பட வேண்டும்” என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ( தினமணி 18.10.1937 / 17.10.1996 )

12.11.1937 அன்று திருவையாறு செந்தமிழ்க் கல்லூரி சார்பில் உமாமகேசுவரம் பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் பேசிய சோமசுந்தர பாரதியார் “ஆந்திர மாகாணத்தைக் காங்கிரசார் பிரித்துவிடத் தீர்மானித்திருப்பது போல் தமிழ் மாகாணத்தையும் பிரித்துவிட தீர்மானத்தைக் கொண்டு வருவது அவசியமென்று” வற்புறுத்தினார். (குடிஅரசு 21.11.1937)

ஆனால் இவையெல்லாம் தமிழ் பேசும் மாவட்டங்களைப் பிரித்து தனி மாநிலம் அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவேயன்றி, தனித் தமிழ்நாடு கோருவன அல்ல.

தோழர் மணியரசன் நெடுஞ்செழியனின் எந்த நூலைப் பெரியாரின் அரசியல் பெருமைகளைக் குறைத்திட வேண்டும் என்ற ஆர்வம் பொங்க - 'தி.மு.க.' என்ற நூலில் 10, 11ஆம் பக்கங்களிலிருந்து எந்த பத்திகளை எடுத்துக் காட்டினாரோ, அதற்கு முந்தைய பத்தி ஏனோ தோழர் மணியரசன் கண்ணுக்குப் படாமல் மறைந்து போய்விட்டது. அப்பத்தி பின்வருமாறு:-

"தமிழ்நாடு தமிழர்க்கே ஆக வேண்டும் என்ற எண்ணம் இப்பொழுது தான் புதிதாகத் தோன்றியிருக்கிறது என்று யாரும் எண்ண வேண்டாம். அந்தக் கருத்துக்கு 1938ஆம் ஆண்டில் முதன் முதலாக வித்திட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னைய பரம்பரையினர் ஆவர். தமிழ்நாடு தனி நாடாகப் பிரிய வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்று வளர்ந்து சில ஆண்டுகளில், அனுபவ அறிவின் விளைவாகவும், வளர்ச்சியின் அறிகுறியாகவும் "திராவிடநாடு திராவிடருக்கே" என்ற கருத்தாக மாறிற்று. "தமிழ்நாடு தமிழர்க்கே" என்ற கருத்தை உள்ளடக்கிக் கொண்டு வளர்ந்த கருத்து தான் "திராவிட நாடு திராவிடருக்கே" என்பது.

இது தான் மணியரசன் காணத் தவறிய / எடுத்துக்காட்டத் தவறிய முன் பத்தியாகும். அதில் குறிப்பிட்டுள்ளபடி "தமிழ்நாடு தமிழர்க்கே" என்பதற்கு வித்திட்ட தி.மு.க.வின் முன்னைய பரம்பரையினர் யார்? காங்கிரசுக்காரரான சோமசுந்தர பாரதியாரா? அல்லது சைவப்பழமான மறைமலை அடிகளா? இருவரும் அன்று; பெரியார்தான் என்பது அரசியலின் அரிச்சுவடி அறிந்த எவர் ஒருவருக்கும் புலப்படுமே? மணியரசனுக்கு மட்டும் ஏன் புலப்படவில்லை? விடையை எங்களிடம் சொல்ல வேண்டிய தில்லை; நீங்கள் புரிந்து கொண்டால் அதுவே போதும்.

அதோடு, முன்னைய பரம்பரையினர் என்று எழுதிய நெடுஞ்செழியனால், பெரியார் என்று எழுதமுடியாமல் போனதற்கான காரணத்தையும் இதனுடன் சேர்த்து யோசித்துப் பாருங்கள்.

முதலாவதாக, நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் 'தி.மு.க.' என்ற நூல் நினைவுகளிலிருந்தே எழுதப்பட்டிருக்க வேண்டும். எனவே தான், 1938 செப்டம்பர் 11ஆம் நாளன்று நடைபெற்ற இந்தி எதிர்ப்பு வழிநடை பிரச்சாரப் படையை வரவேற்று, சென்னை கடற்கரையில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வின் மாதமே 1938 மே என மாற்றிப் பதியப்பட்டுள்ளது. இரண்டாவதாக, அவ்வாறே ஆயினும் தோழர் மணியரசன் மேற்கோள் காட்டும் பத்திகளுக்கு

முந்தியதாக உள்ள பத்தியில் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம் முதன்முதலாக தி.மு.க.வின் முன்னைய பரம்பரையினரால் முன்வைக்கப்பட்டது என்றும், பின்னர் அம்முழக்கம் 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று மாற்றியமைக்கப்பட்டது என்றும் கூறியிருப்பதில், முன்னைய பரம்பரையினர் என்பது பெரியாரைக் குறிப்பதே என்பதை எவர் ஒருவரும் எளிதில் உய்த்துணர முடியும். அக்காலக்கட்டத்தில் பெரியாருக்கும் தி.மு.க.வுக்கும் இடையே இருந்த கடுமையான முறுகல் நிலையே, நெடுஞ்செழியனால் நேரடியாக 'பெரியார்' என்று குறிப்பிட முடியாமல் 'முன்னைய பரம்பரையினர்' என்று சுற்றி வளைத்து கூறச் செய்திருக்க வேண்டும். இவை ஒருபுறம் இருக்க, நாவலர் நெடுஞ்செழியன் எழுதியது இந்த ஒரு நூல் மட்டுமே அல்ல.

1996ஆம் ஆண்டில் 'திராவிட இயக்க வரலாறு' (முதல் தொகுதி) என்ற நூலினையும், 2000ஆம் ஆண்டில் 'வாழ்வில் நான் கண்டதும் கேட்டதும்' என்ற இயக்க வரலாறு தொடர்பான இருநூல்களை எழுதியுள்ளார். 'திராவிட இயக்க வரலாறு' என்ற நூலின் இருபதாம் பக்கத்தில் "1938-இல், இந்தி எதிர்ப்புப் படை, திரு.கே.வி.அழகர்சாமி அவர்களைப் படைத் தலைவராகக் கொண்டு, திருச்சியிலிருந்து புறப்பட்டு சென்னை வந்து சேர்ந்தபோது, அதனை வரவேற்பதற்காகக் கூட்டப்பட்டிருந்த கூட்டத்தில் நானும் பார்வையாளனாகக் கலந்து கொள்வதில் பெருமிதங் கொண்டேன்" என்று குறிப்பிட்டுள்ளார். அதே நூலின் 707, 708 ஆகிய பக்கங்களில் "படையினர் 1938 ஆகஸ்டு 1 ஆம் நாள் புறப்பட்டு 234 ஊர்களின் வழியே வந்து, 87 பொதுக்கூட்டங்களை நடத்தி, 43 நாட்களுக்குப் பிறகு, 1938 செப்டம்பர் 11 ஆம் நாளன்று சென்னைக்கு வந்து சேர்ந்தனர். அப்போது கல்லூரி மாணவனாக இருந்த நான், தமிழர் பெரும்படை இறுதிக் கூட்டமாக கோடம்பாக்கத்திலிருந்து புறப்பட்டுக் கடற்கரையை நோக்கிச் செல்லும்போது, அதனுடன் இணைத்துக் கொண்டு இந்தி எதிர்ப்பு முழக்கங்களை முழங்கிக் கொண்டே சென்றேன். சென்னைக்கு வந்தடைந்த தமிழர் பெரும்படையினரை வரவேற்க, திருவல்லிக்கேணி கடற்கரையில் பேராசிரியர் மறைமலை அடிகளார் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அந்த கூட்டத்தில் பெரியார் இராமசாமி, பேரறிஞர் அண்ணா, நாவலர் சோமசுந்தர பாரதியார், சர்.பி.டி. இராசன், தவத்திரு சண்முகானந்தா அடிகளார், திருமதி மீனாம்பாள் சிவராசு, டபிள்யூ.பி.ஏ. சௌந்தர பாண்டியன், பரவஸ்து இராஜகோபாலாச்சாரியார், பட்டுக்கோட்டை கே.வி. அழகர்சாமி ஆகியோர் விரிவுரைகள் ஆற்றினார்கள். அந்தக் கூட்டத்தில் இறுதிவரை இருந்து சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழும் வாய்ப்பினை நான் பெற்றேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி முழுமையாகக் கேட்கும் வாய்ப்பில் நடந்தது என்ன என்பது அந்நூலில் எங்கும் காணோம்.

ஆனால், அதனைத் தொடர்ந்து நெடுஞ்செழியன் எழுதி 2000ஆம் ஆண்டு வெளியான "வாழ்வில் நான் கண்டதும் கேட்டதும்" என்ற நூலின் 46ஆம் பக்கத்தில் பதியப்பட்டுள்ள செய்தி - அவர் முழுமையாகக் கேட்டதில் "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற முழக்கம் முதன்முதலில் யாரால் எழுப்பப்பட்டது என்பதற்கு நாவலர் நெடுஞ்செழியனின் சாட்சியமே நமக்கு அழுத்தமாகக் கூறுகிறது. "சென்னை கடற்கரையில் இந்தி எதிர்ப்புப் பெரும்படைக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தில் நான் மாணவனாகக் கலந்து கொண்டேன். பெரியார் அவர்கள் இலட்சக்கணக்கான மக்கள் மத்தியில் வீரமுழக்கமிட்டார். அந்தக் கூட்டத்தில் பேசிய பெரியார், இந்திய அரசியல் அமைப்பில் தமிழர் நலம் தனியாகப் பாதுகாக்கப்பட உறுதி ஏதும் இல்லை என்றும், எந் நாளும் பார்ப்பனரும் வடநாட்டாரும் மட்டும் தான் ஆதிக்கம் செலுத்தி வருவர் என்றும், அதற்கான பரிகாரம் தமிழ்நாட்டின் ஆட்சி தமிழர் கைக்கு வருவது தான் என்றும் கூறி "தமிழ்நாடு தமிழர்க்கே" என்ற கொள்கை முழக்கத்தை முதன்முதலாக அறிமுகப்படுத்தினார்" என்று தெளிவுபடக் கூறியுள்ளார்.

இதுவரை கூறப்பட்டவை அனைத்தும் நாம் எடுத்துக் கொண்ட பொருளுக்கு இன்றியமையாதவை அல்லவெனினும் தோழர் மணியரசன் நெடுஞ்செழியனின் 'தி.மு.க.' என்ற நூலிலிருந்து மேற்கோள் காட்டிய காரணத்தாலேயே நாமும் விளக்கத்துக்காக இவ்வளவும் எழுத நேரிட்டது.

தமிழறிஞர்கள் கூறிய பின் தான் பெரியார் தனித் தமிழ்நாடு குறித்துப் பேசினார் என்னும் தோழர் மணியரசனின் கூற்று குறித்துப் பார்ப்போம். பெரியாருக்கு எப்போதிருந்து நாம் வேறானவர்கள், வடநாட்டார் வேறானவர்கள்; அன்னியர்கள் என்ற எண்ணம் இருந்து வந்துள்ளது என்பதை அறிய 1929-இல் இருந்து தரவுகள் உள்ளன. அவை தாம் எவை?

முதலாவது தரவு 'குடிஅரசு' ஏட்டில் 12.05.1929 அன்று வெளிவந்துள்ள "மலையாளமும் மாளவியாவும்" தலையங்கத்தில் உள்ளது. அப்படி என்ன தான் உள்ளது என்று பார்ப்போமே. "தென்னாட்டுப் பார்ப்பனர்கள் அரசியலிலாவது, மத இயலிலாவது, சமுதாய இயலிலாவது தங்கள் புரட்டுக்கள் எல்லாம் வெளியாய் விடுவதன் மூலம் செலவாகிவிட்டால் வடநாட்டிலிருந்து யாராவது ஒருவரைக் கொண்டு வந்து பித்தலாட்டப் பிரச்சாரம் செய்வது வழக்கம். அது மாத்திரமல்லாமல் தாங்களாக தனித்து வெளியில் புறப்பட்டு பிரச்சாரம் செய்ய முடியாத பட்சத்திலும்

வெளிநாட்டிலிருந்து யாரையாவது பிடித்து வந்து அவர்கள் மதிப்பின் மறைவில் மேடை மேலேறிப் பேச இடம் சம்பாதித்துக் கொள்வது வழக்கம்'' என்கிறார்.

அவ்வாறு வெளிநாட்டிலிருந்து அழைத்து வரப்பட்டவர்களை அதே தலையங்கத்தில் பட்டியலிடுகிறார் பெரியார். ''அதாவது சென்ற வருஷத்திற்கு முன் திரு.காந்தியைக் கூட்டிக் கொண்டு வந்து அவர் சாயமும் வெளுத்து..................'' பிறகு, ''திரு.பஜாஜ் (ஜமன்லால் பஜாஜ் என்னும் இவர் அனைத்திந்திய காங்கிரஸ் கட்சியின் பொருளாளராக இருந்தவர். பஜாஜ் குழுமத்தின் நிறுவுநர்) அவர்களைத் தருவித்து அவர்களுடன் திரிந்ததில் உள்ள யோக்கியதையும் போய் ..........................'' ''இந்த வருஷத்திற்கு திரு. பண்டித் மாளவியா அவர்களைத் தருவித்து.....................''

ஆக, இந்தத் தலையங்கத்தில் பெரியார் யார் யாரை வெளிநாட்டினர் என்கிறார். குஜாராத்தில் பிறந்த காந்தி; இராஜஸ்தானில் பிறந்த மார்வாரி பஜாஜ்; உத்திர பிரதேசத்தில் பிறந்த பண்டித மதன்மோகன் மாளவியா ஆகியோரைத் தான். 1929-இல் பெரியார் பார்வையில் குஜராத்தும், இராஜஸ்தானமும், உத்திர பிரதேசமும் வெளிநாடுகள்.

அடுத்தது, 25.08.1929-இல் குடிஅரசு ஏட்டில் ''சுயமரியாதை இயக்கம்'' என்ற தலைப்பில் எழுதிய தலையங்கம். சுயமரியாதை இயக்கத்தின் வீச்சான செயல்பாடுகளில் அதிர்ந்து போன மதவாதிகள் வர்ணாசிரம மாநாடுகள், சைவ மாநாடுகள் நடத்தியும், தேசிய மேடைகளிலும், சமய மாநாடுகளிலும் சுயமரியாதை இயக்கம் மதத்தைப் பாழ் பண்ணி வருகிறது; அதை ஒழிக்க வேண்டும் என்று கூவிப் பார்த்தார்கள் என்றெல்லாம் எழுதிய பின் பெரியார் கீழ்க்கண்டவாறு தொடர்கிறார். ''இவ்வளவும் போதாமல் வெளிநாடுகளிலிருந்து, திருவாளர்கள் காந்தி, மாளவியா, மூஞ்சே ஆகியவர்களைக் கொண்டு வந்து இதற்கு (சுயமரியாதை இயக்கத்திற்கு) எதிரிடையாக பிரச்சாரம் செய்தும் பார்த்தார்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார். ஆக, முந்தைய வெளிநாட்டினர் பட்டியலில், புதிதாக இன்றைய சட்டீஸ்கர் மாநிலத்தில் உள்ள பிலாஸ்பூரில் பிறந்த பாலகிருஷ்ண சிவராம் மூஞ்சேவையும் சேர்த்துக் கொள்கிறார் பெரியார்.

## ஆந்திரப் பிரிவினையின்போது பெரியார் கூறியது என்ன?

வடநாட்டிலிருந்து தமிழகம் வந்த தலைவர்களை வெளிநாட்டி லிருந்து வந்தவர்கள் என்று பெரியார் ‘குடிஅரசு’ ஏட்டில் எழுதியதை கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம்.

மேலும், 8.9.1929 குடிஅரசு தலையங்கத்தில் வல்லபாய் பட்டேலின் உரைகளைக் குறித்து எழுதுகிறார். தமிழ்நாடு வந்த பட்டேல், "இங்கு பிராமண வகுப்புக்கே விரோதமாக பிரச்சாரம் செய்யப் பட்டு வருகிறது. இந்த பிரச்சாரமானது பிராமணர்களைத் தாக்குவதாக மாத்திரமல்லாமல் நம்முடைய ஆரிய நாகரிகத்தில் சிறந்தவற்றை எல்லாம் தாக்குவதாகத் தெரிகிறது. ஒரு பிராமணரை (திரு.இராஜகோபாலாச்சாரியாரை) 'சைத்தான் சொரூபம்' என்று ஒரு சாரார் துவேஷிக்கின்றனர். இது தேசிய தற்கொலையே யாகும். வகுப்பு துவேஷத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வதைக் காட்டிலும் சிறந்த தேசிய வேலை வேறு கிடையாது" என்றெல்லாம் பேசிய பட்டேலைப் பார்த்து பெரியார் எழுப்பும் கேள்வி இது தான்.

"திராவிட தேசத்துக்கு வந்த இவருக்கு ஆரிய தர்மத்தைப் பற்றிய பிரச்சாரத்தில் கவலை எதற்காக வேண்டும்?" என்று கேட்டுவிட்டு, இந்த நாட்டில் ஏற்பட்டிருக்க வேண்டிய சீர்திருத்தங்களுக்கு எல்லாம் இது வரையில் முட்டுக்கட்டையாக இருந்து வந்திருப்பது ஆரிய பிரச்சாரமா? அல்லது 'பார்ப்பன துவேஷ' பிரச்சாரமா? முதலாவது இந்த நாட்டிலுள்ள பார்ப்பனரல்லாதார் யோக்கியதையும், அந்தஸ்தும் இன்னது இன்னது என்று இவருக்குத் தெரியுமா?

"பார்ப்பனர்களில் சி.இராஜகோபாலாச்சாரி, சீனிவாசய்யங்கார், சந்தானம், சத்தியமூர்த்தி, வரதாச்சாரி, ஏ.ரெங்கசாமி அய்யங்கார், எம்.கே.ஆச்சாரியார் முதலியோருடைய யோக்கியதை திரு.பட்டேலுக்குத் தெரிந்தது சரியாக இருக்குமா? அல்லது திரு.ராமநாதன், திரு.ராமசாமி முதலியோர்களுக்குத் தெரிந்தது சரியாக இருக்குமா?" என்று அடுக்கடுக்காய் கேள்விகளைப் பெரியார் எழுப்புகிறார்.

ஆக, இத்தலையங்கத்தில் 'திராவிட தேசத்துக்கு' வந்தவராக படேலைக் கூறுகிறார். அடுத்து, இந்த நாட்டில் ஏற்பட்டிருக்க வேண்டிய சீர்திருத்தத்திற்குப் பார்ப்பனர் தடை என்று கூறுவதில் 'இந்த நாட்டில்' என்று குறிப்பிடுவது இந்தியாவையா? 'திராவிட தேசம்' என்று கூறப்பட்ட சென்னை மாகாணத்தையா? என்ற அய்யம் நமக்குள் எழக்கூடும்.

அதைத் தெளிவாக்கத்தான், அடுத்ததாக 'இந்த நாட்டிலுள்ள' பார்ப்பனரல்லாதார் யோக்கியதையை யார் நன்கு அறிந்திருக்க முடியும்? என்ற கேள்வியை எழுப்பி பார்ப்பனர்களில் ராஜாஜி, சத்தியமூர்த்தி, சீனிவாசயங்கார் போன்றோரையும், பார்ப்பனர் அல்லாதாரில் எஸ்.இராமநாதன், ராமசாமி (இது ஈ.வெ.ராமசாமியா? அல்லது சர்.ஏ.ராமசாமி முதலியாரா? தெரியவில்லை. யாராக இருந்தாலும்) போன்றோரைக்

குறிப்பிடுவதால் 'இந்த நாடு' என மீண்டும் சென்னை மாகாணத்தை தான் பெரியார் குறிப்பிடுகிறார் என்பதை எளிதில் உணர முடியும்.

ஆக வெளிநாட்டினர் என வடநாட்டினரையும், 'இந்த நாடு' என சென்னை மாகாணத்தையும் குறிப்பிட்டு எழுதி, இரண்டும் வெவ்வேறு நாடுகள்தான் என்ற சிந்தனைப் போக்கு 1929-லேயே பெரியாரிடம் வெளிப்படுவதை எவர் ஒருவராலும் எளிதில் புரிந்து கொள்ள முடியும். வடநாட்டினரை வெளிநாட்டினர் என்று குறிப்பிடும் பெரியார், சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியாக அப்போது விளங்கி வந்த ஆந்திரப் பகுதியினரை எப்படிப் பார்த்தார் என்பதையும் அதே ஆண்டில் எழுதப்பட்ட மற்றொரு தலையங்கம் தெளிவுபடுத்துகிறது.

அது, "நெல்லூர் மகாநாடு" என்ற தலைப்பில் 22.9.1929 'குடிஅரசு' இதழில் எழுதப்பட்டுள்ள தலையங்கமே ஆகும். அந்த தலையங்கம் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் (நீதிக்கட்சியின்) மாகாண மாநாடு நெல்லூரில் அதற்கடுத்த மாதம் நடக்க விருப்பதை ஒட்டி எழுதப்பட்டதாகும். அந்த மாநாட்டில் பார்ப்பனரல்லாதாரின் அரசியல் கட்சியான நீதிக்கட்சியில் பார்ப்பனரையும் சேர்த்துக் கொள்ளலாம் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றும் முயற்சி நடந்து வருவதை அறிந்த பெரியார், அம்முயற்சியை கைவிட வேண்டும் அல்லது முறியடிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையோடு தீட்டப்பட்டதே அத்தலையங்கம்.

அத்தலையங்கத்தில் "இம்மகாநாடு தெலுங்கு நாட்டில் கூடுவது நமக்கு மிக்கப் பலவீனமென்றே தோன்றுகின்றது. ஏனெனில், தெலுங்கு நாட்டு மக்களுக்கு இந்த விஷயம் அவ்வளவு தூரம் கவலைப்படத் தக்கதாக இல்லை" என்கிறார். சென்னை மாகாணத்தில் உள்ள தெலுங்கு பேசும் பகுதி/ மாவட்டங்கள் என்று குறிப்பிடவில்லை; தெலுங்கு நாடு என்றே குறிப்பிடுகிறார் என்பது மனத்துள் பதிய வைக்க வேண்டியதொரு செய்தி.

அதற்கான காரணத்தையும் கூறுகிறார்." அவர்களுக்கு (தெலுங்கு நாட்டவருக்கு) இன்னும் பார்ப்பனர்-பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற விஷயம் அர்த்தமானதாகவே சொல்வதற்கில்லை. இதற்கு முக்கிய உதாரணம் என்னவென்றால் ஆந்திர தேசத்தில் இன்னும் காங்கிரசுக்கு மதிப்பும் ஆதரவும் இருப்பதே ஆகும்" என்கிறார். முன்பு தெலுங்கு நாடு என்று சொன்ன பெரியார், இவ்வரிகளில் அதை ஆந்திர தேசம் என்று குறிப்பிடு கிறார். மேலும், அந்த ஆந்திர தேசத்தவர்களைப் பற்றியும் விவரிக்கிறார்.

“ஆந்திர தேசத்துப் பார்ப்பனர் அல்லாதார்கள் இனியும் மத சம்பந்தமான புராணங்களிலும் குருட்டு நம்பிக்கைகளிலும் ஈடுபட்டவர்கள் ஆவார்கள். எவ்வளவுக்கெவ்வளவு குருட்டு நம்பிக்கைகளிலும் புளுகு புராணங்களிலும் ஈடுபட்டு இருக்கின்றார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்களை மேதாவிகள் என்றும் பெரியவர்கள் என்றும் நினைத் துக் கொண்டிருப்பவர்கள். எனவே, மூடநம்பிக்கைகளிலிருந்தும், கண்மூடி பின்பற்றும் குருட்டு நடவடிக்கைகளிலிருந்தும் என்று ஆந்திர தேசத்தவர்கள் விடுதலை பெறுகின்றார்களோ அன்று தான் அவர்கள் பார்ப்பனர்களின் மதிப்புகளிலிருந்தும், அரசியல் புரட்டுகளிலிருந்தும் விடுதலையடைய முடியும். ஆதலால், அது வரையிலும் நாம் எந்த வகையிலும் ஆந்திர தேசத்தவர்களைப் பின்பற்றுவது, மறுபடியும் குழியில் போய் விழுவதையே ஒக்கும்.

இவ்வாறெல்லாம் தெலுங்கு நாட்டவர், ஆந்திர தேசத்தவர் என்ற சொற்களில் அவர்களைப் பிரித்து தனிநாட்டவராக மட்டுமல்ல, அவர்களோடு உறவு கொள்வது கூட நம்மை மறுபடியும் பார்ப்பன, புராண, மதப் படுகுழியில் தள்ளிவிடும் என்று எச்சரிக்கவும் செய்கிறார். 1929-இல் பெரியார் கொண்டிருந்த அதே கருத்தைத் தான் 1955, 56களிலும் கொண்டிருந்தார் என்பதையும் நாம் ஒப்பு நோக்க வேண்டும்.

“பொதுவாக ஆந்திரா பிரிந்ததிலிருந்தே நாட்டுப் பிரிவினையில் எனக்குக் கவலையில்லாமல் போய் விட்டது. பிறகு கன்னடமும், மலையாளமும் (கர்நாடகமும், கேரளாவும்) பிரிவதில் இருந்து இரண்டு, மூன்று காரணங்களால் சீக்கிரத்தில் பிரிந்தால் தேவலாம் என்கிற எண்ணம் தோன்றி விட்டது..” என்று 1955 ஆம் ஆண்டில் கூறுகிறார்.

அப்படிக் கூறிய பெரியாரைத் தான், இங்குள்ள ‘தூய’ தமிழர்களும், ‘திடீர்’ தமிழ்த் தேசியர்களும் தமிழ்நாட்டில் தெலுங்கு, கன்னட, மலையாளிகள் ஆதிக்கத்தை உருவாக்கியவர்; காத்து நின்றவர் என்றெல்லாம் தூற்றித் திரிகின்றனர். ஆந்திராவோடு, கன்னடியனும், மலையாளியும் போய்விட்டால் தேவலாம் என்று ஏன் பெரியார் விரும்பினார். அதையும் அவரே கூறுகிறார்: “ஒன்று கன்னடியனுக்கும், மலையாளிக்கும் இனப்பற்றோ, இன சுயமரியாதையோ, பகுத்தறிவு உணர்ச்சியோ இல்லை என்பதாகும். எப்படியெனில் அவர்களுக்கு வருணாசிரம வெறுப்பு கிடையாது. சூத்திரன் என்பது பற்றி இழிவோ, வெட்கமோ பெரும்பாலானோருக்குக் கிடையாது. மத மூடநம்பிக்கைகளில் மூழ்கி விட்டவர்கள். இரண்டு அவர்கள் இருவரும் மத்திய ஆட்சி என்னும் வடவர் ஆட்சிக்குத் தங்கள் நாடு அடிமையாக

இருப்பது பற்றியும் அவர்களுக்கு சிறிதும் கவலை இல்லை. ஆகவே, இவ்விரு துறைகளிலும் நமக்கு எதிர்ப்பான எண்ணம் கொண்டவர்கள் - எதிரிகள் என்றே சொல்லலாம்.'' என்றெல்லாம் விளக்கம் கொடுத்ததோடு பெரியார் நின்று விடவில்லை. 1953-இல் ஆந்திரா பிரிந்ததற்குப் பின்னரும் சென்னை மாகாணத்தின் 14 மாவட்டங்களில் ஒரு கன்னட மாவட்டமும் (தென் கன்னடம் ஞடிரவா ஊயயேசய) ஒரு மலையாள மாவட்டமும் (மலபார் மாவட்டம்) இருந்தது. அந்த இரண்டு மாவட்டங்களால், தமிழர்கள் உரிமைக்கு, தமிழ்நாட்டு உரிமைக்கு ஏற்பட்டு வந்த இன்னல்கள், இடையூறு களைச் சுட்டிக் காட்டுகிறார்.

''மூன்றாவது.. அப்படி 14-இல் 2, 7-இல் ஒரு பாகஸ்தர்களாக இருந்து கொண்டு தமிழ்நாட்டின் அரசியல், பொருளாதாரம், உத்தியோகம் முதலியவைகளில் 3-இல் 2 பாகத்தை அடைந்து கொண்டு, இவை கலந்து இருப்பதால் நம் நாட்டை ''தமிழ்நாடு'' என்று சொல்வதற்கு இடமில்லாமல் தடுத்து ஆண்டு கொண்டிருக்கிறார்கள்'' என்கிறார் பெரியார். அதாவது, தமிழர், தமிழ்நாட்டு உரிமைகளில் 3இல் 2 பங்கை அனுபவிக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, இந்த இரண்டு மாவட்டம் மட்டும் நம்மோடு இருப்பதால் நமது நாட்டை '' தமிழ்நாடு'' என்றுகூட கூற முடியாமல் ''சென்னை மாநிலம்'' என்று சொல்ல வேண்டி இருக்கிறதே என்பதற்காகவும் சீற்றம் கொள்கிறார்.

தொடர்ந்து, ''இதை நான் ஆந்திரா பிரிந்தது முதல் சொல்லிக் கொண்டே வந்திருக்கிறேன். ஆதலால், இவர்கள் சீக்கிரம் ஒழியட்டும் என்றே கருதி வந்தேன். அந்தப்படி நல்ல சம்பவமாக பிரிய நேர்ந்துவிட்டார்கள். ஆதலால் இந்த பிரிவினையை வரவேற்கிறேன்''. (விடுதலை அறிக்கை 12.10.1955) இவ்வாறான சிந்தனையோடிருந்த பெரியார் கன்னடராம், பிற திராவிட மொழிக் குடும்பத்தினர் ஆதிக்கத்தைத் தமிழ்நாட்டில் உண்டாக்கியவராம். சரி, ஏதோ தனது கழகத் தோழர்கள் மட்டும் படிக்கும் தனது ஏட்டில் அறிக்கையோடு விட்டுவிட்டாரா பெரியார்? இல்லை, தனது அமைப்பான திராவிடர் கழகத்தின் நடுவண் குழுவைக் கூட்டி, ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றி, திராவிடர் கழகத்தின் அதிகாரப் பூர்வமான நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறார்.

திராவிடர் கழகத்தின் மத்திய செயற்குழு நிறை வேற்றிய தீர்மானத்தைக் காண்போம். ''வடநாட்டானுடைய ஆட்சி ஆதிக்கத்திலிருந்து முழுச் சுதந்திரத்துடன் விலக வேண்டும் என்ற முயற்சிக்கு ஒத்துழைக்க முன்வர இஷ்டப்படாத ஆந்திரா, கேரளா, கன்னட நாடுகள் திராவிட நாட்டிலிருந்து விலக்கமடைந்துவிட்டதற்கு இக்கமிட்டி மகிழ்ச்சி அடைவதோடு, இனி தமிழ்நாடு முழு சுயேச்சை விடுதலைக்கு

அதிதீவிரமாக பாடுபட வேண்டியதென இக்கமிட்டி தீர்மானிக்கிறது.'' (விடுதலை: 26.10.1956) என்பதே அந்தத் தீர்மானம். தீர்மானத்தோடு பெரியார் மனநிறைவடைந்துவிடவில்லை. 1938-இல் 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்ற முழக்கத்தை முன் வைத்திருந்தா லும், அப்போதைய அரசியல் பரப்பால் ஒருங்கிணைந்திருந்த சென்னை மாகாணத்தில் இணைந்திருந்ததோடு மட்டுமின்றி, பார்ப்பனர் அல்லாத மக்களின் அமைப்பான நீதிக்கட்சியிலும் கலந்திருந்த மலையாள, கன்னட, தெலுங்கு மக்களின் ஒத்துழைப்புக்காக 1939-இல் அவர்களையும் இணைக்க 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற முழக்கத்தை முன்வைத்து இயங்கி வந்தார் பெரியார்.

ஆனால், 1953-இல் ஆந்திரமும், 1956-இல் கன்னட, மலையாளப் பகுதிகளும் தனியாகப் பிரிந்து போன பின்பும், அம்முழக்கத்தை ஏன் தொடர்ந்து வைத் திருக்க வேண்டும் எனக் கருதி முழக்கத்தை 'தமிழ்நாடு தமிழருக்கே' என மாற்றியமைத்து, அதையே தன் வாழ்நாள் இறுதிவரை கைக் கொண்டிருந்தார்.

தொடர்ந்து 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற முழக்கத்தை வைத்துக் கொண்டு இயங்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தை இது குறும்பல்லவா? நமது வேலைகளைக் குலைப்பதல்லவா? குறுக்குசால் ஓட்டுவதல்லவா? என்று கடுமையாகச் சாடியதையும் இக்கட்டுரையின் முன் பகுதிகளில் பார்த்தோம். ஆக, 1929-ஆம் ஆண்டில் பெரியாரின் பார்வையில், உத்திர பிரதேசம், குஜராத், இராஜஸ்தான், இன்றைய சட்டீஸ்கர் ஆகியவற்றை வெளிநாடாகவே கருதி வந்திருக்கிறார். அதோடு, பிற்காலத்தில் தமிழ்நாட்டோடு இணைந்து நீண்ட நெடுங்காலம் ஒரே அரசியல் அலகாய் இயங்கி வந்த கன்னடர், தெலுங்கர், மலையாளிகள் ஒழிந்தால் தேவலாம் என்று கூறி வந்திருக்கிறார். 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கத்தை 1973-ஆம் ஆண்டின் இறுதியில் நிகழ்ந்த தன் சாவு வரை தொடர்ந்து கைக் கொண்டிருந்துள்ளார். ஆனால், நெடுஞ்செழியன் தனது 'தி.மு.க.' என்ற நூலில் தவறுதலாக, எவ்வித ஆதாரத் துணையுமின்றி, நினைவுப் பிசகாக குறிப்பிட்டுள்ள ஒற்றைக் குறிப்பைக் கையிலெடுத்துக் கொண்டு, தமிழறிஞர்களே 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கத்தை முன் வைத்தார்கள் என குதூகலமாக குறிப்பிடும் தோழர் மணியரசன் - தொடர்ச்சியாகத் தங்கள் வாழ்நாள் இறுதிவரை கூட வேண்டாம், 1938-க்குப் பிறகு தமிழ்நாட்டு விடுதலை குறித்து, அந்த தமிழறிஞர்கள் ஒருமுறையாவது பேசியதை எடுத்துக்காட்ட முடியுமா என்று சவால் விட்டுக் கேட்க விரும்புகிறோம். சரி, 1929-இல் பெரியார் கூறியதன் தொடர்ச்சி உண்டா? உண்டு. அவற்றையும் பார்ப்போம்.

### வன்னியகுல சத்திரியர் மாநாட்டில்

சேலத்தில் 1930இல் நடைபெற்ற வன்னியகுல சத்திரியர் மாநாட்டில் பெரியார் ஆற்றிய சொற்பொழிவில் அவர் குறிப்பிடும் ஒரு செய்தி நாம் விவாதித்துக் கொண்டுள்ள செய்தி குறித்த அவர் பார்வையை விளக்குகிறது.

> "*இந்தியா ஒரு நாடு என்று ஆனால் தானே இந்தியா முழுமையும் பற்றிப் பேச நமக்கு உரிமை உண்டு. இப்போது இந்தியா ஒரு நாடாக இருக்கின்றதா? நீங்களே யோசித்துப் பாருங்கள்! சாதிகள் காட்சி சாலையாக, மத கண்காட்சி சாலையாக, பாஷைகள் கண்காட்சி சாலையாக, சாமிகள் காட்சி சாலையாக இருக்கின்றதே ஒழிய வேறு என்னமாயிருக்கின்றது? இந்த நிலையிலுள்ள இந்தியா விடுதலையோ முன்னேற்றமோ அடைவது என்பது சாத்தியமானதாகுமா? என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்" என்பதே அது. (குடிஅரசு 01-06-1930)*

இதன் வழியாக பெரியார் கூறவரும் கருத்துகள் தான் என்ன? முதலில் இந்தியா என்பது ஒரே நாடு அல்ல என்று கூறுகிறார். அது பல நாடுகள் சேர்ந்த ஒரு நிலப்பரப்பு என்பதே அவர் கருத்து. இந்தியா ஒரே நாடு என்றால்தானே நாம் அதுபற்றி, அதாவது, இந்தியா முழுமையையும் பற்றிப் பேசமுடியும் என்ற சொற்கள் இந்தியா முழுமையையும் பற்றிப் பேசமுடியாது; தமிழ்நாடாகிய நமது நாட்டைப் பற்றி வேண்டுமானால் பேசலாம் என்ற கருத்தைதானே அது காட்டுகிறது !

அது மட்டுமல்ல, வேறு வேறான பலவற்றின் தொகுப்பாக விளங்கும் கண்காட்சி சாலை போன்றே இந்தியா உள்ளது. அதாவது பல்வேறு சாதிகளாய் உள்ளவற்றின் தொகுப்பாக, மதங்களின் தொகுப்பாக மட்டுமல்ல; பல்வேறு மொழிகளின் (பாஷைகளின்) தொகுப்பாகவும் இந்தியா விளங்குகிறது என்பதைத் தான் அவர் குறிப்பிடுகிறார். அதாவது பல்வேறு மொழிகளைப் பேசும், பல்வேறு மொழிவழி தேசிய இனங்களைக் கொண்டதுதான் இந்தியா என்ற கருத்தை 1930இலேயே அவர் கொண்டிருந்தார் என்பதைத் தானே இது காட்டுகிறது!

அடுத்து 1936ஆம் ஆண்டுக்கு வருவோம். 1936ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் நாள் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த் திருநாள் விழா நடைபெறுகிறது. பொங்கல் விழாவையொட்டி நடைபெற்ற அவ்விழாவில் பெரியார், "தீபாவளி போன்ற மூடநம்பிக்கையும்,

சுயமரியாதை அற்றதும், ஆபாச மானதுமான பண்டிகைகளைக் கொண்டாடுவதைவிட இப்படி தமிழ்த் திருநாள் என்று தமிழ்மக்கள் கூட்டுறவுக்கும், மகிழ்ச்சிக்கும் கொண்டாட்டத்துக்கும் அனுகூலமாகத் திருநாள்களைப் பரப்பவேண்டும். நமது பெண்களும் பகுத்தறிவும், சுயமரியாதையும் இருந்தாலும் ஒரு திருநாள் வேண்டியிருக்கிறதால், தீபாவளியையும், மதப் பண்டிகைகளையும் கொண்டாட ஆசைப்படு கிறார்கள்'' என்று பொங்கலைத் தமிழ்த் திருநாள் என ஒரு மாற்று விழாவாகக் கொண்டாடுமாறு பரிந்துரைத்ததும் அக்கூட்டத்தில் தான்.

அதே கூட்டத்தில் இந்தியா குறித்தும் பேசுகிறார். ''ஷேக்ஸ்பியர் வேண்டுமா? இங்கிலாந்து வேண்டுமா? என்றால் இங்கிலீஷ் மகனே ஷேக்ஸ்பியர் வேண்டும் என்பானாம். நாம் எதைக் கேட்பது? இந்தியா வேண்டுமா? கம்ப இராமாயணம் வேண்டுமா? என்றால் உண்மைத் தமிழ்மகன் என்ன சொல்லுவான்? இரண்டு சனியனும் வேண்டாம் என்றுதானே சொல்லுவான்'' என்கிறார் பெரியார்.

இதில் முதல் கேள்விக்கு வெறுமனே இங்கிலீஷ் மகன் என இங்கிலாந்தின் குடிமகனைக் குறிப்பிட்டவர், இரண்டாவது கேள்விக்கு ''உண்மைத் தமிழ்மகன்'' என்று பிரித்துக் கூறுகிறார். அதாவது உண்மையான தமிழ்நாட்டினர் எவர் ஒருவரும் தமிழரை இழிவுபடுத்தும் கம்பராமாயணத்தை மட்டுமல்ல; தமிழரை அடிமைப்படுத்தும் 'இந்தியா' என்ற அரசியல் கட்டமைப்பையும் ஏற்க மாட்டார்கள் என்பதையே கூறுகிறார். ஆக, சுயமரியாதையுள்ள தமிழர் 'இந்தியா' வில் இருக்க விரும்பமாட்டார்கள் என்பதன்வழி தனித் தமிழ்நாட்டை விழைவது தான் இதன் உள்ளடக்கம் என்பதை அறிய முடியும். இதுவே 1936-ஆம் ஆண்டில் இந்தியா, தமிழ்நாடு குறித்து பெரியார் கொண்டிருந்த நிலைப்பாடு ஆகும்.

# 1937இல் பெரியாரின் நிலைப்பாடு

இந்தி திணிப்பு குறித்த இராஜாஜி அரசின் கருத்துகள் வெளிவரத் தொடங்கிய 1937ஆம் ஆண்டின் நிலைப்பாடுகளைக் குறித்துப் பார்ப்போம்.

1937 அக்டோபரில் நடைபெற்ற சென்னை பொதுக் கூட்டத்திலும், அதே அக்டோபரில் திருநெல்வேலியில் தமிழ்ப் பாதுகாப்பு சங்கத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் 12.11.1937 அன்று திருவையாறு செந்தமிழ்க் கல்லூரி சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் ஆந்திரா தனியாகப் பிரிய முயல்வதைப்போல தமிழருக்கு என்றும் தனியாக தமிழ்மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்று கோரும் தீர்மானங்களை நாவலர் சோமசுந்தர பாரதியார் முன்மொழிந்த செய்திகளைப் பார்த்தோம். மேற்கூறப்பட்ட மூன்று கூட்டங்களுக்கும் முன்னதாக 19.91937 அன்று ஈரோடு கொல்லம் பாளையத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் பெரியார் ஆற்றிய உரையைப் பார்ப்போம்.

“இந்தியா நம் தாய்நாடு என்று சொல்வதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? இந்தியா என்கிற பெயர் இந்த நாட்டுக்கு எப்போது ஏற்பட்டது? இதற்கு எல்லை என்ன? பர்மா போன வருஷம் பிரிந்து விட்டது. அதற்கு முன் இலங்கை பிரிந்து விட்டது. அதற்கு முன் மலேயா பிரிந்து விட்டது. அதற்கு முன் நேப்பாளம், புத்தான் (பூட்டான்) பிரிந்து விட்டது. இப்படியே எவ்வளவோ பிரிந்து எவ்வளவோ சேர்ந்திருக்கிறது. இந்த நிலையில் தாய்நாடு எது? தகப்பன் நாடு எது? புராணகாலத்தில் 56 நாடுகள் இருந்ததே. அப்போது ஒரு நாட்டுக்காரன் ஒரு நாட்டைத் தாய்நாடு என்று கருதினானா?

இப்போதும் நேற்று சட்டசபையில் ஆந்திரர்கள் தங்களைத் தமிழ்நாட்டிலிருந்து பிரித்துத் தனி மாகாணம் ஆக ஆக்க வேண்டுமென்கிறார்கள். மாகாண சுதந்திரம் கொடுத்து, மாகாணத்திற்கு மாகாணம் சர்வ சுதந்திரமாய் தன்தன் காலிலேயே நிற்கும்படியான நிலைமை ஏற்பட்டு, ஐரோப்பா தேசத்தைப்போல் பாஷை வாரியாக தனித்தனி நாடாகப் பிரிந்து கொண்டால் இந்தியா எப்படி எல்லோருக்கும் தாய்நாடாகும்? நேபால் நம் ஒரு ஜில்லா போலுள்ள விஸ்தீரணம். அவர்கள் இந்தியாவைத் தாய்நாடென்பார்களா? சையாமில் (இன்றைய தாய்லாந்து) பெரிதும் இந்து மதம் தான். அவர்கள் இந்தியாவைத் தாய்நாடென்பார்களா?

ஐரோப்பாவில் நார்வே, ஸ்வீடன், டென்மார்க், ஹாலண்ட், பெல்ஜியம், போர்த்துக்கல், கிரீஸ் ஆகிய நாடுகள் நமது நான்கு ஜில்லா, மூன்று ஜில்லா, இரண்டு ஜில்லா விஸ்தீரணமுள்ளவை. இவர்கள் எல்லோரும் தங்கள் நாட்டைத் தாய் நாடென்பார்களே ஒழிய, ஐரோப்பாவைத் தாய்நாடென்பார்களா? ஆகவே, தமிழ் நாட்டவர்கள், திராவிட மக்கள் எந்தக் காரணம் கொண்டு இந்தியாவை தாய் நாடென்று கூறவேண்டும் என்பதும், இந்தியா பூராவும் எப்போதும் ஒரே குடை யின் கீழ் இருக்கவேண்டும் என்பது எனக்கு விளங்கவில்லை'' என்கிறார் பெரியார்.

இவ்வுரைப் பகுதி வெளிப்படுத்தும் செய்திதான் என்ன? ஒரு மாவட்ட அளவிலான பரப்பு கொண்ட நேபாளம் தனிநாடாக இருக்க முடியும்போது, இரண்டு, மூன்று, நான்கு மாவட்டங்களின் பரப்புடைய பல ஐரோப்பிய நாடுகள் தனிநாடுகளாக இருக்க முடியும் என்கிறபோது, தமிழ்நாடு மட்டும் ஏன் தனிநாடாக இருக்கமுடியாது? என்பது ஒன்று.

மொழிவழியாக அப்போது கேட்கப்பட்டு வந்த ஆந்திர மாநிலம் போல சர்வ சுதந்திரமான வாய்ப்போடு அனைத்து மொழிபேசும் பகுதிகளும் தனிநாடுகள் ஆகவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் ஆவலும் மற்றொன்று.

குறிப்பாக தமிழ்நாட்டவர் எதற்காக இந்தியாவை தாய்நாடென்று கூறவேண்டும்? தேவையில்லையே என்ற குறிப்பு மற்றொன்று ஆகிய மூன்று செய்திகளை அழுத்தமாக உரைக்கும் பகுதிகளல்லவா இவை?

அதே உரையின் தொடர்ச்சியாகக் கூறும் செய்திகளையும் பார்ப்போம்.

''இந்தியா ஒரு நேஷனா? அதற்கு பாஷை எது? மதம்எது? இந்தியாவில் எத்தனை மதம்? எத்தனை ஆச்சார அனுஷ்டானம்? இந்து

மதத்தால் இந்தியா நேஷனாயிற்று என்றால், அதாவது நேஷனுக்கு மதமே பிரதானம் என்றால் இஸ்லாமியருக்கும், கிறித்துவருக்கும், பௌத்தருக்கும், பார்சிகளுக்கும் இந்தியா நேஷனாகுமா? எதைக் கொண்டு அவர்கள் இந்தியாவை நேஷன் என்பது. பாஷையைக் கொண்டு நேஷன் பிரிப்பது என்றால் மாகாணம் ஒன்றுக்கு நான்கைந்து நேஷன் ஆகிவிடாதா?'' என்ற கேள்விகளை எழுப்புகிறார் பெரியார்.

தொடர்ச்சியாக, ''மதராஸ் ஒரு நேஷன் அல்லவென்றும், அது தனித்து இருக்கமுடியாது என்றும் கே.பி.பிள்ளை சொன்னார். மதராஸ் ஒரு தனி நேஷனாய் இருந்தது. இன்றும் இருக்கிறது'' என்றுகுறிப்பிடுகிறார்.

எல்லாம் சரி. அதற்குத் தீர்வுதான் என்ன? அதையும் அதே உரையின் பிற்பகுதியில் கூறுகிறார் பெரியார். ''இன்றைய அரசியலைப் பார்க்கின்ற போது, எக்காரணம் கொண்டாவது, எப்பாடுபட்டாவது, நம் நாட்டை வடநாட்டு சம்பந்தத்திலிருந்து தனியாய் பிரித்துக் கொண்டால் ஒழிய நமக்கு நாட்டு விடுதலையோ, மானமோ ஏற்படப் போவதில்லை'' இதுதான் பெரியார் கூறும் தீர்வு. 19.9.1937-இல் ஆற்றிய இவ்வுரை 26.9.1937 நாளிட்ட 'குடிஅரசு' இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

## கருத்துகளை விதைத்து, களத்தில் நின்றவர் பெரியார்!

தொடர்ச்சியாக தமிழ்நாடு தனிநாடு, வடநாடு வெளிநாடு என்ற சிந்தனையையும், இந்தியா ஒரே நாடல்ல; பலநாடுகளின் கூட்டமைப்பே என்ற கருத்தையும், வடநாட்டார் பிடியில் இருந்து தமிழ்நாட்டைப் பிரித்து தனிநாடாக அமைத்துக் கொண்டால் ஒழிய, பார்ப்பன, பனியா முதலாளிகள் சுரண்டலிலிருந்து நாம் மீளவே முடியாது என்ற கருத்தையும் 1937இலேயே பெரியார் கொண்டிருந்தார் என்பதை எவர் ஒருவரும் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

ஆனாலும், பெரியாருக்குத் தமிழ் மக்களிடையே உள்ள புகழ், பெருமை ஆகியவற்றைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்கள், அல்லது தாம் விரும்பும் கொள்கைகளை மக்களிடம் எடுத்துச் சென்று அவற்றை ஏற்க வைக்க முடியாதவர்கள், பெரியார் பெற்றிருந்த நம்பிக்கையை மக்களிடம் பெற முடியாதவர்கள், ''ஆடத் தெரியாதவள் கூடம் கோணல்'' என்று கூறியதைப் போல அன்று முதல் இன்று வரை ஏதேனும் வக்கணை பேசியே வந்திருக்கிறார்கள்.

பெரியார், ‘திராவிட நாடு’ என்ற கோரிக்கையோடு இயங்கிய காலம் 1939 முதல் 1956 வரையிலான 17 ஆண்டுகளே. 1956 முதல் “தமிழ்நாடு தமிழருக்கே” என்ற முழக்கத்தை முன்வைத்தே அடுத்த 17 ஆண்டுகள் பேசினார், இயங்கினார். அண்ணா முன்வைத்த “திராவிட நாடு திராவிடருக்கே” என்ற கோரிக்கை 1963இல் கைவிடப்பட்டுவிட்டது. அண்ணா கோரியதும் கூட, திராவிட நாடு என்ற ஒற்றை நாட்டை அல்ல; “மொழிவழி பிரிந்து, இனவழி கூடக் கூடிய, பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய திராவிட- சமதர்ம - குடியரசுக் கூட்டாட்சியே” என்றே அண்ணா தெளிவாகக் கூறி வந்திருக்கிறார். 29 மாநிலங்கள் கொண்ட இந்தியாவில் இருந்து பிரிந்து போகும் சுய நிர்ணய உரிமை கோருவோருக்கு, நான்கு மாநிலங்கள் அல்லது அரசுகள் கொண்ட திராவிட நாடு குறித்து ஏன் அவ்வளவு கோபம் என்பது ஒரு புரியாத புதிர்தான்.

எவ்வாறாயினும், கடந்த 50 ஆண்டுகளாக ‘திராவிட நாடு’ என்ற பேச்சே தமிழ்நாட்டில் இல்லை. 1939 முதல் 1956 வரை 17 ஆண்டுகள் மட்டுமே பெரியாரும், 1939 முதல் 1963 வரை 24 ஆண்டு காலமே அண்ணாவும் திராவிட நாட்டுக் கொள்கையைக் கொண்டிருந்தார்கள். அதிலும் பெரியார், 1956 இலிருந்து 1973இல் தனது வாழ்நாள் இறுதிவரை யிலும் 17 ஆண்டுகள் தனித் தமிழ்நாட்டையே பேசி வந்திருக்கிறார். அண்ணா மறைந்து 45 ஆண்டுகளும், பெரியார் மறைந்து 41 ஆண்டுகளும் கடந்துவிட்டன. அவர்கள் 17, 24 ஆண்டுகள் கொண்டிருந்த கொள்கைகளை, அவர்கள் மறைந்து 41, 45 ஆண்டுகள் கழிந்த பின்னரும், தமிழ்த் தேசியத்தை வென்றெடுக்கத் தடையாக உள்ளன என்று பிதற்றித் திரிவதை, ‘ஆடத் தெரியாதவள் - கூடம் கோணல்’ என்பதைத் தவிர வேறு எப்படித்தான் விளக்குவது ?

அப்படிப்பட்ட ஆட்டக்காரக்களில் சிலர், எவ்வித அடிப்படை ஆதாரமுமின்றி சுயமரியாதை இயக்கத்தை உண்மையாகத் தோற்றுவித்தவர் எஸ்.இராமநாதன்தான் என்றும், பெரியாரின் எழுத்துகள் எல்லாம் குத்தூசி குருசாமியின் எழுத்துகளே என்றும் இப்போதும் பேசிக் கொண் டிருக்கிறார்கள்.

1925 நவம்பர் இறுதியில் தான் பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறினார். ஆனால் 1925, மே மாத தொடக்கத்திலேயே ‘குடிஅரசு’ ஏட்டைத் தொடங்கி இருந்தார்.

அந்த சமயம், ஈரோட்டின் முக்கிய சந்திப்பில் இருந்தது ஒரு விநாயகர் கோவில். அதற்கு அருகே இருந்தன இரண்டு அசைவ உணவு விடுதிகள். அவற்றை அப்புறப்படுத்த வேண்டும் என்று சிலரின் அழுத்தத்தால், நகராட்சியும் வற்புறுத்தியது. அதற்கிணங்க கடையை சிறிது தள்ளி 50 அடிதூரத்துக்கு அப்பால் வைத்துக் கொண்டனர்.

அது குறித்து ‘குடிஅரசு’ தொடங்கப்பட்ட இரண்டாம் மாதத்திலேயே, 5.7.1925 இதழில் பெரியார் எழுதுகிறார். “‘சிவில்’ விநாயகருக்கு ‘மிலிடேரி’ உணவு பக்கத்திலிருப்பது இந்துக்களுக்குப் பிடிக்கவில்லை. இந்துக்களின் உணர்ச்சியை மகம்மதிய நண்பர்கள் மதித்து அவைகளை எடுத்துவிட வேண்டும் என்று கூறியதற்கு என் வந்தனம்” என்று பாராட்டுகிறார். அந்த அசைவக் கடைகள் 50 அடிக்கு அப்பால் தள்ளி வைக்கப்பட்டு விட்டது என்றதும் கூச்சலிட்ட இந்துக்களும் அமைதி ஆகிவிட்டார்கள். வேறு உள்நோக்கங்களோடு செய்யப்பட்டதே இது என்பதை அறிந்த பெரியார், அதை எப்படி பதிவிடுகிறார் பாருங்கள். “ ‘விநாயகர்’ கூச்சல் வெறும் வார்த்தைகள் என்பது நிச்சயம். ‘மிலிடேரி’ உணவின் வாசனை 50 அடி தூரத்திலுள்ள விநாயகருக்கு எட்டாமல் போனால் அவருக்கு இந்துக்கள் “கௌரவமான கல்லறை அடக்கம்” செய்ய வேண்டியது தானே சரியாக இருக்க முடியும்” என்று, ஒரே நேரத்தில் இந்து மதவாதிகளின் சுயநல மத வெளிப்பாட்டையும், கடவுள்களின் ‘சர்வசக்தி’ பித்தலாட்டத்தையும் எள்ளி நகையாடுகிறார் பெரியார்.

‘சுயராஜ்ய கட்சி’ என்ற பெயரால் காங்கிரசில் இருந்த பார்ப்பனர்கள் சத்தியமூர்த்தி தலைமையில் தேர்தலில் ஈடுபடும் ஆசையோடு ஒரு கட்சியை இங்கு தொடங்கி இருந்தனர். அந்த சுயராஜ்ய கட்சியைப் பற்றி 25.10.1925 நாளிட்ட ‘குடிஅரசு’ இதழின் தலையங்கத்தில் இவ்வாறு எழுதுகிறார், பெரியார் (அப்போது பெரியார் காங்கிரசில்தான் இருந்தார்) “சுயராஜ்ய கட்சி என்ற பேர் மாத்திரம் இருக்கிறதே அல்லாமல் சுயராஜ்ய கட்சிக்கென்று ஏற்பட்டிருக்கும் திட்டமென்ன? ராஜீயத் (அரசியல்) திட்டம் ஏதாவது இருக்கிறதா? பொருளாதரத் திட்டம் ஏதாவது இருக்கிறதா? சமூக முன்னேற்றத் திட்டம் ஏதாவது இருக்கிறதா? என ஊன்றிப் பார்த்தால், உத்தியோகத்தை எல்லாம் தாங்களே கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்பதைத்தான் ராஜீயத் (அரசியல்) திட்டமாகவும், அதன் சம்பளமெல்லாம் தங்களுக்கே வர வேண்டும் என்பதைத் தான் பொருளாதாரத் திட்டமாகவும், இந்த உத்தியோகமும், சம்பளமும் பிராமணர்களாகிய தங்கள் ஜாதியாருக்கே வந்து விட வேண்டும் என்பது தான் சமூகத் திட்டமாகவும் வைத்துக் கொண் டிருப்பதாகத் தெரிகிறது” என்று எள்ளல் நடையில் எழுதிச் செல்கிறார்.

ஆனாலும், பெரியாரின் எள்ளல் நடை எழுத்துக்களெல்லாம் குத்தூசி குருசாமி எழுதியது தான், பெரியார் அவற்றைத் தன் பெயரில் வெளியிட்டுக் கொண்டார் என்று கூறித் திரிவோர் சிலர் இன்றும் இருக்கிறார்கள். அதல்லாமல் 'சித்திரபுத்திரன்' என்ற பெயரில் எழுதபட்டுள்ளவை அனைத்தும் குத்தூசி குருசாமி எழுதியதுதான் என்று கூறுவோரும் உண்டு. 1925 முதலாக எழுதப்பட்டுள்ள 'சித்திரப்புத்திரன்' கட்டுரைகளை எல்லாம் யார் எழுதியிருப்பார்கள்? 1927 இறுதியில் பெரியாரிடம் வந்து சேர்ந்த குத்தூசி குருசாமிதான் என்று எப்படி இவர்களால் கூசாமல் புளுக முடிகிறது? ஏன் பெரியாருக்கு இயக்கத்தை நடத்த ஆலோசனைகள் கூறி வழி நடத்தியவரே குத்தூசிதான் என்போரும்கூட இருக்கிறார்கள்.

ஆனால் பெரியாரை விட்டு வெளியேறிய குத்தூசி குருசாமி ஏன் தொடர்ந்து ஓர் இயக்கத்தை நடத்த முடியவில்லை? பெரியாரிடம் இருந்தவரை 'தனித் தமிழ்நாடு' பேசியவர், வெளியேறிய பின் 'அகில இந்தியா' பேசியதற்கு என்ன காரணம்? பதில் கூறுவார் உண்டோ?

சரி, அடுத்து எஸ்.இராமநாதன்தான் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கக் காரணமாக இருந்தவரும் வளர்த்தவருமா? அப்படிப்பட்ட கொள்கைக்காரர் ஏன் இராஜாஜியுடன் போய்ச் சேர்ந்தார்? சேர்ந்து அவர் அமைச்சரவையில் எப்படி அமைச்சரும் ஆனார்? அமைச்சராக இருந்த காலக்கட்டத்தில் கட்டாய இந்திக் கொள்கையை இராஜாஜி கொண்டு வந்த போதுகூட, அதை ஜீவாவைப் போலவே ஆதரித்துக் கொண்டு, எப்படி அமைச்சராகத் தொடர முடிந்தது? என்பதற்குப் பதில் கூறுவார் எவரும் இலர். அந்த எஸ்.இராமநாதன் எவ்வாறு பணியாற்றினார் என்பதற்கு 'குடிஅரசி'லேயே விடையும் இருக்கிறது.

2.5.1925 அன்று தொடங்கப்பட்ட 'குடிஅரசு' ஏட்டின் முதலாமாண்டு நிறைவு நாளை ஒட்டி 2.5.1926 அன்று 'நமது பத்திரிக்கை' என்ற தலைப்பிட்டு பெரியார் ஒரு தலையங்கம் எழுதியுள்ளார். அதில், "குடிஅரசு தோன்றிய பிறகு அது ராஜீய (அரசியல்) உலகத்திலும் சமூக உலகத்திலும் பெரிய மாறுதல் ஏற்படுத்தியிருக்கிறது என்று பலர் நமக்கு எழுதி யிருப்பதை நாமும் உபயோகித்துக் கொள்கிறோம். 'குடிஅரசு' ஆசிரியருக்கு உண்மை நண்பர்களாய் இருந்து வந்த ஸ்ரீமான்களான டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு.வி.கலியாணசுந்தர முதலியார் முதலியவர்களின் கூட்டுறவு 'குடிஅரசு'க்குக் கிடைத்திருக்குமே யானால், அல்லது குறைந்தபட்சம் அவர்களுடைய எதிர்ப்பாவது இல்லாது இருந்திருக்குமானால் இன்னும்

பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கும். என்ன செய்வது? உள்ளதைக் கொண்டு திருப்தி அடைய வேண்டியது தான்'' என்று நிலவிய சூழலை வருத்தத்துடன் குறிப்பிடும் பெரியார், ''திரு.வி.க. காங்கிரஸின் பேரால் பிராமணர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்க ஊரூராய், கிராமம் கிராமமாய், தெருத் தெருவாய்த் திரிந்து, தனது தொண்டை கிழியும்வரை (கிழிந்தாலும் கூட) பிரச்சாரம் செய்யப் போவதாய் சொல்லியிருக்கிறார்'' என்று குறிப்பித்துள்ளார். அதன்படி, திரு.வி.க., வரதராஜுலு நாயுடு ஆகியோர் தமது கட்சியைப் பரப்ப, எவ்வளவு கடுமையாக, வீச்சாக உழைக்கிறார்கள் என்பது குறித்து தொண்டை கிழிந்தாலும் கூட என்பதை அடைப்புக்குறி போட்டு அழுத்தமாகக் குறிப்பிடுகிறார் பெரியார். அதே வேளை சுயமரியாதை இயக்கத்தில் தனக்கு ஆதரவாக உள்ள நண்பர்களைப் பற்றியும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

''ஸ்ரீமான்கள் சர்க்கரைச் செட்டியார், சுரேந்திர நாத் ஆர்யா, எஸ்.இராமநாதன், தண்டபாணிப் பிள்ளை போன்றவர்கள் மனதில் மாத்திரம் வேகமாக இருக்கிறார்களே ஒழிய, வெளியில் வந்து அவர்களைப் போல் வேலை செய்ய கவலையில்லாதவர்களாய் இருக்கிறார்கள். இந்த நிலைமையில், 'குடிஅரசு'க்கு இருக்கும் பொறுப்பையும் கஷ்டத்தையும் நினைத்துப் பாருங்கள்'' என்று கவலையோடு தொடர்கிறார் பெரியார்.

தாங்கள் ஒரு கொள்கையை ஏற்றுக் கொண்டால் மட்டும் போதுமா? அதற்காக மனதளவில் ஆதங்கப்பட்டால், ஆவல்பட்டால் மட்டும் போதுமா? களத்தில் இறங்கிப் பணியாற்ற வேண்டாமா? என்பதே பெரியாரின் கேள்வி; பணியாற்ற வேண்டும் என்பதே அவரின் எதிர்பார்ப்பு; விழைவு; விருப்பம். அதே வகைதான் தோழர் மணியரசன் போற்றிப் புகழும் தமிழறிஞர்கள் இந்தி எதிர்ப்புப் போரில் நடந்து கொண்ட விதமும்.

கட்டாய இந்திக் கொள்கையை 1938 ஜூன் மாதம் தொடங்கும் கல்வி ஆண்டில் இருந்து, அன்றைய சென்னை மாகாணத்தில் உள் அடங்கியிருந்த தமிழகத்தில் 60; ஆந்திரத்தில் 54; கர்நாடகத்தில் 4; மலையாளத்தில் 7 என 125 உயர்நிலைப் பள்ளிகளில் ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை இந்தி கட்டாயப் பாடமாக இருக்கும் என்ற அரசாணை 21.4.1938-இல் பிறப்பிக்கப்பட்டது. சில நாட்களில் அவ்வாணை குறித்த செய்திகள் அனைவருக்கும் போய்ச் சேர்ந்தது.

உடனடியாக பள்ளிகள் திறந்தவுடன் பள்ளிகளுக்கு முன்னால் ஆர்ப்பாட்டங்கள், அமைச்சர்கள் வீடுகளுக்கு முன்னால் மறியல் என பல்வகை இந்தி எதிர்ப்பு செயல்திட்டங்கள் தீட்டப்பட்டன. பெரியாரும்

தொடர்ச்சியாக 8.5.1938; 15.5.1938; 22.5.1938; 29.5.1938 ஆகிய நாளிட்ட 'குடிஅரசு' இதழ்களில் 'இந்தி வந்துவிட்டது. இனி என்ன? ஒரு கை பார்க்க வேண்டியது தான்!' 'நெருக்கடி என்றுமில்லா நெருக்கடி!' 'தொண்டர்களே! சென்னை செல்க!' 'போர் மூண்டுவிட்டது. தமிழர் ஒன்று சேர்க!' என்ற தலைப்புகளிட்டு தலையங்கங்களை எழுதி அனைவரும் கட்சி, மதம், ஜாதி வேற்றுமைகளையும் கடந்து இந்தி எதிர்ப்புப் போரில் குதித்து, வீச்சாக செயலாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

அப்படி 'இந்தி வந்துவிட்டது. இனி என்ன? ஒரு கை பார்க்க வேண்டியதுதான்!' என்ற தலைப்பிட்டு எழுதப்பட்ட முதல் வாரத் தலையங்கத்தில் (8.5.1938) 'மடாதிபதிகளுக்கு மன்னிப்பு' என உள்தலைப்பிட்டு "தமிழ் மடாதிபதிகள் என்பவர்களே, நீங்கள் இது வரை நடந்து கொண்டதையும் மறந்து விடுகிறோம்", "உங்களிடம் பக்தி விசுவாசம் காட்டுபவர்களை எங்களிடம் விரட்டி விடுங்கள்" என்று வேண்டுகோள் வைக்கிறார்.

பொதுமக்களுக்கு மாபெரும் விண்ணப்பம் என்ற உள்தலைப்பில் "உங்கள் சௌகரியங்களுக்கு அடங்கின சகல பரிசுத்தமான ஆதரவுகளையும் அளியுங்கள். உங்களது வாலிப இளைஞர்களை போருக்குக் கச்சை கட்டி விரட்டி அடியுங்கள்" என வேண்டுகிறார்.

செல்வர்களுக்கு ஒரு வார்த்தை எனக் குறிப்பிட்டு "உங்கள் பழைய நடத்தைகளை மறந்து விடுகிறோம்" என்று தொடங்கி, பழைய சுரண்டல் குற்றங்களுக்குப் பரிகாரம் என்ன தெரியுமா? "நடந்தது நடந்து விட்டது அதை பரிகரிக்க, உங்களால் செய்யக் கூடியது, நீங்கள் மானத்திலும் உயிரிலும் பெரிதாக மதிக்கும் உங்கள் செல்வத்தை இக்கருமத்திற்கு உதவி பெரிய வீரராகுங்கள்" என வலியுறுத்துகிறார்.

இளைஞர்களுக்கு வேண்டுகோள் என விளித்து, பல செய்திகளைக் கூறி "அடிபடவும், இராப்பட்டினி பகல் பட்டினி கிடக்கவும், து(தொ)லை வழி நடக்கவும் தயார் செய்து கொள்ளுங்கள். போர்முனை சிப்பாய் போல் ஆக்கினைக்கு (கட்டளைக்கு) அடி பணியவும் தயார் செய்து கொள்ளுங்கள்" என்று முடிக்கிறார்.

பெரியோர்களுக்கு விண்ணப்பம் என்ற மற்றொரு உள்தலைப்பில் "பெரியோர்களே! முன் மாதிரி காட்ட வாருங்கள்! உங்களுடைய உள்ளங்களுக்குப் புதிய அங்கியை மாட்டிக் கொள்ளுங்கள் - உங்கள்

மார்பைப் பார்க்காதீர்கள், அடிச்சுவட்டைப் பாருங்கள். வீர இளைஞர்களுக்கு நீங்கள் வழிகாட்டுகிறவர்கள் என்பதை ஒவ்வொரு அடி வைக்கும் போதும் ஞாபகத்தில் வையுங்கள்'' என்று முடிக்கிறார்.

அத்தலையங்கத்தில் எழுதப்பட்டுள்ள வேறுசில சொற்களைத்தான் அனைவர் கவனத்துக்கும் முன்வைக்க விரும்புகிறோம். அது தான் நாம் சுட்டிக் காட்ட விரும்பும் பகுதியும் கூட

''தோழர்கள் எஸ்.எஸ். பாரதியார் (ச. சோமசுந்தர பாரதியார்), உமாமகேசுவரம் பிள்ளை, கி.ஆ.பெ.விசுவநாதம், வள்ளல் சிவஞான தேசிகர் போன்றவர்கள் கீழிறங்கி வந்து வினைஞர்களாகி மற்ற வாலிபர்களுக்கு வழிகாட்டிகளாக செல்ல வேண்டும்'' என்பதே அது.

இச்சொற்றொடர் நமக்குக் கூறும் செய்தி தான் என்ன? மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எவர் ஒருவரும் இதுநாள் வரையிலும் கீழிறங்கி வரவுமில்லை; கருத்தாளர்களாக இருக்கிறார்களே அன்றி வினைஞர்கள் (செயற்படுவோர்) ஆகவுமில்லை என்பதுதானே.

எல்லோருடைய ஒத்துழைப்பும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்குத் தேவை என்று கருதிய பெரியார் எழுதிய வரிகள்தாம் இவை; அரவணைத்து சென்று அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்பையும் நாடிய பெரியார் எழுதியவைதான் இவை; அவையும் எப்போதோ ஒரு சமயம் எழுதப்பட்டதல்ல; இந்தி எதிர்ப்புப் போர் தொடங்க வேண்டியிருந்த அதிஉச்ச நிலையில் எழுதப்பட்டவை. எங்கோ தனியிடத் தில் இரகசியமாய்க் கூறப்பட்டவையல்ல; அப்போது தமிழ்நாட்டின் முன்னணி வார ஏடாகவும், இந்தி எதிர்ப்பு செய்திகளை, போராட்டங்களை, திட்டங்களை அறிய தமிழ்நாடு முழுதும் விரிவாக வாசிக்கப்பட்ட ‘குடிஅரசு’ ஏட்டில், கட்டாய இந்திப் பாட அரசாணை பிறப்பிக்கப்பட்டதன் பின்னர் வெளிவந்த முதல் இதழில் தலையங்கமாக எழுதப்பட்ட வரிகளே இவை. இவ்வரிகள் இந்தி எதிர்ப்புப் போரை தமிழறிஞர்கள் நடத்தினார்களா? பெரியார் நடத்தினாரா? என்பதைத் தெளிவாக நமக்கு விளக்கும்.

அதற்கும் முன்பாக 20-3-1938இல் குடிஅரசில் ''சர்வ கட்சி தமிழர் மாநாடு'' என்ற தலைப்பிட்டு எழுதியுள்ள தலையங்கத்தில் இந்தித் திணிப்பு முயற்சி, காந்தி கல்வித் திட்டம், கடன் நிவாரண சட்டம் போன்ற நெருக்கடிகளைச் சுட்டிக் காட்டி எழுதுகிறார் பெரியார். இதனையும்

படித்தால்தான் எதற்காக மேற்குறிப்பிடப்பட்ட தமிழறிஞர்களைக் கீழே இறங்கிவந்து வினைஞர்களாகுமாறு பெரியார் வேண்டினார் என்பது நமக்கு முழுமையாகப் புரியும்.

"ஹிந்தி முயற்சி அழியவும், காந்திக் கல்வித் திட்டம் கைவிடும்படிச் செய்யவும் தமிழ் மக்கள் பெரியதொரு முயற்சி செய்ய வேண்டியது மிகவும் அவசரமும், அவசியமும் ஆன காரியமாய் இருந்துவருகிறது. பொருளைப் பற்றியாவது எப்படியாவது சரிப்படுத்திக் கொள்ளலாம் என்றாலும் சரியான பொறுப்பும், நம்பிக்கையும் உள்ள தலைவர்கள் யார் என்பது கடினமான பிரச்சினையாக இருந்துவருகிறது. யார் எப்படியிருந்த போதிலும் இந்த விஷயங்களையும் மற்றும் சில அரசியல் விஷயங்களையும்பற்றி ஆலோசித்து முடிவு செய்ய ஏப்ரல் மாதத்தில் ஒரு சர்வ கட்சி தமிழர் மாநாடு கூடி யோசிக்க வேண்டியது அவசியம் என்பதையும் அதிலிருந்து தக்கதொரு கிளர்ச்சி செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பதையும் மிக்க கவலையோடு தெரிவித்துக் கொள்கிறோம்."

பெரியார் ஏப்ரல் மாதம் நடத்தலாம் என்று எண்ணிய சர்வக் கட்சி தமிழர் மாநாடுதான், மே மாதத்தில் கூடியது. அவ்வாறு 28.5.1938 அன்று திருச்சியில் கூடி நிறுவப்பட்ட தமிழ் மாநில இந்தி எதிர்ப்பு வாரியத்துக்கு (Anti-Hindi High Command) மேற்கண்டவாறு, விமர்சிக்கப்பட்ட சோமசுந்தர பாரதியாரைத் தலைவராகவும், கி.ஆ.பெ. விசுவநாதத்தைச் செயலாளராகவும் அமர்த்தி விட்டு, மேலே விமர்சிக்கப்பட்ட உமா மகேசுவரம் பிள்ளையுடன், தானும், ஊ.பு.அ. சவுந்தரபாண்டியன், கே.எம்.பாலசுப்பிரமணியம் ஆகியோருடன் வெறும் உறுப்பினராக இருந்துதான் செயல்பட்டுள்ளார் பெரியார் . "பதவி அல்ல அவரது நாட்டம்; பணி நடைபெற வேண்டும் என்பது மட்டுமே அவரது நாட்டம்" என்பதை எவர் ஒருவராலும் எளிதில் உணர முடியும்.

அதுபோலவே, தொடர்ந்து 42 நாட்கள் நடைபெற்ற திருச்சி-சென்னை வழிநடைப் பிரச்சாரப் படையில் கலந்து கொண்டோர் பட்டியலும், போராட்டத்தில் சிறை சென்றோர் பட்டியலும் இந்தி எதிர்ப்புப் போரை நடத்தியது பெரியாரும், அவரது சுயமரியாதை இயக்கமுமே என்பதைத் தெளிவாக உணர்த்தும்.

ஆக, ஆந்திர மாநிலம் என தெலுங்கர்கள் தங்களுக்கான தனி மாநிலம் கோரி வைத்த கோரிக்கைகளைப் போல தமிழர்களுக்கு என்றும் தனி

மாநிலம் அமைய வேண்டும் என்ற தீர்மானம் மட்டுமே தமிழறிஞர் சோம சுந்தர பாரதியாரால் 1937-இல் சில நிகழ்ச்சிகளில் முன் மொழியப்பட்டது என்பது உண்மை தான்.

அதுவும்கூட பெரியார் அந்நிகழ்வுகளுக்கு முன்னதாகவே ஈரோடு கொல்லம்பாளையம் இந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டத்தில் "எப்பாடுபட்டாவது நம் நாட்டை வடநாட்டு சம்பந்தத்திலிருந்து பிரித்துக் கொண்டால் ஒழிய நமக்கு விடுதலையோ, மானமோ ஏற்படப் போவதில்லை" என்று பேசிய பின்னர் தான். எப்படி இருப்பினும் பெரியார் விரும்பியது வடவர் ஆதிக்கமற்ற சுதந்திரத் தமிழ்நாட்டை சோமசுந்தர பாரதியார் முன்மொழிந்ததோ சென்னை மாகாணத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளைக் கொண்ட தனி தமிழ் மாநிலத்தைத் தான்.

எனவே நாவலர் நெடுஞ்செழியன் நினைவுப் பிசகாக, ஒரு இடத்தில் 1938 மே மாதம் கடற்கரைக் கூட்டம் என தவறுதலாகக் கூறியதை வைத்துக் கொண்டு தோழர் மணியரசன் பேசியுள்ளார். ஆனால், அதே நெடுஞ்செழியன் எழுதிய பிற நூல்களில் பெரியார் தான் முதன்முதலாக தனித் தமிழ்நாடு பற்றி பேசியவர் என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளதையும் கட்டுரையின் பிற இடங்களில் எடுத்துக் காட்டியிருந்தோம். ஆக, புரோகித மறுப்புத் திருமண முறையானாலும், இந்தி எதிர்ப்புப் போர் ஆனாலும், தனித் தமிழ்நாடு கோரிக்கை ஆனாலும் தமிழறிஞர்கள் முன்னெடுத்தவற்றைத்தான் பெரியார் தொடர்ந்தார்; வீச்சாக எடுத்துச் சென்றார்; மக்கள் மன்றத்துக்குக் கொண்டு சென்றார் என்பவை அனைத்தும் ஆதாரமற்றவைகளே.

ஆனாலும், எந்த ஒரு மக்கள் போராட்டமானாலும் அது திடீரென உதித்து விடாது; அதற்கு முன்னதாக நிலவி வந்த புறச்சூழல் சாதகமாக அமையும்போதே வெடித்தெழும் என்பதை நாம் மறுக்கவில்லை. பெரியாருக்கு முன்னதாகவே இவையொத்த சிந்தனைகள் ஏதேனும் வடிவில் நிலவியிருந்திருக்கலாம்; அல்லது பேசப்பட்டிருக்கலாம். ஆனால், தோழர் மணியரசன் கூறுவதைப் போல் அது தமிழறிஞர்களால் அன்று.

நாம் இவற்றை எழுத வேண்டி வந்ததன் காரணம்கூட, 19.4.2014 அன்று தஞ்சையில் நடந்தேறிய அய்ந்தாவது உலகத் தமிழ்ப் பொதுமாநாட்டில் தோழர் மணியரசன் ஆற்றிய உரை மட்டுமல்ல; அவர் பல வேளைகளில் பெரியார் மீது வைத்து வந்துள்ள ஆதாரமற்ற, திசைதிருப்பும் வாதங்களையும் கருத்தில் கொண்டு தான்.

பொது வாழ்க்கையில் சமூக முன்னேற்றம், விடுதலை குறித்த அனைத்தையும் எந்த ஒரு தனி இயக்கமும் தனித்து நின்று சாதித்து விட முடியாது. ஆனால், ஜாதி ஒழிப்பு, பெண்ணுரிமை, பகுத்தறிவு, பொதுவுடைமை, தேசிய இன விடுதலை, தாய் மொழிக் கல்வி, மனித உரிமை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு முதலிய அனைத்துத் துறைகளிலும் நாம் பெறும் வெற்றிகளே ஓர் இலட்சிய தமிழ்நாட்டை, தமிழ்ச் சமூகத்தைப் படைக்கும். அவ்வாறான ஒரு நிலை அடைவதற்குத் தடையாக மதவெறி அமைப்புகள், ஜாதி வெறியர்கள், ஆணாதிக்கவாதிகள், லாபவெறி பெருமுதலாளிகள், ஆதிக்க இந்திய தேசியர்கள் என ஏராளமான எதிரிகள் உள்ளனர்.

மேற்சொன்ன இலட்சியங்களில் ஏதேனும் ஒன்றையோ, இரண்டையோ மட்டும்தான் ஒரு அமைப்பால் வீச்சாக முன்னெடுக்க முடியும். மற்றொரு அமைப்பு மற்ற ஒன்றிரண்டு இலட்சியங்களுக்கு உழைக்கும். நாம் முன்னெடுக்கும் இலட்சியத்தை நோக்கிய போராட்டங்களை எதிர்க்காதவரையிலும், அது நமக்கு சாதகமானதே என்று கருதி, பணியாற்றுவதே சரியானதாக இருக்க முடியும். ஒரு இலட்சியத்துக்கு உழைக்கும் அமைப்பினரை நோக்கி, பிறிதொரு இலட்சியத்தை முன்னெடுப்பவர்கள் எமது இலட்சியத்துக்கு நீங்கள் ஏன் உழைக்க மறுக்கிறீர்கள் என்று வினவுவது எல்லாம் வேண்டாதனவே.

அதுவும் குறிப்பாக, புதைக்கப்பட்ட பிணங்களைத் தோண்டி எடுத்து முகர்ந்து பார்த்து குறை சொல்லும் போக்கு கட்டாயம் கைவிடப்பட வேண்டிய ஒன்றாகும். எவ்வித அரசியல் புரிதலும் அற்ற, ‘திடீர்’ தலைவர்கள், தலைகால் தெரியாமல் பிதற்றித் திரிவதைப் பற்றி நாம் கவலைப்படவில்லை. பூசிய சாயங்கள் அடுத்த மழையில் கரைந்ததும் உண்மை நிறம் வெளிப்பட்டு விடும்; வெளிப்பட்டுக் கொண்டும் இருக்கிறது. சுயநல எதிர்பார்ப்புகள், ஆசைகள் எதுவுமின்றி, இலட்சியத்துக்காக இழப்புகளைச் சகித்துக் கொண்டு இயங்கும் இயக்கங்களிடம் இவ்வகைப் போக்கு வேண்டாத ஒன்றே! எதிரிகளிடம் எய்ய வேண்டிய கணைகளைத் தோழமைகள் மீது எய்வது தேவைதானா? அனைவரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய நேரம் இது.

## பின் இணைப்பு

## சைவம் :
## பெரியார் எழுப்பும் கேள்விகள்!

*சமயம் என்பதைப்பற்றி சென்ற வாரம் ஒரு தலையங்கம் எழுதியிருந்தோம். இவ்வாரம் சைவ சமயம் என்பது பற்றி எழுதுகின்றோம்.*

*கொஞ்ச காலமாக சைவ சமயத்தின் பேரால் சிலர் போடும் கூச்சல் அளவுக்கு மேல் போகின்றது. சுயமரியாதை இயக்கத்தை ஒழித்தாக வேண்டும் என்று கட்சி சேர்க்கின்றார்களாம். அரசியல் பிழைப்புக் காரர்கள் சிலர் அப்படித்தான், அதாவது, "சுயமரியாதை இயக்கத்தை ஒழித்தாக வேண்டும், அதை ஒழிக்காவிட்டால் சுயராஜ்யம் தடைபட்டுப் போகும்" என்று கூச்சல் போட்டார்கள். கூலி கொடுத்தும் கூச்சல் போடச் சொன்னார்கள். அவ்வளவு கூச்சல்களையும் அடக்கிக்கொண்டு இப்போது நமதியக்கம் தலைநிமிர்ந்து நிற்கின்றதையும் அரசியல்காரர்களில் பெரும்பாலோரும் இதை ஆதரிப்பதையும் பார்த்து ஒருவாறு அடங்கி விட்டார்கள். இப்போது சைவ சமயத்தார்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்களில் சிலர் கிளம்பி சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க வேண்டுமென பிரச்சாரம் செய்து வருகின்றார்கள். இச்சைவ சமயத்தார்கள் என்பவர்கள், சுயமரியாதை இயக்கம் பார்ப்பனீயத்தையும், பார்ப்பனர்களையும் கண்டிக்கும் பொழுதும், வைணவ சமயத்தையும் வைணவர் களையும் கண்டிக்கும் பொழுதும் ஆனந்தக் கூத்தாடிக்*

கொண்டு நம்மீதும் சுயமரியாதை இயக்கத்தின் மீதும் புகழ் புராணமும் கவியும் பாடிக்கொண்டிருந்தார்கள்.

அதாவது, பார்ப்பன ஆதிக்கத்தை கண்டித்து சங்கராச் சாரியாரை தாக்கி வரும் போது நமக்கு உதவியும் செய்தார்கள். பிறகு வைணப் புராணங்களின் வண்டவாளங்களை வெளியாக்கும் போதும் நமக்கு உதவி செய்து வந்தார்கள். இதுமாத்திரமல்லாமல், இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லையென்றும் இந்துமதம் என்று சொல்லப்படுவது பார்ப்பனாதிக்கக் கொள்கைகள் கொண்டது என்றும் சொல்லும் போதும் அதை ஆதரித்து அதற்கும் வேண்டிய ஆதாரங்கள் உதவி வந்தார்கள்.

கடைசியாக சைவ மதப் புராணங்கள் என்பவைகளின் முறையில் அவற்றின் யோக்கியதைகளை வெளியாக்க நேரிட்ட போது மாத்திரம் ‘சுயமரியாதை இயக்கம் சமயங்களுக்கு ஆபத்தை விளைவிக்கின்றது; மோட்சத்திற்குத் தடையாய் நிற்கின்றது’ என்று சொல்ல வந்து விட்டார்கள்.

எனவே சைவ மதம் என்றால் என்ன? அது பார்ப்பன மதமல்லாமல் வேறு தனி மதம் என்றோ அல்லது தமிழ் மக்கள் மதம் என்றோ யாராவது சொல்ல முடியுமா? என்பதை முதலில் கவனிக்க விரும்புகின்றோம்.

நம் நாட்டு சைவர்கள் பெரும்பாலும் தாங்கள் ‘பார்ப்பன மதத்தை வெறுக்கின்றோம்’ என்கின்றார்கள். அன்றியும் பார்ப்பனர்களது மத ஆதாரம் என்பவைகளாகிய நான்கு வேதங்கள் என்பதையும் சைவர்கள் தங்களுக்கு சம்பந்தப்பட்டதல்ல என்கின்றார்கள். பார்ப்பனர்களின் “மோட்ச” சாதனமான வேள்விச் சடங்குகளையும் தாங்கள் ஒப்புக் கொள்ளுகின்ற தில்லை என்கின்றார்கள். மற்றும் புராணங்கள் என்பவைகளையும் ஆரிய சாஸ்திரங்கள் என்பவைகளையும் தாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது என்பதுடன் அவைகள் பொய் என்றும் கற்பனை என்றும் சொல்ல முன் வந்திருக்கின்றார்கள். பார்ப்பன ஆச்சாரியார்களும் அதாவது சங்கராச்சாரி போன்றார்களும் தங்களுக்கு சம்மந்தப்பட்டவர்கள் அல்ல என்றும் சொல்லுகின்றார்கள்.

*மற்றும் எவ்வளவோ, அதாவது, "ஆரியன் கண்டாய்! தமிழன் கண்டாய்!" என்று ஆரியத்தையும் தமிழையும் பிரித்து ஆரியத்திற்கும், தங்களுக்கும் தங்கள் சைவ மதத்திற்கும் சிறிதும் சம்மந்தமில்லை என்றும் தாங்கள் தனித் தமிழ்ச் சமயத்தார் என்றும் சொல்லிக்கொள்ளுவதுடன் அதற்கு வேண்டிய ஆதாரங்களையும் கண்டு வைத்திருக்கின்றார்கள். உதாரணமாக 'தென்னாட்டு சிவனே போற்றி' என்றும் பிரித்துச் சொல்லு கின்றார்கள். எனவே இந்நிலையில், சைவ மதம் என்றால் என்ன?*

*முதலாவதாக, கற்பனை என்றும் பொய் என்றும் ஆபாசமென்றும் அசம்பாவிதம் என்றும் சொல்லும்படியான கந்தபுராணம், சிவமகா புராணம் முதலாகிய புராணங்களை ஒதுக்கி விட்டு பார்த்தால் சிவனுக்கோ, சைவத்திற்கோ ஏதாவது கடுகளவு இடம் இருக்கின்றதா என்பதை கூர்ந்து நோக்கும்படி வாசகர்களை கேட்டுக் கொள்ளுகின்றோம்.*

*இரண்டாவதாக, இந்து மதத்தையோ, வைணவ மதத்தையோ, சைவ மதத்தையோ தனித்தனியாகவோ பொதுவாகவோ எடுத்துக் கொண்டு பார்ப்போமேயானால் அவைகளிலுள்ள பொதுவான கடவுள்களும், வைணவ, சைவ கடவுள்களும், சுரர்கள் என்னும் "தேவர்"களின் வேள்வி என்னும் யாகத்தை அழித்து வந்த அசுரர்கள் என்னும் "அரக்கர்களை" கொன்று வென்று யாகத்தைக் காக்க வந்தது என்கின்ற அஸ்திவாரம் தவிர வேறு மார்க்கத்தில் வந்த கடவுள்கள் ஏதாவது எங்காவது இருக்கின்றனவா? என்று பார்க்கும்படி வேண்டுகின்றோம்.*

*அல்லது பார்ப்பனர்கள் என்னும் ஆரியர்களின் வேதத்தை ஒப்புக் கொள்ளாததினாலோ, நிந்தித்ததினாலோ உலகம் "நீதியும் ஒழுக்கமும் கெட்டுப் போய்விட்டது" என்று சொல்லிக் கொண்டு அவதாரம் செய்ததாகவோ தோன்றியதாகவோ அல்லாமல் வேறுவழியில் வந்த ஏதாவது கடவுள்கள் உண்டா? இருக்கின்றனவா?*

*இந்து, வைணவ, சைவ சமய சம்மந்தமான எந்த புராணமும் இதைத் தவிர வேறு என்ன காரணங்களாவது கற்பிக் கின்றனவா?*

*உதாரணமாக, சைவ சமயச்சாரியார்கள் என்பவர்களும், "வேத வேள்வியை மக்கள் நிந்தனை செய்ததால் தோன்ற வேண்டியவர்களானார்கள். வேத வேள்வியை நிந்தனை செய்த மக்களையும் அழித்து வேத வேள்விச் சமயத்தையும் கடவுள்களையும் ஆதரிக்க வேண்டியவர்களானார்கள்" என்பதை யாராவது மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம்.*

*மற்றும் வேதத்தையும் வேள்வியையும் தள்ளிவிட்டு அவற்றைக் காப்பாற்ற வந்த கடவுள்களையும் தள்ளிவிட்டு ஆரியர்களால் புனையப்பட்டது என்கின்ற புராணங்களையும் தள்ளிவிட்டால், தேவாரத்திற்கோ, திருவாசகத்திற்கோ மற்றும் "தமிழ் மறை"க்கோ எங்காவது இடமிருக்கிறதா என்று கேட்கிறோம்.*

*சிவம், சைவம், ஆகமம், தேவாரம், திருவாசகம் என்ற வார்த்தைகளும் ஆரியத்தை அடிப்படையாகக் கொண்டவை என்னும் வழக்கை சுலபத்தில் தள்ளிவிட முடியாது. மற்றும் சைவக் கடவுள்கள் பெயரும் அக் கடவுள்களின் பெண்ஜாதி பிள்ளைகளின் பெயரும் அனேகமாய் முழுதும் ஆரியபாஷைப் பெயர்களே தவிர வேறில்லை. மற்றும் அப் பெயர்களுக்கு ஏற்ற காரணங்களும் அக்காரணங்களுக்கு ஆரியர்களால் கற்பிக்கப் பட்ட கதைகள்தான் ஆதாரமே ஒழிய வேறில்லை. மற்றும் அப் பெயர்களுக்கும் கதைகளுக்கும் ஏற்படுத் தப்பட்ட புராணங்கள் என்பவைகளும் பெரிதும் ஆரிய மூலத்திலிருந்து மொழி பெயர்த்ததாகச் சொல்லப்படுப்பவைகளேயல்லாமல் வேறல்ல.*

*நிற்க. சைவ சமயம் தென்னாட்டில் பரவி இருக்கின்ற அளவு மற்ற நாட்டில் அதாவது வடநாட்டில் பரவி இருப்பதாக சொல்ல முடியுமா? வட நாடு முழுவதும் ஏறக்குறைய வைணவ மதம் என்றே சொல்ல வேண்டும்.*

*தென்னாட்டில் மாமிசம் சாப்பிடாதவனுக்கு எப்படி சைவன் என்று சொல்லப்படுகின்றதோ அதுபோல வடநாட்டில் மாம்சம் புசிக்காதவனுக்கு வைஷ்ணவன் என்று சொல்லு வதுண்டு.*

*தென்னாட்டிலும் சமயத்தை ஏற்றுக் கொண்டவர்கள் சிலர் என்றுதான் சொல்லவேண்டும். அதிலும் சைவ சமயத்தார்களோ*

*சைவ சமயம் இன்னது என்று அறிந்தவர்களோ வெகு சிலர் என்றுதான் சொல்லவேண்டும். பாக்கியுள்ள மக்கள் அதாவது 100-க்கு 90 - பேர்கள் மாரி, கருப்பன், மாடன், மதுரை வீரன், பேச்சி என்பது போன்ற கடவுள் வணக்கக்காரரும் மற்றும் ஒரு சிலர் சைவ வைணவக் கடவுள்களையும் இக்கூட்டத்தில் சேர்த்துக் கொண்டிருக்கின்றவர்களுமே தவிர வேறல்ல.*

*ஏதோ பழைய காலத்து அரசர்கள் தங்கள் மடமையினால் கட்டி வைத்த கோவில்களும் அவர்கள் விட்ட சொத்துக்களால் நடக்கும் உற்சவங்களும், இப்போது சில கொடுமைக்காரர்கள் மக்களிடத்திலிருந்து அநியாய வழிகளில் கொள்ளையடித்து சம்பாதித்த பணத்தைக் கொண்டு கீர்த்திக்கும் தங்களை உயர்த்திக் கொள்வதற்கும் சிலர் தாங்கள் செய்த கொடுமையினால் ஏற்படும் பாவத்தைத் தொலைப்பதற்கும் என்று பழுது பார்ப்பதும் புதுப்பிப்பதும் இல்லாவிட்டால் இவ்வளவு பெருமைகள் கூட சொல்லிக் கொள்ள வகை இருக்காது என்றே சொல்லலாம்.*


*சமயம் என்பதும், வைணவம் என்பதும், சைவம் என்பதும் என்ன என்று பொதுவாக யோசிக்குமிடத்தில் பார்ப்பனர்களுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு தங்களை அறியாமல் பார்ப்பனியத்திற்கும் பார்ப்பன ஆதிக்கத்திற்கும் உழைக்கும் சாதனங்களா அல்லவா என்பதை நிதானித்து நடுநிலைமையில் இருந்து பார்த்தால் யாருக்கும் விளங்காமல் போகாது.*

*எனவே இப்படிப்பட்ட சைவத்தைப்பற்றியோ சமயத்தைப் பற்றியோ ஏதாவது எழுத நேரிடுவதால் "நாட்டின் ஷேமத்திற்கோ மக்களின் மோட்சத்திற்கோ" எவ்விதமான ஆபத்துக்கள் எப்படி நேரிட்டு விடும் என்பதைப்பற்றி விருப்பு வெறுப்பின்றி நிதானமாய் யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.*

**(பெரியார், 'குடிஅரசு' 7.10.1928)**

# பொய் பிரச்சாரம்: பெரியார் தந்த மறுப்பு

- *பறையன் என்று சொல்லக் கூடாது என்று ஆரம்பித்தவன் நான். காந்தியார் தீண்டாதவர்களுக்குத் தனியாகப் பள்ளிக்கூடம், தனியாகக் கோயில், தனியாகக் கிணறு வெட்டுவதற்காகக் காந்தி திலக் நிதியிலிருந்து ரூ.55,000 அனுப்பினார். அப்போது நான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவன். நான் இதை இதற்காக செலவிடாமல் அப்படியே வைத்துவிட்டேன். மற்ற மாகாணக்காரர்கள் எல்லாம் செலவழித்து தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனியாக கேணி, கோயில், பள்ளிக்கூடம் கட்டினார்கள். நான் காந்தியாருக்கு எழுதினேன். "நாம் அவர்களுக்கு இவை எல்லாம் தனியாகச் செய்து கொடுப்பதால் ஒருக்காலும் தீண்டாமை ஒழியாது. அதற்குப் பதில் பறையன் கோயில், பறையன் பள்ளிக்கூடம் என்று சொல்லி மக்கள் அதையும் ஒதுக்கி வைத்துவிடுவார்கள். இதை நான் விரும்பவில்லை. நம் மக்கள் தண்ணீர் எடுக்கும் கிணறுகளில் அவர்களும் எடுக்க வேண்டும். நம்மக்கள் படிக்கிற பள்ளிகளில் அவர்களையும் படிக்க அனுமதிக்க வேண்டும். நம்மக்கள் போகிற கோயில்களுக்கு அவர்களும் போக உரிமை வழங்க வேண்டும்" என்று எழுதினேன். அதற்கு அவர் அதுபோல செய்யமுடியாது என்று சொல்லி விட்டார்.*






- *நான் பறையன் என்று கேவலமாகச் சொன்னதாகத் தாழ்த்தப்பட்ட மக்களிடம் சொல்லியிருக்கின்றார்கள். நான் பலதடவை இந்தச் சொல்லைச் சொன்னாலும் அதை ஒழிப்பதற்காக சொன்னது தான். எலெக்ஷன் நேரத்திலே இப்படியெல்லாம் செய்வது சாதாரணம். எலெக்ஷன் போது "ராமசாமி நாயக்கர் பறைச்சி எல்லாம் ரவிக்கைப் போட்டுக் கொண்டார்கள் என்று தாழ்த்தப்பட்ட பெண்களைக் கேவலமாக சொன்னார்" என்று விளம்பர நோட்டீஸ்களெல்லாம் போட்டு தாழ்த்தப்பட்ட மக்களே அவர் ஆதரிக்கிற கட்சிக்கு ஓட்டு போடாதீர் என்று வால் போஸ்டர்கள் ஒட்டி இருக்கின்றார்கள். அதைக் கண்டு சிலர் என்னிடம் வந்து நீ எப்படிச் சொல்லலாம் என்று கேட்டார்கள். நான் சொன்னது உண்மைதான். நான் தாழ்த்தப்பட்ட பெண்கள் இதற்கு முன் ரவிக்கைப் போடக் கூடாது, போட்டால் துணியே போடக்கூடாது, அப்படி இருந்த சமுதாயம் கால மாறுபாட்டால் எப்படி ஆகி இருக்கின்றது. இன்றைக்கு ரவிக்கையில்லாமல் பார்க்கமுடியவில்லை என்று சொன்னேன். இதைக் கொண்டு அந்த இனமக்களை எனக்கு விரோதமாகத் தூண்டவும் நான் ஆதரிக்கின்ற கட்சிக்கு ஓட்டுப் போடாமல் செய்வதற்காகக் கிளப்பி விடப்பட்டதே ஆகும் என்பதை விளக்கியதும் அவர்கள் புரிந்து கொண்டனர்."*

**–11.12.1968** அன்று தி.மு.க. மேயர் வேலூர் நாராயணனுக்கு நடந்த பாராட்டு விழாவில், சென்னை- அயன்புரத்தில் பெரியார் ஆற்றிய சொற்பொழிவு **('விடுதலை' 15.12.1968)**



“புதைக்கப்பட்ட பிணங்களைத் தோண்டி எடுத்து முகர்ந்து பார்த்து குறை சொல்லும் போக்கு கட்டாயம் கைவிடப்பட வேண்டிய ஒன்றாகும். எவ்வித அரசியல் புரிதலும் அற்ற, ‘திடீர்’ தலைவர்கள், தலைகால் தெரியாமல் பிதற்றித் திரிவதைப் பற்றி நாம் கவலைப்படவில்லை. பூசிய சாயங்கள் அடுத்த மழையில் கரைந்ததும் உண்மை நிறம் வெளிப்பட்டு விடும்; வெளிப்பட்டுக் கொண்டும் இருக்கிறது. சுயநல எதிர்பார்ப்புகள், ஆசைகள் எதுவுமின்றி, இலட்சியத்துக்காக இழப்புகளைச் சகித்துக் கொண்டு இயங்கும் இயக்கங்களிடம் இவ்வகைப் போக்கு வேண்டாத ஒன்றே! எதிரிகளிடம் எய்ய வேண்டிய கணைகளைத் தோழமைகள் மீது எய்வது தேவைதானா?”

**- கொளத்தூர் மணி**

இந்நூலிருந்து